பூவை எஸ். ஆறுமுகம்



# அந்தித் தாமரை

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# அந்தித் தாமரை

பூவை. எஸ். ஆறுமுகம்

நாதன் பதிப்பகம்
புத்தகம் வெளியிடுவோர், விற்பனையாளர்
19-2வது மெயின் ரோடு, சென்னை-35.

வெளியீடு : 6
முதற் பதிப்பு: அக்டோபர், 1964.
உரிமை பதிப்பகத்தாருக்கே.
விலை ரூபாய் மூன்று
Soundara Printers, MADRAS-17.

# பதிப்புரை

உள்ளத்தைத் தொட்டு உணர்ச்சியைத் தூண்டி விடுபவைகள்தாம் சிறுகதைகள். கதைகளின் கரு அதாவது மையப்புள்ளி அமைவதிலும் அமைக்கப் படுவதிலும்தான் சிறு கதைகளின் ஜீவன் உருவாகிறது.

ஜீவனை உருவாக்குவது என்ற முறையிலே ஆசிரியர் பூவை. எஸ். ஆறுமுகம் கைதேர்ந்தவர். அதன் பாணியிலே தனக்கென ஒரு வழி அமைத்துக் கொண்டவர்.

அவருடைய கதைகளைப் படிக்கும்போது காணுகின்ற காட்சிகள் நம் சொந்த வாழ்க்கையிலே என்றோ ஒரு நாள் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் நிகழ்ந்து விட்டிருப்பது போன்ற ஒரு உணர்வு தட்டுவதுண்டு. அதுதான் அவரின் கதைகளுக்கான சிறப்பு.

அப்படிப்பட்ட கதைகளை வெளியிடுவதில் பெருமைப் படுகிறோம்.

அவருக்கு நன்றி.

—பதிப்பகத்தார்

## உள்ளே

1. அந்தித் தாமரை
2. அரிச்சந்திரன் பரம்பரை
3. பத்துப் பத்து மாதம்
4. தந்தையும் மகளும்
5. இதயத்தின் இதயம்
6. மனம்
7. வசந்தம் வந்தது
8. கண்ணகிச் சிலம்பு
9. செவ்வந்திப் பூச்சரம்
10. மனத்தவம்
11. அத்தை மகள்
12. தில்லைக்கண்
13. அம்மான்.

# அந்தித் தாமரை

சூடாமணி ஆடினுள். கஞ்சமலர்ப் பாதங்கள் 'ஜல், ஜல்' என்று சத்தமிட்டன. தாளக்கட்டும் நடன பாவங்களும் உயிர் உறவு கொண்டாடின. ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை ஆகியோர் ஒன்று கூடினர். அரங்க மேடை விண்ணில் பறந்தது.

"ஆஹா!" என்ருள் ருக்மிணி. புருவங்களின் கரையில் பனித் திவலைகள் வேலிகட்டி நின்றன.

"அம்மா!"

எதிர்த்து வந்தது குரல்.

சிலிர்த்தெழுந்தது அவள் பேதை மனம்.

"மணி!"

"அம்மா கனவு கினவு கண்டியா?"

"உம்..."

"என்ன கனவு அம்மா அது?"

"என் சூடா டான்ஸ் ஆடற மாதிரி கனவு."

"நிஜமாவா?"

"ஆமாம்."

"சரி, ரெட்டைச் சடை போட்டுப் பின்னிவிடம்மா; ஜல்தி, சீக்கிரம் ஆகட்டும். ஆண்டு விழாவுக்கு ரொம்ப

நேரமாயிடுச்சு; மறந்துடாம ஒரே ஒரு ரோஜப் பூவைச் சடையிலே செருகிப் பிடு, அம்மா.''

''உம்...''

பிறை நெற்றியைத் தழுவ ஓடி வந்த சுருள் கேசத்தை சூடாமணி நுனி விரலால் கோதிக் கொண்டிருந்தாள். ருக்மிணி குழற்கற்றையை இணை சேர்த்துக் கொண்டிருந்தாள். தந்தச் சீப்பு இடையில் தூது.

''அம்மா!''

''இதோ ஆயிடுச்சு, கண்ணே!''

''ஐயையோ, பத்தடிக்கப் போகுதே.''

''அவ்வளவுதான்.''

''ரோஜாப்பூ?''

''ஓ, வச்சிட்டேனே!''

''பொட்டு?''

''வச்சிட்டேன், சூடாமணி.''

எதிரிலிருந்த பெல்ஜியம் கண்ணாடிக்கு எவ்வளவு குறும்பு! தாயும் மகளும் சிரிப்பதை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறதே!

''மேக்கப் எப்படி, மணி?''

''பஹூத் அச்சா!''

''ஊஹூம், பஹூத் அச்சா ஹை!''

''சரி, சீக்கிரம் புடவை மாற்றிக் கொண்டு புறப்படு, அம்மா.''

''நான் எதற்கு, கண்ணே? நீ போய்ப் பரிசுகளை வாங்கிக் கொண்டுவா. அவற்றைப் பார்த்து நான் ஆனந்தப் படுகிறேன்.''

''இன்னிக்கு என் டான்ஸ் வேறே இருக்குதே...?''

"உன் டான்ஸைத்தான் நான் ஒவ்வொரு நிமிஷமும் பார்த்து ஆனந்தப் படுறேனேம்மா!"

"போ, அம்மா ஒரு ஜில்லா கலெக்டர் உன் மகளுக்குப் பரிசு வழங்கப் போருர். அந்தக் காட்சியைக் கண் குளிரப் பார்க்க உனக்கு ஆசை வரல்லியா? நீ வந்தால் தான் நான் இப்போ ஸ்கூலுக்குப் போவேணுக்கும்."

"கோவிச்சுக்காதே, சூடா. நானும் இதோ உன் கூட வந்திடுறேன்."

பெதும்பை மனம் சிரித்தது.

"பேஷ், அம்மான்ன அம்மாதான்! அம்மா, இன்றைக்காகிலும் சிரிக்க மாட்டாயா?"

புயல் மத்தியில் பூந்தென்றல் பிறந்தது.

* * *

பாவை விளக்கில் ஒளிச் சுடர் ஏற்றம் புரிந்தது.

ஊர் பையப் பைய அடங்கிக் கொண்டிருந்தது.

ருக்மிணி சுரந்திருந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்; பிறகு அவள் திருஷ்டி மகள் மீது சென்றது. சூடாமணி அமைதியை அணைத்துக் கொண்டு உறக்கம் கொண்டிருந்தாள். தாயின் மனத்தில் அடித்த புயலை மகள் எப்படி அறிவாள்?

புகைப்படம் பிடித்தாற் போல இன்னும் அந்தக் காட்சி அவள் நெஞ்சில் தடம் பதிந்திருந்தது. குழந்தைக்குக் கலெக்டர் பரிசுகளை வழங்கினுர். அத்துடன் தன் அன்புப் பரிசிலாகத் தங்கப் பாவைவிளக்கையும் அளித்தார். கடைசியில், "சூடாமணியைக் குழந்தையாகப் பெறப் பாக்கியம் செய்த தாய் தந்தையருக்கு என் பாராட்டுதல்கள்...!" என்ற அவருடைய புகழுரை அவளுள் இன்னமும் எதிரொலிக்கின்றது.

ஆனால் அந்தப் புயல்...?

பூ மனசைப் பொங்குமாங் கடலாகச் செய்து விட்ட புயல் அது; பெண் மனம் கொண்ட வைராக்கியத்தின் விளைவில் புறப்பட்ட பயங்கரப் புயல் அது; கண்ணீர் ஒன்றை மட்டுமே தோழியாக வாய்க்கப் பெற்றவளாக அவளை ஆக்கிவிட்ட புயல் அது!

* * *

'அத்தானுக்குக் கல்யாணப் பரிசாக ஜலா அளித்த பாவை விளக்கை, தன் உரிமைப் பரிசாக என் மகளுக்கு — தன் மகளுக்கு 'அவர்' திரும்பக் கொடுத்திருக்கிறார். எதிர்பாராத இந்தச் சந்தர்ப்பம்கூடத் தெய்வச் செயல் என்றுதான் அர்த்தமா? தெய்வமே, நீ எங்கிருக்கிறாய்?...'

ருக்மிணியின் விழிகள் பன்னிரண்டு கண்ணீர் முத்துகளைச் சிந்தின. அவற்றிற்கு என்னதான் மாயமோ? அந்த ஜில்லா கலெக்டர், தாசில்தார் தண்டபாணியாகத் தோற்றம் தந்தார்.

தண்டபாணியைத் தன் பதியாகக் கொண்ட ருக்மிணிக்கு ஆனந்தம் பிடிபடவில்லை. கண் நிறைந்த கணவன்; கை நிறைந்த பொன்; எதிர் காலத்தில் பதவியை உயர்த்திக் கொடுக்கக் கூடிய உத்தியோகம். புன்னகையும் புது நிலவுமாக நாட்கள் ஓடின. அப்போதுதான் கேள்வி முறையின்றி அவளுடைய மனச் சாளரத்தினூடே தொப்பென்று குதித்து விட்டாள் அந்தப் பெண். ஜலா என்பது பெயர். அதே ஆபீஸில் டைப்பிஸ்ட் அவள். அத்துடன் தண்டபாணியின் கல்லூரிச் சிநேகிதி என்ற ஒட்டுறவு. ஜலாவும் தண்டபாணியும் ஆதியில் தம்பதிகளாக எண்ணினராம். பெற்

ரேரின் கட்டுப்பாடு குறுக்கிடவே, தண்டபாணி ருக்மிணியைக் கைத்தலம் பற்றினும். தங்கத்தாலான பாவைவிளக்கு பரிசாக வந்தது ஜலாவின் சூழலிலிருந்து. அதுவே தண்டபாணிக்குப் போதை ஊட்டியது. அங்கு ஜலா காணப்பட்டாள். முதல் பூ மடல விழ வேளை பார்த்திருக்கும் நல்ல சேதியைச் சொல்ல ஓடோடி வந்தாள் ருக்மிணி.

"ருக்மிணி.

என்னை மறந்து விடு, மாதம் தவருமல் உனக்குச் செலவுக்குப் பணம் கிடைக்கும்.

தண்டபாணி."

ஜலாவின் போதைக் கண் வீச்சில் தன் கணவன் அடக்கமான கதையைச் சொன்னது மேற்படி கடிதம்.

குழந்தை சூடாமணி மாத்திரம் இல்லை யென்ருல், இந்நேரம் ருக்மிணி மாண்ட இடம் புல் மண்டிப் போயிருக்கும்.

கணவனிடமிருந்து பணம் வந்தது; திருப்பி விட்டாள் மனைவி. அவளுடைய சங்கீத ஞானம் அவளுக்கும் குழந்தைக்கும் படி அளந்தது.

நாட்கள் ஓடின.

காலம் குழந்தைக்குப் பேசக் கற்றுக் கொடுத்தது!

ஒரு நாள் சூடாமணி, "அம்மா" என்று கூப்பாடு போட்ட வண்ணம் ஓடிவந்து, "அம்மா, எங்கே அம்மா நம்ப அப்பாவை மட்டும் இத்தனை நாளாக் காணல்லே...?" என்று திக்கித் திக்கிக் கேட்டாள்.

இதய ஓட்டத்தை யாரோ நிறுத்திவிட்ட மாதிரி உணரலாஞள் ருக்மிணி. பேசத் தெரியவில்லை ; ஆனலும் பேசினுள் : "மணி, உன் அப்பா வந்திடுவார், கண்ணே!"

ஜோடிக் குழந்தைகள் தங்கள் தகப்பன்மார்கள் தந்த பரிசுகளைக் கொண்டு வந்து காட்டின சூடாவிடம். சூடாவின் குழந்தை உள்ளம் குமுறியிருக்க வேண்டும்.

பின்னும் சில மாதங்கள் கழித்து ஒருநாள், "அம்மா, எப்போ என் அப்பா வருவாராம்?..." என்று கேட்டாள் சூடா.

வேறு வழியில்லை. தாய் நடந்த கதையை மகளிடம் விவரித்தாள்.

"அம்மா, அந்த அப்பாவின்—ஊஹூம்,நம்ப வைரியின் படம் ஏதாச்சும் இருந்தாக் கொடு. ஒரு நாள் இல்லாட்டி ஒருநாள் அவனை நேரிலே கண்டால் நல்ல பாடம் சொல்லித் தருவேன்..." என்று சபதம் செய்தாள் குழந்தை சூடாமணி.

இதற்குப் பயந்து, தன் புருஷனுடைய போட்டோவைக்கூட ஒளித்து வைத்து விட்டாள் ருக்மிணி.

"சூடா, உன் அப்பா எனக்காக இல்லாவிட்டாலும் உனக்காக வேனும் என்றுவது ஒருநாள் கட்டாயம் நம் வீடு தேடி வருவார். கண்ணே!" என்ற தாயின் சொற்கள் அந்தக் குழந்தை உள்ளத்திலே எந்தவித மாற்றத்தையும் விளைவித்தால்தானே...?

**"பிரிய ருக்மிணி,**

உன் வைராக்கியம் என்னைக் கிறுக்காக்கி விடும் போலிருக்கிறது. பணத்தைக் கூடப் பெற்றுக் கொள்ளக் கூடாதா? என் தவறை மன்னித்துப் பதில் போடு. உன்னையும் குழந்தையையும் அழைத்துப் போக வருகிறேன்.

**தண்டபாணி"**

பன்னிரண்டு ஆண்டுகளாக அல்லும் பகலும் தன்னுள்ளே குமுறிக் கொந்தளித்துப் புரண்ட எரிமலையைக் கேவலம், இந்த நாலு வரிக் கடிதம் அணைத்துவிட முடியுமா?

*　　　*　　　*

"சூடா, கண்ணே சூடா" என்று விநாடிக்கு ஆயிரந் தடவை அலட்டினாள் ருக்மிணி.

குழந்தையின் மேனியில் நெருப்பைக் கட்டி வைத்தாற் போல அப்படிக் கொதித்தது.

பெற்ற மனத்தில் தீ பற்றி எரிந்தது.

டாக்டர் வந்தார். நோய்க்குப் பெயர் சூட்டினார்— 'டபிள் நிமோனியா', பணம் விழுங்கும் நோய். அத்தனை பணத்துக்கு எங்கே போவாள், பாவம்?

பரிசாக வந்த தங்கப் பாவைவிளக்கின் நினைவு வந்தது. அதை விற்றுப் பணமாக்கிக் கொள்ள மகள் யோசனை சொன்னாள். அப்போது தாய்க்கு மனமில்லை. இப்போது அதைத் தவிர வேறு உபாயம் இல்லை. 'விசுக்'கென்று உள் அறைக்கு ஓடினாள். அவள் துடிப்பு நின்று விட்டது. பாவைவிளக்கு இருந்த இடத்தில் சூன்யம் கை கொட்டிச் சிரித்தது.

அவள் கண்கள் அழுதன.

டாக்டர் எழுதிக் கொடுத்திருந்த ஊசி மருந்தை வாங்கப் பணம் வேண்டுமே! பணம் அடுத்த வீட்டுத் தாத்தா உருவில் வலிய வந்தது. "தங்கச்சி, இதோ நூறு ரூபாய் இருக்குது; வைத்தியச் செலவுக்கு இருக்கட்டும்" என்றார்.

'ஸ்டெதாஸ் கோப்' விஜயத்தின் எண்ணிக்கை நீண்டது; முடிந்தது.

சூடாவுக்கு நல்ல உயிர் மீண்டது.

ருக்குவுக்கு நல்லமூச்சு மீண்டது.

வாசலில் 'கெடிலாக்' வந்து நின்றது. ஜில்லா கலெக்டர் தண்டபாணியின் உருவம் தெரிந்தது.

சூடாவுக்குக் கொள்ளை மகிழ்ச்சி. அன்றைக்குப் பரிசு வாங்குகையில் 'சல் யூட்' செய்தது போலவே இப் போதும் செய்து வணக்கம் தெரிவித்தாள்.

"அம்மா, கலெக்டர் ஸார் வந்திருக்காங்க; நம்ப வீடு தேடி வந்திருக்காங்க."

ருக்மிணி வந்தாள். தண்டபாணியைப் பார்வை யிட்டாள்.

கலெக்டரின் சிரம் தாழ்ந்தது.

"அம்மா, என்னம்மா சும்மா நிக்கிறே? போய் காப்பி கொண்டாம்மா, கலெக்டர் ஐயாவுக்கு. சொல்ல மறந்துட்டேன். எனக்கு மேலுக்கு முடியாமலிருந் தன்னிக்கு மத்தியானம் இவங்க என்னை வழியிலே கண் டதும் காரை நிறுத்தச் சொல்லி, பழங்களெல்லாம் கொடுத்தாங்க... ஒரு நாளைக்கு நம்ப வீட்டுக்கு வர்ற தாகக்கூடச் சொன்னாங்க... இவங்க மாதிரியே எல் லாப் பெரிய மனிதர்களும், சொன்ன சொல்லைக் காப் பாற்றுவாங்களான்னு எனக்குத் தோணல்லே. அம்மா, காப்பி கொண்டா...போ..."

காப்பி வந்தது.

"உம் சாப்பிடுங்க, ஸார். நாங்க ஏழைங்க. இது தான் முடிஞ்சது. எனக்கு வேறே காய்ச்சல். என்னாலே அம்மாவுக்கு ரொம்ப சிரமம்...எங்க அப்பா இருந் திருந்தா இந்நேரம் நான்கூட உங்கமாதிரி ஒரு காரிலே போவேனுக்கும்..."

"அழாதே, சூடா. உனக்கு ஒரு நல்ல சேதி சொல்லப் போறேன்" என்ருர் கலெக்டர் ஸார்.

"எனக்கு கார் கீர் வாங்கித் தரப்போறீங்களா?"

"உம்..."

"கார் வேண்டாம்!"

"வேறே?"

"என் அப்பாவை என் கிட்டே கொண்டு வந்து சேர்த்திடுறீங்களா?..."

"ஓ..."

"எப்போ?"

"இதோ, இப்பவே!"

"மெய்யாவா?"

"ஆமா!"

"எங்கே?..."

"சூடா, நான்தான் உன் அப்பா, கண்ணே! இந்த கலெக்டர் ஸார்தான் உன் சொந்தத் தகப்பன்...!"

"அப்படியா?...நிறுத்து, காப்பியைக் குடிக்காதே..." என்று உத்தரவிட்டாள் சூடா.

காப்பித் தம்பளர் நழுவியது.

"சூடா...அப்படிச் சொல்லாதே..." என்று குறுக்கிட்டாள் ருக்மிணி.

ஆனல் மறுகணம், அருகிருந்த மருந்துப் புட்டி ஒன்றை எடுத்துக் கலெக்டர் மீது வீசினுள் சூடாமணி.

தண்டபாணியின் நெற்றி மேட்டில் ரத்தக் குளம் தோன்றியது.

"ஐயோ!" என்று சொல்லித் தன் கணவனே அண்டி, ரத்தத்தைத் துடைக்கப் போனுள் ருக்மிணி.

"நில், அம்மா!"—மீண்டும் தடை உத்தரவு பிறந்தது.

"ஏனம்மா கண் கலங்குகிறுய்? இந்தப் பன்னெண்டு வருஷமா நீ வடிச்ச கண்ணீருக்குக்கூட இரக்கம் காட்டாத இவருக்கு இப்போ நீ ஏம்மா அனுதாபம் காட்ட வேணும்? என் அப்பாவாம் அப்பா! இதயமில் லாத இந்த அப்பா எனக்கு வேண்டவே வேண்டாம்!... அம்மா, நீ எனக்காகப் பட்டபாடுக்கு நான் என் கடமையைக் கட்டாயம் செஞ்சிடுறேன்...அப்போ உடம்புக்கு முடியாம இருந்தப்போ, நீ சம்மதிக்க மாட் டாயேன்னுதான் நானே அடுத்த வீட்டுத் தாத்தாவைக் கூப்பிட்டு பாவைவிளக்கை ரகசியமா விற்றுவரச் சொன்னேன். இப்போ அது இருந்தா, அதையும் இவர் முஞ்சியிலேயே வீசி எறிஞ்சிருப்பேன்...! உம்... முதலில் அவரைப் போகச் சொல், அம்மா. இல்லேன்னு நான் இப்பவே வீட்டை விட்டுப் போயிடுறேன்...!"

குழந்தை உள்ளம் பேசும் பேச்சுக்களா இவை?

தண்டபாணி கண்ணீரைத் துடைத்துக் கொள்ள வில்லே. மெல்ல எழுந்தார். குழந்தையை அண்டினுர்.

"சூடா, நான் உன்கிட்டே சொன்னது பொய். பச்சைப் பொய். நான் உன் அப்பா இல்லே. நான் உன் அப்பாவுக்குத் தூரத்துச் சொந்தம். இவ்வளவு நாளும் வடக்கே இருந்தேன். உன் அப்பா செஞ்ச அநியாயத் தைத் தெரிஞ்சு, உன்னேயும் உன் அம்மாவையும் பார்த்து விட்டுப் போகத்தான் இப்போ வந்தேன்...அவ் வளவுதான். நான் சொன்ன பொய்யையே நிஜம்னு நம்பி இவ்வளவு ஆத்திரப்பட்ட நீ, உன் அப்பாவை

நேரில் கண்டால் கொன்று போட்டுடுவே போலி ருக்கே...?''

''நிஜமா நீங்க என் அப்பா இல்லியா?''

''இல்லே.''

''கடவுளுக்குப் பொதுவாய்' உண்மையா?''

''ஆமாம்...''

''உண்மையா, அம்மா?''

''ஆமாம்... கண்ணே!''

''ஐயையோ, பாவம்! என்னை மன்னிச்சிடுங்க கலெக்டர் ஸார்! இதோ நொடியிலே போய் டாக்டரை அழைச்சு வர்றேன்...அம்மா, அவருக்கு காப்பி கொடு...!''

சூடாமணி ஓடிவிட்டாள்.

கலெக்டர் தண்டபாணி சிறு குழந்தை போலச் செருமிக்கொண்டே பேசினார்: ''ருக்மிணி, நீயாவது என்னை மன்னித்துவிடு. நம் வாழ்வில் இனியாவது ஆனந்தத் திருப்பம் வழிவிடுமென்று ஆசையோடு வந்தேன். குழந்தை சூடாவை அன்புடன் அணைத்து முத்தமிட ஓடோடி வந்தேன். இங்கே குழந்தை எரிமலை யாகி விட்டதே! நான் கொடுத்து வைக்காத பாவி. உன்னை இத்தனை காலம் 'தள்ளி' வைத்ததற்குத் தண் டனை கிடைத்து விட்டது. அங்கே ஜலாவை இழந் தேன். இங்கு என் குழந்தை என்னை 'அப்பா' என்று கூப்பிடக் கொடுத்து வைக்காத பாவியாகி விட்டேன். குழந்தையின் முன்னிலையில் உன்னை 'என் மனைவி' என்று அழைக்கும் உரிமையையும் இழந்து விட்டேன். மகா பாவி. ருக்மிணி, நம் குழந்தையின் முன்னிலையில்— அதன் ஆத்திரம் மாறும்வரை—நாம் இனி 'கணவன்—

மனைவி'யாகக் காட்சியளிக்க முடியாது. உதய சூரிய னின் வரவுக்குக் காத்திருக்கும் அந்திக் கமலத்தின் நிலையில் இருக்கிறேன் நான். என் விதி அப்படி. என் விடிவு-நம் விடிவு, நம் குழந்தையின் மனமாற்றத்தில் இருக்கிறது. தெய்வமே, என் குழந்தையை எனக்குக் கொடு!...''

சூடாமணியின் கண்களிலிருந்து கண்ணீர்த் துளி கள் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று சரம்வாரி யாக உதிர்ந்து கொண்டிருந்தன.

"பாவம், கலெக்டர் ஸார்!'' என்று சொல்லியவாறு, "ஸார், ரொம்ப வலிக்குதுங்களா?'' என்று கேட்டாள் சூடா.

"ஊஹூம், அதெல்லாம் ஒன்றும் இல்லை, சூடா'' என்றார் தண்டபாணி. வார்த்தைகளில் ஒட்டிக்கொள் ளத் துடித்த வேதனைக்குமைச்சலை நெட்டித் தள்ளி விட்டு, புன்னகையை இழையோடச் செய்தார்.

"நிஜமாவா?'' என்று மறுபடியும் துருவித் துருவிக் கேட்டாள் குழந்தை.

"நிஜமாத்தான், மணி!'' என்று சொல்லிச் சிரித்தார் அவர்.

"ஆமாம், சூடா. வலி தோன்றாமலிருக்கத்தானே நான் இத்தனை நாழி மருந்து போட்டேன்'' என்று டாக்டர் சுதர்சனம் வேறு ஆதாரம் காட்டிப் பேசினார்.

"அம்மா, நான் கலெக்டர் ஐயா மேலே மருந்துச் சீசாவை வீசினது என் தப்புத்தான். கோவிச்சுக்க மாட்டியே?'' என்று தன் தாயிடம் அடுத்த கேள்வியைக் கேட்டாள் சூடாமணி.

ருக்மிணிக்குப் பேச நா எழவில்லை. வேதனை அழுகை வடிவெடுத்துத் தொண்டைக் குழிக்குள் வழி மறைத்து நின்றது.

மகள் தாயை அண்டினாள்.

"சீ, போ, போ..." என்று எட்டிப் பிடித்துத் தள்ளினாள் ருக்மிணி.

கண் பார்வை குறிப்புக் காட்டும் தொலைவில் சூடா போய் விழுந்தாள்.

கலெக்டர் தண்டபாணி ஓடோடிச் சென்று, சூடாவைத் தூக்கித் தன் முகத்தோடு அணைத்துக் கொண்டார். அவருடைய வலது கை சூடாவின் கன்னங்களைத் தடவிக் கொண்டிருந்தது. இடது கை நுனி விரலுக்கு சுரந்தோடி வந்த கண்ணீருக்குப் பதில் சொல்லப் பொழுது சரியாகயிருந்தது.

"மணி, எனக்குத் துளிகூட வலி இல்லையே. பின், நீ ஏன் உன் மனசை வீணு அலட்டிக்கிறே? நான்தானே தப்புச் செஞ்சேன்—நீ இல்லையே?...உன் அம்மா உன்னைக் கோவிச்சுக்க மாட்டாள்...சரி, முகத்தைத் துடைச்சிட்டு, வேறே டிரஸ் பண்ணிக்கொள். நாம் ரெண்டு பேரும் நம்ப காரிலேயே சினிமாப் பார்க்கப் போவோம்" என்றார் தண்டபாணி.

"அது சரி, அம்மாவுக்கு என் மேல் ஆத்திரம் இல்லையானு, பின்னே ஏன் அழறுங்க?"

"...இப்போ உன்னைப் பிடிச்சுத் தள்ளினதை நினைச்சு..."

"ஸார், நான் உங்ககிட்டே ஒரு சத்தியம் வாங்க வேணும்னு இருந்தேன். எங்க அப்பாவை உங்களுக்குத் தெரியுமா?"

"ஓ, தெரியுமே!"

"அப்படியானு ரொம்ப நல்லதாப் போச்சு. அவரை எங்கு கண்டாலும், எப்போக் கண்டாலும் கையோட என்கிட்டக்கொண்டு வந்து சேர்த்துப் பிடுங்க. நீங்க தான் கலெக்டர் ஸாராச்சே. உங்களுக்குத்தான் போலீஸ்காரங்க வேறே கையோடே எப்பவும் இருப் பாங்களாமே...? ஸார், சத்தியமா நீங்க இந்த உதவி யைச் செஞ்சுத்தான் ஆகணும். எங்க அம்மா இத்தனை காலமா வடிச்ச கண்ணீருக்கு அப்பத்தான் பலன் கிடைக்கும். அப்பாவாம்-அப்பா. வரட்டும்...!" என்று வீறுகொண்டு பேசினுள் சூடாமணி. மறுபடியும் எதையோ நினைவு கூர்ந்ததுபோல, "நிச்சயமாச் செய் வீங்களா?" என்று கேட்டாள்.

"சாமி பேரிலே ஆணையா உங்க அப்பாவை வெகு சீக்கிரம் உன் கையிலே ஒப்படைக்கிறேன், மணி."

"சபாஷ். கலெக்டர் ஸார்ன்னு கலெக்டர் ஸார்தான். என் அப்பாவுக்கு நான் பாடம் கற்பிச்சாத்தான் நான் சிரிப்பேன்; எங்க அம்மா சிரிக்கும்!"

"சரி, சினிமாவுக்கு நேரமாயிடுச்சே? வேறே பாவாடை, சட்டை உடுத்திக்கிட்டு ஓடி வா."

"காரிலேதானே நாம் போகணும்?"

"ஆமாம்."

"நான் திரும்பி எப்படி வருவேனும்?"

"நானே உன்னைக் காரிலே கொண்டுவந்து விடச் சொல்றேன் டிரைவர் கிட்டே."

"இப்பத்தான் ஞாபகம் வருது; உங்க வீடு எங்கே இருக்குது?"

"மலைக் கோட்டையிலே,"

"ஓ, அங்கேயா? நான்கூட அந்தப் பக்கம் வந்திருக்கேன். எங்க அம்மா அங்கே ஒரு பெண்ணுக்குப் பாட்டுச் சொல்லித் தந்தாங்க. அதுசரி, உங்க பெண் சாதி அங்கேதானே இருக்காங்க? வரப்போ அவங்களை யும் கூட்டிவரக் கூடாது?...அம்மாவுக்கும் பழக்க மாகுமே...? ஊஹும், இப்போ கூட்டிவராதது நல்ல தாப் போச்சு. நான் உங்க முகத்திலே சீசாவை வீசின தைக் கண்டா அவங்க எவ்வளவு ஆத்திரப்படுவாங்க எம்பேரிலே. இன்னொரு நாளைக்கு அவங்களைக் கூட்டி வர நானே வர்றேன். உங்களுக்கு என் மாதிரி பாப்பா இருக்குதா?..."

"பாப்பா! என் மனைவிக்கு உடம்பு சரியில்லை. பட்டணத்திலே அவங்க பிறந்த வீட்டிலே இருக்கிறாள். உன் மாதிரி பாப்பாவை எனக்குக் கடவுள் இன்னும் கொடுக்கவில்லை, சூடா. பகவானுக்கு என்னிக்குத்தான் மனசு இரங்கி உன் போல ஒரு கெட்டிக்கார மகளை எனக்குத் தருவாரோ?..."

"நிச்சயம் உங்களுக்கு என் போலவே ஒரு பெண் பிறக்கும், ஸார். நல்லவங்களைச் சோதிக்கிறதிலே ஆண்டவனுக்கு ஒரு சந்தோஷமாமே-சோதனையிலே வெற்றி அடைஞ்சிட்டா அவங்களுக்கு ரொம்ப ரொம்ப நல்லது செய்வாராமே—அம்மா சொல்லுவாங்க அடிக் கடி."

தண்டபாணிக்கு வாய் விட்டுச் சிரிக்க மட்டுந்தான் தெரிந்தது—சூடாமணியின் முன்னிலையில்.

குழந்தை கடவுளின் மறுபதிப்பு என்கிறார்களே...!

அன்று பள்ளிக்கூடத்து விழாவில் நடனமாடிய உடையுடன் தோன்றினாள் சூடா. கலங்கிக்கிடந்த

அவருடைய விழிவட்டத்தில் அவள் இரட்டை இரட்டையாகத் தோன்றினாள்.

முதலில் அவர் ஏறிக் கொண்டு அப்புறம் சூடாவின் கைகளைப் பிடித்து ஆசனத்தில் அமர்த்தினார்.

"போய் வருகிறேன் ருக்மிணி" என்று விடை சொல்லிக் கொண்டார் தண்டபாணி.

வாசலில் ருக்மிணி ஒதுங்கி நின்றாள், தலையை அசைத்தாள்.

"அம்மாவும் நம்மோட...ஊஹூம், வேண்டாம். அவங்க வேறே ஆட்களோடே இப்படியெல்லாம் வர மாட்டாங்க. ஆமா, எங்க அம்மா உங்களுக்கு என்ன சொந்தம்...?"

"தூரத்து உறவு. ஒன்றுவிட்ட மாமா பெண்."

"ஓ, அ ப் ப டி ங் க ளா?...அம்மா...அம்மா...நான் போயிட்டு வர்றேன்...போயிட்டு வர்றேம்மா..."

"போயிட்டு வா, கண்ணே!"

டிரைவரின் தலைக்குமேல் பொருத்தப் பட்டிருந்த பட்டைக் கண்ணாடியில் சூடா தன் உருவத்தை அழகு பார்த்தாள். அவளைத் திரும்பிப் பார்த்த தண்டபாணியின் நெற்றியில் போடப்பட்டிருந்த 'பாண்டேஜ்' தெரிந்தது.

"இப்போது, வலி இல்லையே, ஸார்!" என்று கேட்டு விட்டு, அவருடைய நெற்றிமீது தன் பிஞ்சுவிரல்களால் இதமுறத் தடவிக் கொடுத்தாள் சூடாமணி.

கலெக்டர் தண்டபாணி ஊர் பேர் தெரியாத ஓர் உலகத்திலே பைத்தியமாக அலைந்து தன் மகளைத் தேடிக் கொண்டிருந்தார்.

தீழல் மீது நிற்பது போலிருந்தது ருக்மிணிக்கு திக்கெட்டும் நோக்கினாள். எங்கும் 'புதிர், புதிர்!' என்று எதிரொலித்தன.

புதிர்!—ருக்மிணியா? இல்லை, தண்டபாணியா? இல்லை, சூடாமணியா?

புதிரே, பதில் சொல்!

வாழ்க்கையே, பதில் சொல்!

விதியே, பதில் சொல்!

இமை வட்டங்களை அடித்தளமாக்கி, இமயமலை அரியாசனம் வகித்திருப்பது போல அத்துணை வலி எடுத்தது. அவள் அழுதாள். மடிமீது தவழ்ந்து கிடந்த அந்தப் புகைப்படத்தை மீண்டும் எடுத்தாள். அந்தப் படத்தில் அவளும் அவள் கணவர் தண்டபாணியும் மாலைகள் மந்தகாசம் புரிய மணக்கோலத்தில் காணப்பட்டார்கள். 'உயிரும் உடலும் போல நீங்கள் இருவரும் பல்லூழி வாழ்க!' என்று அனுபவ முதிர்ந்த வயோதிகர்கள் வழங்கின நல்லாசிச் சொற்கள், இப்போது அவள் காதுகளில் எதிரொலித்தன. கனவு கண்டாள். அவள்வரை எல்லாமே பகற் கனவு-உருப்படாத பகற் கனவு.

கடந்த பன்னிரண்டு வருஷங்களை இடைவெளியாக்கி விட்டு, கணவன்-மனைவி என்ற பந்தத்தை மாத்திரம் இணை சேர்த்துக் கொடுத்த அத்தனை கடிதங்களையும் கண்ணோட்டம் விட்டாள்.

இறந்த காலத்துச் சம்பவங்களுக்கு நிகழ்கால உரிமை வழங்கப்பட்டது. ஏன் தெரியுமா?-ருக்மிணிக்கு இன்னும் பைத்தியம் பிடிக்காதிருக்கிறதே யென்று தான்!

"அம்மா, கலெக்டர் ஸார் ரொம்ப—ஊஹூம் ரொம்ப ரொம்ப நல்லவர். அவர் என் பேரிலே எவ்வளவு பிரியம் வச்சிருக்கார் தெரியுமா? நேற்றைக்கு படம் பார்த்திட்டு வந்ததும், அவர் பங்களாவுக்கு இட்டுக் கிட்டுப் போனுர். சமையல்காரன் பெரிய விருந்தே வச்சுப்பிட்டான். என்னை அங்கேயே ராத்திரிக்குத் தங்கச் சொன்னுர். நான் இல்லாம அம்மாவுக்குத் தூக்கம் வராதுன்னு சொன்னதும், அவரே என்னைக் காரிலே கொண்டாந்து விட்டார். அவர் என்னைப் பெரிய படிப்பு வரைக்கூட படிக்க வைக்கப் போருராம். அம்மா, கடவுள் நம்ப பேரிலே கொஞ்சமாச்சும் கருணை வச்சிருக்கணும். இல்லாப்போனு, இத்தனை நாள் கழித்து நமக்கு உள்ள இந்த சொந்தக்காரரையாச்சும் நம்ப கண்ணிலே காட்டியிருப்பாராக்கும்?... ஆமா, என்னைக் கண்டதும் ஏம்மா அப்படி அவருக்குக் கண்ணெல்லாம் கலங்கிப் போகுது? பாவம், என்னைப்போலே அவருக் கும் ஒரு பாப்பாவைக் கடவுள் கொடுத்துட்டா அவர் மனசு சந்தோஷப்படுமில்லையா? அவர் மனைவிகூட இன்னும் ரெண்டு மாசத்திலே வந்துடுவாங்களாம். நம்ப ரெண்டு பேரும்போய் அவங்களைக் கூட்டி வந்து ஒரு விருந்து பண்ணிப் போடணும். கலெக்டர் ஸாரை நாம் மறக்கவே முடியாது! பார்த்தியா, மறந்துப் புட்டேன். நான் விற்ற பாவை விளக்கை எப்படியோ துப்புக்கேட்டு அவரே பணம் கொடுத்துத் திருப்பி என்கிட்டேயே தந்துவிட்டார். இது கைராசி விளக்கு..." என்று மூச்சுக்கூட விடாமல் சொல்லி முடித்துவிட் டாள் சூடாமணி—அன்று இரவில்.

விதரணை புரியாத பெரியவர்கள் மாதிரி ஒவ்வொரு சொல்லுக்கும் அர்த்தம் வைத்துப் பேசிய தன் மகளின் பேச்சு ஒவ்வொன்றும் ரம்பமாக உருக்கொண்டு

அவளுடைய உயிர் நாடியைத் துண்டித்துக்கொண்டிருந்தது. சித்திரவதை—நரக வேதனை—அம்மம்ம...

ருக்மிணி மண்டையில் அடித்துக்கொண்டாள். தலைமயிரைப் பிய்த்துக் கொண்டாள். திருச்சியில் இந்த நிசியில் அவளுக்கு மட்டுந்தான் இப்படிப்பட்ட தலைவிதியா?

சூடா படுக்கையில் புரண்டு படுக்கும் அரவம் கேட்கவே, விசுக்கென்று அந்தப் போட்டோவை முதலில் டிரங்குப் பெட்டிக்கு அடியில் திணித்தாள். பிறகு அக்கடிதங்களையும் விசிறிப் போட்டாள்.

அன்றொரு நாள், அவள் தன் 'கதை'யைத் தன் மகளிடம் சொன்னபோது, "அம்மா, அந்த அப்பாவின் —இல்லை, நம் வைரியன் படம் ஏதாச்சும் இருந்தாக் கொடு. ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள் நேரிலே கண்டால் நல்ல பாடம் சொல்லித் தந்திடுவேன்..." என்று சபதம் செய்த நிகழ்ச்சி அவள் மனக் கண்ணில் படம் காட்டிற்று.

ஒரு நாள் ருக்மிணியின் கணவன் கலெக்டர் தண்டபாணியாக ஆவலை அணைத்துக் கொண்டு, கனவுகளுக்கு வாழ்வு கொடுக்கும் ஆதுரத்துடன் அவளைத் தேடி வந்தாரே! "சூடா, நான்தான் உன் அப்பா, கண்ணே! இந்தக் கலெக்டர் ஸார்தான் உன் சொந்தத் தகப்பன்...!" என்று அவர் உண்மையைச் சொன்ன போது, குழந்தை சூடாமணி வெறிகொண்டு, மருந்துச் சீசாவை அவர்மீது வீசிய 'நினைவு நாளை' ருக்மிணி எப்படி மறப்பாள்?

தன் சொந்தக் கணவனின் நெற்றி மேட்டில் ரத்தம் கசிந்ததைக்கண்டு அவள் நெஞ்சில் ரத்தம் ஊற்றெடுத்ததை யார் அறிவார்கள்? யார் அறிந்தென்ன? சூடா

வன்றோ அறியவேண்டும்...? கலெக்டருக்குக் குழந்தை மனம் தலைகீழ்ப் பாடமா? "சூடா, நான் உன்கிட்டே சொன்னது பொய். நான் உன் அப்பா இல்லை. உன் அப்பாவுக்குத் தூரத்துச் சொந்தம்" என்று 'தப்பித்துக்கொண்ட' தந்திரத்தில் விதி என்ற சொல் அல்லவா கைகொட்டிச் சிரித்தது...!

தன் கணவன் தன்னினின்றும் வெகுதூரம் பிரிந்துவிட்டதை—பிரிக்கப்பட்டுவிட்டதை நினைத்த ருக்மிணிக்கு 'சாவு' ஒன்றுதான் ஆறுதலாகப்பட்டது. ஆனால், அப்பொழுதும் அவளுக்கு மகள் நினைவுதான் குறுக்கே விழுந்தது.

"ருக்மிணி, என் குழந்தை என்னை அப்பா என்று கூப்பிடக் கொடுத்து வைக்காத பாவியாகிவிட்டேன். நம் குழந்தையின் முன் உன்னை என் மனைவி என்று அழைக்கும் உரிமையையும் இழந்துவிட்டேன், பாவி..." என்று விம்மியபடி அவர் சொன்ன சொற்கள் 'டேப் ரிகார்ட்' போல இன்னமும் அவள் நெஞ்சில், நினைவில் எதிரொலிக்கின்றனவே!

ருக்மிணி அம்பிகையை நாடி, "தாயே, என் குழந்தை சூடாவின் மனசை மாற்று. என் கணவரை எனக்குத் தந்துவிடு...!" என்று பிரார்த்தித்தாள்.

**தீ** நாக்குகள் ரசாயன மாற்றம் செய்து காட்டிய சாம்பர்த் துகள்கள், இமைப் போதிற்குள் தண்டபாணியாக உருவெடுத்தன.

ருக்மிணி செவி மடுத்தாள்:

"அன்பே,

எழுத்துக்கு எழுத்து உரிமையைத் தோய்த்து, அன்பை வார்த்து, ஆசையை மெழுகி உன்னை அழைக்

கும் பாக்கியத்தை-உரிமையை இக்கடிதமாவது தரு கிறதே-அதுவரை நான் கொடுத்து வைத்தவன்தான்.

நீ என் உரிமை. ஆனாலும் அந்த உரிமையை நம் குழந்தை சூடாவின் முன் திரும்பப் பெற்றால்தானே உன் வாழ்வு-என் வாழ்வு-நம் வாழ்வு சீரடைய முடியும்?

உன் நிலையை நான் அறிவேன். என் நெற்றியில் வடிந்த ரத்தத்தைக் கண்டு நீ அடைந்த வேதனையை உன் முகம் சொல்லிக் காட்டியது. உன் கண்களில் கண் ணீரைக் கண்டேன். எனக்குக் கண்ணீர் பெருகியது. நான் என்ன செய்வேன்? நீதான் என்ன செய்வாய்?

அன்று சூடாவுக்குப் படம் காட்டித் திரும்பும் போது, என் வலது கன்னத்திலிருந்த மருவைக்கண்டு சூடா கேட்டாள், ‘ஏன் ஸார், எனக்கு வலது கன்னத் திலே இருக்கிற மாதிரியே உங்களுக்கும் அதே வலது கன்னத்திலே புள்ளி யிருக்குதே!’ என்று. நல்லவேளை, தத்துவ ஞானி பிராய்டின் பாரம்பரிய விளக்கத்தை அவள் அறிந்து கொள்ளும் பிராயம் வரவில்லை. ஆம், ருக்மிணி. என் வலது கன்னத்தில் இருக்கும் மரு நம் குழந்தையின் அதே வலது கன்னத்தில் இருப்பதுதான் பிறப்பு ரகசியம்-பாரம்பரியத் தத்துவம். இந்த உண் மையைச் சூடா அறிய நேர்ந்துவிடுமானால்...?சூடாவின் சபதத்தை நான் அறிவேன். அவள் சொல்வது போல, தன் தந்தையின் தவறுக்குக் கொடுக்கும் தண்டனையை நான் தாராளமாக ஏற்கக் காத்திருக்கிறேன். ஆனால், எனக்கு ஒரே ஆசை-என் உயிர் பிரிவதற்குள் ஒருதரம் -ஒரே தரமாவது என் சூடா என்னை ‘அப்பா’ என்று அழைக்கக் கேட்டால் போதும். பிறவி புனிதம் பெற்று விடும். நான் ‘தந்தை’ என்ற பதவியை அடைந்து விடுவேன்.

ருக்மிணி, நாம் செய்த தந்திரங்கள், நல்ல வேளை! தந்திரங்களாகவே இருந்துவிட்டன. எப்படியோ சூடாவை நாடகத்துக்கு அனுப்பிவிட்டு, திட்டப்படி நீ என்னை அடைந்து விட்டாய். ஆஹா, பன்னிரண்டு வருஷங்கள் கழித்து எனக்கு என் ருக்மிணி கிடைத்தாள். இந்த என்னுடைய 'இரண்டாவது முதல் இரவை' எவ்விதம் நான் மறப்பேன்?

ருக்மிணி, கண்கலங்காதே. சூடா எனக்குக் கிடைத்து விடுவாள். அந்தித்தாமரைக்கு உதயசூரியன் கருணை காட்டாமல் இருக்கவே மாட்டான்!

நம் சூடா இந்தக் கடிதத்தைப் பார்த்துவிடப் போகிருள்-முதலில் இதைத் தீயிட்டுவிடு.

உன் பிரியமுள்ள அத்தான்,
தண்டபாணி."

உலக உருண்டைக்குக் கண் இல்லை; இதயம் இல்லை.

ருக்மிணிக்குத் திடீரென்று வயிற்றைக் குமட்டியது. தலை சுற்றியது. மயங்கிக் கீழே சாய்ந்து விட்டாள்.

'ஸ்டெத்தஸ்கோப்' முறுவலித்தது. "கலெக்டர் ஸார், உங்கள் மனைவி உங்களுக்கு ஒரு தங்கப் பாப்பாவைப் பரிசு தரப் போகிருர்கள்!"

தண்டபாணிக்கு ஆனந்தம் தலை கால் புரியவில்லை. "என் ருக்குவுக்கு வெட்கத்தைப் பார், வெட்கத்தை!" என்று கேலி பண்ணிஞர்.

தம்பதிகள் ஊடல் வசப்பட்டனர். நாடிக்குழலுக்கும் பிறை நிலவுக்கும் அப்புறம் அங்கு என்ன வேலையாம்?

"ருக்கு, இன்றைப்பொழுதுக்கு கூடா இங்கு வராதல்லவா?'

"ஊஹூம்."

"ருக்கு" என்று கூப்பிட்டுக் கொண்டே, தண்ட பாணி மெல்ல அவளை அண்டினார். இதயத் துடிப்பும் இதயத் துடிப்பும் மௌன பாஷை பேசிக்கொண்டன. கண் இணையும் கண் இணையும் நயனபாஷை பேசிக் கொண்டன. அவருடைய விரல்கள் அவளுடைய கன்னங்களுக்குப் போதை ஏற்றின. அவளது கனி இதழ்களில் என்னவோ புரியாத ரகசியம் எழுதப்பட்டி ருந்தது. அது என்ன என்று படிக்க அவர் தலையைத் தாழ்த்தினார். அவள் வெளியேற்றிய பெருமூச்சின் உஷ்ணம் அவர் உடலில் சூடேறியிருந்த வெம்மையில் படிந்து, "அத்தான்-ருக்கு" என்று எழுப்பிய ஒலியின் சிற்றலைகளைத் தவிர அங்கு வேறு சந்தடியே கிடையாது.

இன்பலோகம் சுழல எத்தனித்தது.

அப்போது—

"அம்மா, அம்மா!" என்று கூப்பாடு போட்ட வண்ணம் ஓடோடி வந்தாள் சூடாமணி. அவளுக்கு முன் ஓடோடி முத்தமிட்டது அவள் தன் அன்னைமீது வீசிய அந்தப் பாவை விளக்கு. வலது கன்னத்தில் ரத்தம் பீறிட்டது.

தண்டபாணிக்குத் தலை கிறுகிறுத்தது.

ருக்மிணிக்கு மறுபடியும் மயக்கம் வரும்போலி ருந்தது.

"பாவி, எத்தினி நாளா இந்த நாடகம்? ஐயோ, எங்க அம்மாவைக் கெடுக்கப் பார்த்தியே?..." என்று அலறினாள் சிறுமி சூடாமணி.

"சூடா, இவர்தான் கண்ணே உன் அப்பா!" என்றாள் ருக்மிணி உணர்ச்சி வசப்பட்டவளாக.

"ஆமாம், கண்ணே! இந்தக் கலெக்டர் ஸார்தான் உன் அப்பா. நீ தரும் தண்டனையை ஏற்கச் சித்தமாக யிருக்கிறேன். இதோ, இந்தக் கல்யாணப் படத்தைப் பார். நான்-என் அருகே இதோ உன் அம்மா...! உன் மனம் மாறும் போது இந்த உண்மையைத் தெரிவிக்கலாமென்றிருந்தோம். கண்ணே, உன் அம்மாவை எனக்குக் கொடு. நான் உனக்கு ஒரு அழகுப் பாப்பாவைத் தருகிறேன். ஒரு முறை என்னை 'அப்பா' என்று வாய்குளிரக் கூப்பிடு. இல்லையேல், இனி நீ என்னை உயிருடன் காணவே முடியாது. உன் அம்மாவுக்காக வாவது என்னை மன்னித்துவிடு!" என்று அழுதார் கலெக்டர் தண்டபாணி.

ருக்மிணி–தண்டபாணி திருமணப் புகைப்படம் சூடாமணியின் உள்ளங்கையில் சிறைப்பட்டிருந்தது.

"அப்பா!...அப்பா!..."

# அரிச்சந்திரன் பரம்பரை

காலத்தேருக்கு 'ஹோல்டான்' சொல்ல யாரால் முடியும்?

சுவர்க் கடிகாரத்தின் இதயத் துடிப்புடன் போட்டி போட்டுக் கொண்டு ஓடிக்கொண்டிருந்தது நாம தேவனின் இதயம். மேஜை மீது இருந்த தொலைபேசிக் கருவி ஒலி எழுப்பும் ஒவ்வொரு தடவையிலும், அவனது உயிர்த் துடிப்பு ஸ்தம்பித்து, பிறகு இயங்கியது. 'ஈசனே, நல்ல தகவலையே கொண்டு வா' என்று தெய்வத்தை வேண்டிக் கொண்டே இருந்தான் அவன். கண்முன் தெரிந்த 'டெலிபோன்' கருவியைப் பார்த்தான். கருவி தெரியவில்லை. கண் முன் இல்லாத ஓர் உருவம் தெரிந்தது. 'கற்பகம்!' என்று எழுத்துக்களைக் கூட்டினான். நினைவு கூடியது; நினைவு முகமும் கூடி வந்தது. இந்நிலையிலே, நீர்மணிகள் ஒன்று கூடுவது இயல்புதானே?

அந்தி வெயிலின் தங்க நிறச் சன்ன இழைகள் காற்றில் அலைந்து திரிந்தன.

முகத்தைக் கைபிடித் துணியினால் துடைத்த வண்ணம் மேஜையைப் பார்த்த பொழுது, காலையில் வேலைக்கு வந்ததிலிருந்து இதுவரை வந்த 'தொலை பேசி' அழைப்புக்களின் முழுவிவரங்களும் காணக்

கிடந்தன. 'கற்பகத்துக்குச் சுயநினைவு வந்திருக்குமல்லவா?...நான் காலையில் ஆபீஸ் வருமுன் டாக்டரை அழைத்து வந்து காட்டியபோது, அவள் தன்நினைவு தப்பிக் கிடந்தாளே?...ஜுரம் நூற்று நாலு டிகிரி இருந்ததே!...கடவுளே!'

கைமாற்று வாங்கி, வைத்தியச் செலவுகளை நடத்தி வந்த கதையை அவன் நினைக்கவில்லை; ஆனாலும், சம்பவங்கள் சட்டை உறித்த பாம்புக் குட்டிகளாக நெளிந்தன.

மனம் ஒரு பாம்புப் புற்று!

ஓர் அழைப்பு வந்தது. டாக்டர் மோஹனசுந்தரம் கூப்பிட்டார். நாமதேவனிடம், "உங்கள் மனைவிக்கு இனிமேல் பயமில்லை. புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள ஜெர்மன் இஞ்செக்ஷன் ஒன்றைப் போட்டிருக்கிறேன். சாயந்திரம் வரும்போது பணத்துடன் வாருங்கள். நூறு ரூபாயாவது ஆகும். சில புதிய மருந்துகளும் வாங்க வேண்டும். கர்ப்ப ஸ்திரியானதால், இப்போது சர்வஜாக்கிரதையுடன் இருக்க வேண்டும்; மறந்து விடாதீர்கள்!" என்று எச்சரிக்கை செய்தார்.

கைமாற்றுப் பாக்கிக்கு வழி என்ன செய்வது என்று குழம்பிக் கிடந்த அவனுக்கு மேலும் குழப்பம் மலிந்தது. கெட்ட காலத்தில் நல்ல காலம் போன்று, அன்று மாலை 'சீட்டு ஏலம்' என்று அவனுடைய அலுவலகத் தோழர் செய்தி தெரிவித்தார். அவனுக்குச் சந்தோஷம் சூடு பிடித்தது; இருநூற்றைம்பது ரூபாய்ச் சீட்டை எழுபத்து ஐந்து தள்ளி, நூற்றியெழுபத்தைந்துக்கு எடுத்தான் நாமதேவன். ஐந்தாறு காப்பி செலவழிந்ததைப் பற்றிப் பொருட்படுத்தாத பண்பு கொண்

டவன் அவன். ஆபீஸ் முகப்பில் கண்ணாடி பீரோவில் 'ஷோ'வுக்கென வைக்கப்பட்டிருந்த இரும்புக் குழாய் கள்கூட அவனுக்கு அப்போதைய மனநிலையில் எழில். பூட்டித் திகழ்ந்தன!

'சாந்தி'யில் ஆறு மணி ஆட்டம் காணப்போவோ ரும் வருவோருமாக, மக்களின் கூட்டம் நெரித்துக் கொண்டிருந்தது.

நாமதேவன் கால் சட்டைப் பையில் கையை வைத்து, 'பர்ஸ்' வைத்திருந்த உண்மையை உன்னிப் பாகக் கவனித்து ஆராய்ந்து கொண்டேயிருந்தான். இடது கையில் அன்றையப் பத்திரிகை இருந்தது. இலங்கைத் தமிழர் போராட்ட விவரங்களைப் படிப்ப தில் அவன் அக்கறை மிகக்கொண்டிருந்தான். சுருட்டி வைக்கப்பட்டிருந்த கைக் குட்டையில் பஸ் செலவுக் குரிய சில்லறைக் காசுகள் இருந்தன. கண்ணில்லாத கபோதி ஒருவன் யாசகம் கேட்டான். கொடுத்தான். நொண்டிக் கணவனைக் கரம்பற்றி அழைத்து அண்டி வந்து நின்ற ஏழைப் பெண் ஒருத்தி, 'காலணா' கேட் டாள். அரையணாக் கொடுத்தான். அப்போது, அந்தப் பெண்ணைப் பார்த்த தருணம், அவனுக்குத் தன் உயிர்த் துணைவியின் ஞாபகம் பளிச்சிட்டது. அந்த ஏழை மனிதனைப் பார்த்து விட்டு, தன்னையும் ஒரு முறை குனிந்து பார்த்துக் கொண்டான் நாமதேவன். உள்ளத் தின் நடுக்கம் நீங்கியது. அதேபோல, அவனிடமிருந்து இரண்டணா,நாணயமொன்றும் நீங்கியது; அந்த நொண் டிக்குப் போட்டான்!

மவுண்ட் ரோடு நாகரிகத்திற்கு நெடி எப்போதுமே சற்று அதிகந்தான்! இல்லையா?

பிராட்வே செல்லும் பஸ் ஒன்று வந்து நின்றது.

நாமதேவனால் ஓடிப்போய் ஏறமுடியவில்லை. ஆனாலும், ஓடிப்போய் ஏறவேண்டிய அவசரம் அவனை அழுத்தியது. திரும்பிய அவசரத்தைத் கவனியாமலோ, அல்லது வேண்டுமென்றோ ஒருவன் அவனை இடித்து மோதிக் கொண்டு கடந்து சென்றான். "மிஸ்டர் உஷார்!...பிக்பாக்கெட் ஜாக்கிரதை!...உங்க பாக்கெட் 'பிக்'காக-பெரிசாக இருக்குது போலிருக்குது!" என்று கவனப்படுத்திச் சிரித்தபடி திரும்பி வந்து நின்றான் அவன். நாடகக் கம்பெனி நடிகனுக்கு நேரான கிராப்புத் தலையுடன், முகத்துக்கு லட்சணமாகவும் தோற்றினான் அவன். அவனுக்கு நன்றி நவின்று கொண்டிருக்கையில், பஸ் வரவே, முண்டியடித்துக் கொண்டு தொற்றிக் கொண்டான் நாமதேவன்!

* * *

**வ**ளைப் பிடியைப் பற்றுதலுடன் பற்றிக் கொண்டவனாக டிக்கட் வாங்கினான் நாமதேவன். அடைத்துக் கிடந்த மூச்சு முட்டும் நெருக்கத்தில் உழன்ற அவனுக்கு துளியாவது காற்று வராதா என்றிருந்தது. 'பாய்க்கடை' நிறுத்தத்தில் உட்கார ஓர் இடம் அவனுக்குக் கிடைத்தது. உட்காரப் போன தருணத்தில், காற்சட்டைப் பையைத் தடவினான் அவன். உயிர்த் துடிப்பை ஏமாற்றம் தடவியது. பர்ஸ் காணப்படவில்லை. கண்டக்டர் 'விசில்' ஊதியபின், திடுதிடுப்பென்று ஒருவன் இறங்கினான். அவனைத் தொடர்ந்து நாமதேவனும் குதிக்க வேண்டியவன் ஆனான். குதித்த அவசரத்தில் செருப்பு வழுக்கி விட்டது. கால்சறுக்கி விழுந்த அவன், தட்டுத் தடுமாறி எழுந்து நடந்தான். இருபதடி தொலைவில்,

அவனுக்கு முன்னுல் பஸ்ஸிலிருந்து அவசரமாகக் குதித்த நபர் நின்றுன். மிருகங்கள் போட்ட சட்டை மட்டும் துல்லியமாக நினைவில் நின்றது. அந்த மனிதனை நிமிர்ந்து, அழுத்தம் பதித்துப்பார்த்தான், நாமதேவன். 'பர்ஸ் ஜாக்கிரதை!' என்று எச்சரிக்கை செய்த அதே மனிதன் தான்! ஆம்; அதே ஆள் இப்போது கண்ணீரும் கம்பலையுமாக நின்று, எதையோ தேடிக் கொண்டே யிருந்தான். "சாகப் பிழைக்கக் கிடக்கும் என் பெண் சாதியோட வைத்தியத்துக்காக வச்சுக்கிட்டிருந்த ஐம்பது ருபாயை யாரோ ஜேப்படி செய்துப்பிட்டானே பாவிப்பயல்!'' என்று செருமி அருதான் அவன்.

வேர்வை வழிந்தோடுவதைக்கூட துடைத்தெறியும் மன உணர்வு இழந்து, இழந்து விட்ட நூற்றியெழுபத் தைந்து ருபாய்ப் பணத்தின் சோதனையைப் பற்றிய துயரத்தில் வெந்து, நோய்ப் படுக்கையில் கிடக்கும் மனையாட்டியின் வைத்தியம் இனிமேல் எவ்வாறு நடக் கும்என்ற கேள்விக்குறியில் மனம் உடைந்து நின்ற நாம தேவனுக்கு அந்தப் புதுமனிதனின் வேதனை நெஞ்சை அடைத்தது. சற்றுமுன் ஓடிக் கொண்டிருந்த பஸ்ஸில் நிலைப் பிடியாக நின்று கொண்டே வந்தபோது, தன் கை கால்சட்டைப்பை வாயிலேயே அழுந்தியிருந்த உண்மையை எண்ணிப் பார்த்தான்; ஆசனம் காலியாகி உட்காரப் போன வேளையில்தான் யாரோ திருடி யிருக்க வேண்டுமென்பதை நிர்ணயித்த அவன் அதற்கு ஏற்றுற் போல, கண்டக்டரின் ஊதுகுழல் ஒலி கேட்டபின் சடக்கென்று குதித்தான். அந்த நபரின் சட்டை அடையாளத்தை நினைவில் கொண்டு தான், தவறி விழுந்த வேதனையைக்கூட மதிக்காமல்' அம்மனிதனை அண்டிச் சென்றுன். ஆனுல், அங்கே அவனது விம்மல் ஓலத்தைக் கேட்டதும், நாமதேவ

னுக்கு அவன்பால் ஈரம் ஊறியது. 'என் மனைவியின் உடல் நலக்குறைவு காரணமாக நான் இந்த ஒருவார மாக எவ்வளவு வேதனைப் படுகிறேன்! அது மாதிரி தானே இந்த ஆளுக்கும் இருக்கும். பாவம்!'

'ஐயா!...'

அவன் திரும்பினான். "ஓ, நீங்களா?...உங்களை, ஆமா, மவுண்ரோடிலே புதுச் சினிமாத் தியேட்டர் வாச லிலே கண்டேனில்ல... ஸார்... உங்ககிட்டே உங்கபர்ஸை ஜாக்கிரதையாய் பார்த்துக்கிடச் சொன்னேனில்லே...... ஆமா...நல்லா நினைப்பு வந்திட்டுது! ஆறு இப்ப நான் தான் ஏமார்ந்து போயிட்டேன். மனைவிக்குக் காய்ச்சல், நான் வேலை செய்யிற நாடகக் கம்பெனியிலே அடுத்த மாசச் சம்பளத்திலே முன்பணமா வாங்கியாந்த ஐம்பது ருபாயை யாரோ திருடிக் கிட்டானுங்க, ஸார்!...ஈவிரக் கம் இல்லாத அந்தப் பாவியைத் தெய்வம் தண்டிக்கா மலா இருக்கப் போகுது?..." என்று துடித்தான்.

அவன் நடிகன். ஆனாலும் அப்போது அவன் நடிக்கவில்லை. அவன் பெயரைக் கேட்டான். சபா ரெத்தினம் என்று பதில் கிடைத்தது. சபாரெத்தி னத்தை நாமதேவன் நம்பினான்.

"ஐயோ, பாவம்! உங்க கதையைக் கேட்கிறதுக்கு ரொம்பவும் மனசுக்குக் கஷ்டமாக இருக்குதுங்க!" என்று அனுதாபப்பட்டான் நாமதேவன். 'ஈசா, என் கதையை, என் வேதனையை யாரிடம் சொல்லி ஆறுதல் காணுவேனோ?'

சபாரெத்தினம் துயரம் கப்பிய முகத்துடன் விடை பெற முனைந்தான்.

"சபாரெத்தினம்! என்னுடன் வீட்டுக்கு வாருங்கள். ஏதாவது பணம் தர முயலுகிறேன். இல்லையென்றால்,

என் குடும்ப டாக்டரையாவது உங்களோடு அனுப்பி வைக்கிறேன்!'' என்றான் நாமதேவன்.

சபாரெத்தினம் மறுப்புச் சொல்லவில்லை. நாமதேவனுடன் வழி தொடர்ந்தான். அவன் முகம் களையுடன் விளங்கிற்று.

நல்லவர்கள் போல நடித்த 'ஜேபடிக் கொள்ளைக் காரர்'களைப் பற்றி சஞ்சிகைகளில் படித்த வகைவகையான கதைகளை நாமதேவன் மனம் ஏனோ அசை போட்டுக் கொண்டிருந்தது!

* * *

''சபாரெத்தினம், இதைச் சாப்பிடுங்கள்!'' என்று சொல்லி ஓர் எவர்ஸில்வர்த் தட்டுநிறைய பட்சணங்களை நிரப்பி நீட்டினான் நாமதேவன். அடிக்கொருமுறை எதிரொலித்தவாறிருந்த இருமல் சத்தம் அவனுடைய இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது.

சபாரெத்தினம் பலகாரங்களைச் சுவைத்துத் தின்றான். "யாருங்க இப்படி இருமுறது? வேறே குடித்தனக்காரங்களுக்கு யாருக்கானும் இருமல் வியாதியா?" என்று வினா முடுக்கினான்.

''என் மனைவிதானுங்க இருமுது, ஜுரம். கொஞ்ச நேரத்திலே டாக்டரை அழைச்சு வந்து காட்டவேணும். உங்களுக்கு ஒரு சோதனை!...எனக்கு இன்னொரு தினுசான சோதனை!......போன ஜன்மத்துக்கும் இந்த ஜன்மத்துக்குமாகச் சேர்த்துக் கணக்குப் பார்த்து ஐந்தொகை தயாரிக்கிறது தானுங்க, சபாரெத்தினம்! இந்த வாழ்க்கைக்கு உண்டான அலுவல், அல்லது

கடன்!......சாப்பிடுங்க; உள்ளே போயிட்டு வந்து, உங்களுக்கும் ஒரு வகை செய்யிறேன்!...'' என்றான் நாமதேவன்.

சபாரெத்தினத்தின் நறுக்கி விடப்பட்டிருந்த சன்னமான மீசை துடித்தது. "மெய்தானுங்க!''

* * *

மனைவியைப் பார்த்துவிட்டு, உள்ளறைக்குச் சென்றான் நாமதேவன். முதலில் டாக்டரை அழைத்து வந்து தன் மனைவியின் நிலையைப் பரிசோதனை செய்யச் சொல்லி, பிறகு, சபாரெத்தினத்துடன் அவரை அனுப்ப வேண்டுமென்பது அவன் திட்டம். டிரெங்குப் பெட்டியைத் திறந்தவன், பக்கத்துக் குடித்தனக்காரரின் அழைப்புக் குரல் கேட்டுச் சென்றான். முகப்பில் மாட்டியிருந்த 'கேடி'களின் படங்களைப் பார்த்துக் கொண்டே வந்தபோது, ஒரு முகத்தினையே ஆழமாகப் பார்க்கலானான் நாமதேவன். சபாரெத்தினத்தின் கண்களைப் போலவே அந்தப் படத்தில் இருந்த ஒரு 'ரௌடி' யின் கண்கள் இருந்தன. ஆனால் படத்தில் இருந்தவனின் மீசை பெரிது; தலைபரட்டை; சிறிய முடி!... வீட்டுக்காரரின் தம்பி போலீஸ் ஜவான். அந்தச் சமயத்தில் 'ட்யூட்டி' முடிந்து வந்த அவரும் போலீஸ உடுப்புடன் தோன்றினார்.

நாமதேவனுக்கு ஒருகணம் மனசை என்னவோ பண்ணியது. 'சபாரெத்'தினம் அசல் திருடனாகவே, இருக்கட்டுமே! அதற்காக, சீக்கினால் அல்லற்படும் அவனுடைய பெண்சாதிக்கு வைத்திய வசதி செய்து கொடுக்காமல் இருக்கலாமா? அப்புறம், மனிதத்தன்மை என்ற ஒன்று ஒட்டி இருப்பதற்குப் பொருள்தான் ஏது?...எல்லாம்

சரி!...... அவனுக்கு உண்மையிலேயே மனைவி என்னும் ஒருத்தி இல்லவே இல்லையென்றால்...?

வேர்வை சொட்டச் சொட்ட வெளியே வந்தான் நாமதேவன். அவனுடன் போலீஸ் ஜவானும் வந்தார்.

மேஜைமீது முடித்து வைக்கப்பட்டிருந்த துண்டு ஒன்று தென்பட்டது. அவிழ்த்தான் நாமதேவன். நாடகக்காரரின் முடிகொண்ட 'டோபா'வும் நூற்றி எழுபத்தைந்து ரூபாயும் இருந்தன!

நாமதேவனின் இதயம் கலங்கியது. கண்ணீர் வழிந்தது. 'இப்படிப்பட்ட அதிசயத்தை எண்ணினால், அரிச்சந்திரன் பரம்பரை ஒன்று, மனச்சாட்சி இழந்தவர்களுக்கு மத்தியிலும் உருவாகுமென்றுதானே புலப்படுகிறது!...' என்று எண்ணினான் அவன்.

டாக்டர் மோஹனசுந்தரத்தைத் தேடிச் சென்றான் நாமதேவன். அரைமணி கழித்தே அவர் வந்தார். காரில் வரும்போது அவர் சொன்னார்: "மிஸ்டர் நாமதேவன்!... திருடர்கள்கூட மனச்சாட்சிக்குப் பயந்து நடக்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஒருவன், என்னிடம் வந்து, தான் யாரிடமோ நூற்றெழுபத்தஞ்சு ரூபாய் திருடி, அப்பால் அவரிடமே கொடுத்துவிட்டு ஓடி வந்ததாகவும், தன் உயிருக்கு உயிரான மனைவியின் காய்ச்சலைக் குணப்படுத்தவே அப்படிச் செய்ததாயும் அழுது புலம்பினான். எனக்கே மனசு தாளல்லே. அவனையும் அவன் கண்ணீரையும் நம்பி, போய்ப் பார்த்தேன். நிஜமாகவே அவன் மனைவி சாகப் பிழைக்கத்தான் கிடந்தாள். என் கடமையைச் செஞ்சிட்டுத் திரும்பினேன். எனக்கும் மனசுக்கு நிம்மதியாயிருக்குது.

லோகத்திலே இப்போதெல்லாம் அதிசயங்களுக்கு மட்டும் பஞ்சமே இல்லே!...'' என்ருர் டாக்டர்.

''இப்படிப்பட்ட அதிசயங்கள் இன்னும் ஏராள மாகவே நடக்கட்டுங்க, டாக்டர் ஸார்!'' என்ருன் அவன். அவன் குரல் அடைத்தது.

"ஏன் மிஸ்டர் அழறீங்க?"

''வானம் மழை பொழிகின்றதே...!''

# பத்துப் பத்து மாதம்

பத்மினி பாலமுதம் உண்டு கொண்டிருந்தாள்.

"பாமா!" என்று அலட்டினார் வள்ளிநாயகம். குரல் தேய்ந்திருந்தது; அன்பு தோய்ந்திருந்தது.

பாமா குழந்தையைப் பார்த்தாள்; குழந்தை அன்னையைப் பார்த்தது. முதற்பார்வையில் பதட்டம்; இரண்டாவது பார்வையில் பரிதாபம். பத்மினியைக் கையிலெடுத்துக் கொள்ள முனைந்தாள் பெற்றவள். அந்தச் சிரிப்பின் அமுத அலைகள் பாமாவின் இதழ்க்கடையிலே ஒதுங்கின; ஒளி சிந்தின.

"பாமா!" என்று அழைப்பை ஏந்திய வண்ணம் வள்ளிநாயகம் வந்துநின்றார். அவளுக்கு நாணம் பூத்தது. "இந்தா!...சும்மாகுடு, என்னமோ, நேத்தைக் குத்தான் வாக்கப்பட்டவ கணக்கிலே வெக்கப் படுறீயே?" என்றார். முகத்திலே நகை பூத்தது.

அந்தி வானம் அழகுக் கலையுணர்ச்சியுடன் வல்லமை பெற்றது.

"டிரஸ் செய்துக்க பாமா. 'புஹாரி'க்குப் போயிட்டு, அப்படியே படத்துக்குப் போறத்துக்குச் சரியாயிருக்கும். பேபியை எங்கிட்டக் குடு. அந்த டர்க்கி டவலை மடிமேலே போடு, பாமா!"

அப்பாவிடம் அடங்கிக் கிடந்தாள் பத்மினி.

'மாரிஸ் மைனரில் ஏறிக்கொண்ட வள்ளிநாயகம் மைனர் போல 'ஜம்' மென்றிருந்தார். காற்றில் அல்லாடிய நரை முடி நடுங்கிக் கொண்டிருந்தது.

"கொளந்தே பத்திரம். பதனமா ஏறு!"

கார் புறப்பட ஆயத்தப்பட்ட வேளையில், "அம் மோவ்!" என்று கூப்பாடு பரப்பியபடி ஓடோடி வந்தான் வாண்டுப்பயல் ஒருவன். அவனுக்குப் பெயர் இல்லாமல் இருக்குமா?—மணி.

விசுக்கென்று புறப்பட்டது கார்.

"இங்கே வாப்பா மணி!" என்று தேறுதல் கூறிய குரல் மட்டும் பாமாவின் நெஞ்சடியினின்றும் எழுந்தது.

ஆறுதல் சொன்னவள் வேலைக்காரி.

* * *

**பா**மாவின் இதயத்தில் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருந்த குருதி வெள்ளம் விழி வழியே கண்ணீர்ப் புனலாக வெளியேறிக் கொண்டிருந்தது. சிந்திய துளிகள் பங்கு பிரிந்தன. சில பத்மினியின் மேனியில் தஞ்சம் புகுந்தன. மிஞ்சியவை மணிப்பயலின் கண் களில் தஞ்சம் புகுந்தன.

கருக்கல் பொழுது கழிந்தது.

பாமா துயில் நீத்தாள்; அதாவது, படுக்கையி லிருந்து எழுந்தாள். அவள் பார்வை, நேரெதிரில் காட்சி யளித்த பள்ளியறையில் வட்டம் கிழித்தது. பட்டு மெத்தை விரித்தது விரித்தபடியே இருந்தது. 'வெல் வெட்' தலையணைகள் வைத்த இடத்தைவிட்டு அசைய வில்லை.

மணிப்பயலுக்கு ஐந்து அல்லது ஆறு வயது இருக்கவேண்டும்; சுட்டிப்பயல்! வயதுக்கு மீறிப் பேசப் பழகியவன். சுட்டிப் பயல் அல்லவா?

"அம்மா!"

"ஏம்பா!"

"தங்கச்சிக்குச் சிரிக்கத் தெரியுதே, அம்மா!"

"ஊம்!"

"நீ ஏம்மா சிரிக்காமே, அழுகிறே?"

"சும்மாத்தான்!"

"அதுசரி; அம்மா...ஏ...அம்மாவ்!"

"ஏம்பா!"

"அண்ணைக்கு என்னை அடிச்ச அந்த ஆளு யாரு அம்மாவ்!"

"சொந்தக்காரரு!"

"யாருக்கு!"

"எனக்கு!"

"ஏம்மா, எனக்கு...?"

"உனக்குந்தான்...!"

"பின்னே ஏம்மா அப்பிடி என்னை அடிச்சுப் போட்டாரு?" இன்னம் இந்தக் கன்னம் வலிக்குதே. அம்மா?"

"இனி அடிக்க மாட்டாரு!"

"பலே!...—அப்படின்னு, அவரு முன்னே மாதிரி இங்கேயே படுத்துத் தூங்கட்டும்! ஏம்மா...!"

"ஊம்!"

"அம்மா!"

"ஏண்டா மணி!"

"ஆமா. என்னோட அப்பா ஒருத்தர் இருந்தாரே, அவரு எங்கே போயிட்டாரு!"

"அவரை இனிமே நீ பார்க்க முடியாது!"

"ஏம்மா, செத்துப் பூட்டாரா?"

"ம்!"

"ஐயோ... பாவம்!"

* * *

'ஆமா, பாமா! கண்டிப்பாச் சொல்லுற பேச்சுத் தான் இது. இங்கேயே சேத்துப்பட்டு அனாதை விடுதி யிலே மணியைச் சேத்துப்பிடலாம். அதான் உனக்கும் நல்லது எனக்கும் சிலாக்கியம். ஆகிற செலவைப்பத்தி எனக்குக் கவலையில்லே!...மணியை உனக்குத் தேடி வந்தா,மாசம் ஒருவாட்டி போய்ப் பார்க்கலாம். அனுமதி தருவாங்களாம்!...நாளைக்குப் பூராவும் யோசிச்சு எனக்கு ஒரு நல்ல முடிவைச் சொல்லிப்பிடணும்!'

கப்பல் போய்விடும்; ஆனால் கப்பல் துறை அப்படியேதானே நிற்கும்? அதுமாதிரிதான், காலம் போனாலும், வார்த்தைகள் பின் தங்கிவிடுகின்றன!

இரவு நடந்த 'கதை' இது:

பாமா சீவி முடித்துக் கைக்குழந்தையும் கையுமாக பள்ளி அறையில் பாதம் பதிக்கும்போது, அரைத் தூக்கம் வள்ளிநாயகத்தின் கண் விளிம்புகளில் முழுமையாக விளையாடியது. பசும் பால் கொடுத்தாள்; குடித்தார். குழந்தை தொட்டிலில் இடம் கண்டது. கதவுகளை அடைத்து முடித்துத் தாழ்ப்பாள் போட்டாள் அவள். ஓர் அறைக் கணம் இடைவெளி கழிந்திருக்கும்,

'படபட'வென்று கதவு தட்டப்பட்டது. திறந்து வந்து பார்த்தால், மணி அடம்பிடித்து அழுதுகொண்டே நின்ருன்.

உடை திருத்தித் திரும்பிய வள்ளிநாயகம் அந்தச் சிறுவனைப் பற்றிக் கன்னத்தில் அறைந்தார். முதல் அறை விழுந்த சடுதியிலேயே, அவர் கையைப் பறித்து விட்டாள் அவள்.

"சரிதான் நிறுத்துங்க!"

'வெறி'யும் வெறியும் அவரது முகத் திரையில் கோடு கிறுக்கின. அவர் பொரிந்து தள்ளிஞர். மணியை உடனடியா அஞதை விடுதியொன்றில் சேர்க்கவேண்டும்; இதற்கு பாமா இணங்க வேண்டும், எச்சரிக்கையான உட்பொருள் இதுதான்!

யாரோ வரும் அரவம் கேட்டது; வள்ளி நாயகத்தை விசாரித்தார் வந்தவர். அதே மனிதர் முன்பொருதரம் இங்கே காட்சிதந்த தருணத்தில் வள்ளிநாயகம் இருந்தார். மணியைக் கண்டதும், வந்த மனிதர், "உங்க மகனுக்கும்!" என்று கேட்டார். வள்ளிநாயகத்தின் கறுத்த முகம் மேலும் கறுத்தது. "உம்!" என்று ஒரு சொல் மட்டும் தலை காட்டிற்று. இது எதிர்த்தரப்புக்கு துல்லியமாய்க் கேட்டிருக்கும். ஆனல், அது 'இதய நெடு மூச்சு' என்ற துப்பு அவரது செவிகளை எட்டியிருக்க இயலாதல்லவா?

அன்றைய நிகழ்ச்சியை இன்று எண்ணிப் பார்த்த பாமாவுக்கு அன்று தோன்ற மறந்த அச்சம் இன்று தலை காட்டிற்று. அவளுக்குத் தலை சுழன்றது; நயனங்கள் சுழன்றன; விழிநீர் சுட்டது. எதை? அவள் இதயத்தையா?

மோன நிலை பயின்ருள் பாமா. ஓர் ஆண் உருவம் தெரிந்தது. ஆணழகன். நிதி மிக்கவன்; ஆனல், நீதி மறந்தானே? 'ஐயையோ! நான் என்ன பாவம் செய் தேனே முன் சென்மத்திலே?...இல்லாட்டி காலவெனே இப்படியெல்லாம் என்னை அலக்கழிக்குமா?... 'அவர்' என்னை விட்டுப் பிட்டுப் போயிடாமல் இருந்திருந்தா, இப்படிப்பட்ட சோதனை காத்திருக்குமா?... 'அவர்' என்னையும் தன் மகனையும் அதோகதியா விட்டுப்பிட்டு அண்ணைக்குப் போனரு; இப்ப, அதே மகனை விட்டுப் பிட்டு நான் இருக்க வேணும்னு 'இவர்' சொல்ருரே? தெய்வத்துக்கு அடுக்குமா? நான் பெத்த ராஜாவை எப்பிடி நான் பிரிஞ்சு இருப்பேன்?...தெய்வமே!'

தோன்றி மறைந்தான் நாடிமுத்து. இன்ப திருப்பத் திற்குப் பிள்ளையார் சுழி அமைத்த அவன், அவல முடி வுக்குப் பாமாவை ஆளாக்கிவிட்டு ஓடிய அவன், ஓடி வந்தவள் ஒருத்தியின் மது மையலிலிருந்து காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கும் விவரம் இப்போது பாமா வுக்குத் தெரிந்து என்ன ஆகப் போகிறது? ஆறு மாதம் வரை அவள் கைக் குழந்தையுடன் பட்ட அல்லல் அனுப வத்தை எங்ஙனம் மறப்பாள்? தாரமிழந்த வள்ளி நாயகம் பாமாவின் மையலில்மயங்கி, அவள் இஷ்டப்படி யெல்லாம் ஆடும் பொம்மையென நற்சாட்சிப் பத்திரம் பெற்ருர். முன்பு தன்னை உறுத்தாத மணி இப்போது உறுத்தவே, அதனுல் வேதனைப்பட்ட அவர் இப்போது புதுச் சட்டம் விதித்தார். இது விதியின் சட்டமல்லவே?

* * *

**ப**கல்-பூங்காவினின்றும் இசைத் தட்டு சங்கீதம் புறப்பட்டுப் பரவிய வண்ணம் இருந்தது.

பாமா தன் கையிலிருந்த கடிதத்தை மீண்டும் படிக்கலானாள்: "அன்புடைய கணவரின் பாத கமலங்களுக்கு ஆயிரம் ஆயிரம் நமஸ்காரம் செய்து அடியாள் பாமா எழுதுவதாவது. நான் உங்கள்உப்பை தின்றிருக்கிறேன். மறக்கமாட்டேன். உங்களுக்குரிய செல்வங்களை—நீங்கள் எனக்காகச் செய்துபோட்ட நகைநட்டுக்களை அப்படியே பீரோவில் பூட்டி வைத்திருக்கிறேன். எனக்குச் சொந்தமான இரு செல்வங்களை மட்டும் என்னுடன் எடுத்துச் செல்ல வேண்டியவளாகிறேன். வேறு வழியில்லை. மன்னிக்கவும். நான் பெற்ற மணியும் பத்மினியும் எனக்கு ஒன்றுதான். ஆனால் நீங்கள் மணியை வெறுக்கும்போது, அந்தத் துன்பம் என்னைச் சாகடித்து விடுகிறதென்பதை நீங்கள் ஏன் அறியப் போகிறீர்கள்? போய் வருகிறேன்.

இப்படிக்கு,
அபாக்கியவதி பாமா."

* * *

இருள் கண்களை விருட்டி விருட்டி விழித்தது.

பாமா உயிரைக் கையில் பிடித்தபடி நடந்தாள். தோளில் கைக் குழந்தை; மணி உடன் தொடர்ந்தான். அவள் மனத்தில் பயம் செறிந்த ஏதேதோ நினைவுகள் படம் எடுத்து ஆடின. தன்னை ஆசை காட்டி ஏமாற்றிச் சென்ற நாடிமுத்துவைத் தேடிச்சென்று பழி வாங்கத் துடித்தாள் ஒரு கணம்; மணியைப் பிரிந்துவிட எத்தனித்த வள்ளிநாயகத்தை வஞ்சம் தீர்க்க எண்ணினாள் மறு கணம். பாமாவின் 'இருமனம்' அலைக்கழித்துக் கொண்டிருந்த நேரங்கெட்ட நேரத்திலே, அவளுக்குச் சுமையாகக் காட்சியளித்த பொறுப் புணர்ச்சியையும்

அவள் மறந்தாளில்லே. அந்தப் பொறுப்புணர்ச்சிக்கும் பெயர்கள் உண்டு. ஆம், அவை: பத்மினியும் மணியும் தாம்! சுமை எனில், அன்புச் சுமை. எடை கடந்தது!

கோடம்பாக்கம் கோடிப் பகுதியும் கழிந்தது.

"நில்லு அப்படியே!" என்ற அதிகாரக் குரல் கேட்டது.

பாமா மருண்டு போனுள்.

'குறுக்கும் மறுக்குமாக'ப் பாய்ந்து வந்து நின்ற இரு கார்களினின்றும் இறங்கினுர்கள், நாடிமுத்துவும் வள்ளிநாயகமும்.

நாடிமுத்து தனக்குச் சொந்தமான மணியைப் பிடித்துக் கொண்டான்.

வள்ளிநாயகம் பத்மினியைப் பறித்துக்கொண் டான்; குழந்தை பத்மினி தந்தையின் சிரிப்பில் அழத் தொடங்கினுள்.

பாமா 'ஓ!" வென்று அலறினுள். 'எங்கே என்னுேட மணியும் பத்மினியும்?'

* * *

"அம்மா!..." என்று ஓட்டமாக ஓடி வந்தாள் வேலேக்காரி.

பாமா ஓர் அரை விஞடி திகைப்பெய்தினுள். சுற்றிச் சூழ விழி அமைத்தாள். இரு செல்வங்களேயும் மாறி மாறி முத்தமிட்டாள். 'நல்ல வேளே, நான் பிழைச் சேன். தெய்வம் காப்பாத்திச்சு!'—தாய் மனம் நன்றி உரைத்ததோ?

"கனுக் கண்டீங்களா அம்மா?"

"செல்வி கனு காணலே. உலகத்தோட சுயருபத்தை எம்மனசிலே நினைச்சுப் பார்த்தேன். என்னையும் மீறிப் பயம் வந்திருச்சு; அதான் என்னையும் மீறி அப்படி அலறிப்பிட்டேன். உங்கிட்டே கொஞ்ச நேரம் முந்திக் கொடுத்த அந்தக் கடுதாசியையும், ஐயா வந்தா கொடுக்கச் சொன்ன சாவிக் கொத்தையும் தா. இன்னொரு சேதி. நீயும் எங்கூட இப்பவே புறப்பட்டாக வேணும். 'அவர் வார பொழுதாகிடுச்சுது...!'' என்றாள் பாமா, அழுத்தமான தொனியில்.

திரை விழுந்தது, மனச்சாட்சிக்கா?

உள்ளே நுழைந்தாள் பாமா. திரும்பினாள். சர்வாலங் காரங்களுடன் திகழ்ந்தாள். தங்க நகைகள் கண்ணைப் பறித்தன. சேமித்து வைத்திருந்த 'சிறு வாட்டுப் பணம்' மடியில் கனத்தது. பத்மினியை எடுத்துக் கொண்டாள்; ஆபரணங்கள் பொலிவூட்டின. மணியையும் அழைத்துக் கொண்டாள். மோதிரங்கள் அழகூட்டின.

வேலைக்காரியும் பயணப்பட்டாள்.

வள்ளிநாயகத்துக்கு எழுதப்பட்ட கடிதக் கிழிசல்—கள் மீது அடி பதித்து அடி பிரித்து நடந்தாள் பாமா. 'இனியும் என்னை யாரும் ஏமாத்திப்பிட முடியாது; என்னையும் என் குழந்தைகளையும் நான் காப்பாத்திக் கிடுவேன்!'

உள்ளத்திடை ஆர்ப்பரித்து முழக்கமிட்ட சகல உணர்வுகளையும் மீறிய விதத்திலே தாய்மை வெறியின் அட்டகாசச் சிரிப்பு எதிரொலித்தது.

* * *

**எ**ழும்பூர் ரெயில் நிலையம்.

"அம்மா!''

“என்ன செல்வி? ...”

“அம்மா, உங்களையும் பத்மினிப் பாப்பாவையும் காணுமப் பைத்தியம் பிடிச்சிடப் போகுதுங்க ஐயா வுக்கு!”

“செல்வி, எனக்கும் அவரோட வேதனை புரியாமல் இல்லே, ஆனு, என்னுடை மனசை—பத்துப் பத்து மாசம் சுமந்து ரெண்டு செல்வங்களையும் பெற்ற தாய் மனசை அவராலே ஒரே சீரா எடைபோட முடியலேயே? என் மகன் மணிக்கு என்னிக்கு அவர் உண்மையான அப்பாவாக இருக்கிறதுக்குப் பக்குவப்படுகிருரோ, அதுவரை அவருக்காக அவரோட நகை நட்டோட நான் காத்துக்கிடப்பேன், செல்வி!”

தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் புறப்பட்டது !

# தந்தையும் மகளும்

தபால்கார பழனியாண்டி நீட்டிச் சென்ற கார்டை வாசித்து முடிப்பதற்குள் பார்வதியின் உடல் பூகம்ப மானது; முகம் வியர்வைக் குளமானது. நிமிஷங்கள் அப்புறம் பத்துக்குமேல் தாண்டி விட்டன. இன்னும் அவள் நிலையில் தெளிவு பிறக்கவில்லை.

"பார்வதி...பார்வதி...!"

அழைப்பைக் கொடுத்துக்கொண்டே, அழைப்புக் குரியவளைத் தேடி வந்துவிட்டாள், அந்த அழைப்பை விடுத்தவள். நீர்த்துளிகள் உறவாடிய கடிதத்தை நுனி விரலில் ஏந்திய வண்ணம், பதுமையாக நின்ற பார்வதியைத் தோள் பற்றிக் குலுக்கினுள் மீனுட்சி. சேலைத்தலைப்பைக் கொய்து பார்வதியின் கண்ணீரைக் கொய்து விட்டாள் அவள்; பிறகு பற்றியிருந்த கார்டைப் படித்தாள்.

"அன்பு மீனுவுக்கு,

அன்று நம் பார்வதியைப் பெண் பார்த்துச் சென்ற தஞ்சாவூர் மாப்பிள்ளை பாலகிருஷ்ணன், பெண்ணைப் பிடித்து விட்டதென்றும், வருகிற தையிலேயே கல்யா ணத்தை முடித்து விடலாமென்றும் சொல்கிறுர். பார்வதியிடம் இந்த நல்ல சேதியைச் சொல்லி இனியா

கிலும் சந்தோஷத்துடன் இருக்கும்படி சொல். பார்வதி யின் வாழ்வு இனி என்றென்றுமே மாருத வசந்தம்தான். தெய்வம் துணை நின்று பார்வதியின் திருமணத்தைச் சீரும் சிறப்புமாக நடத்தி அனுக்கிரகம் புரியவேண்டும்! நான் நாளை ஊர் வந்து சேருகிறேன். பிற நேரில்.

ராமசாமி"

"பார்வதி, நீ கொடுத்து வைத்தவள் அம்மா. நல்லது கண்டு யாராகிலும் கண் கலங்குவார்களா ? வாய் விட்டு ஆனந்தமாகச் சிரி, கண்ணே! இனி உன் வாழ்வும் ஒரே சிரிப்புப் புராணம்தானே. கண் நிறைந்த பணக் கார டாக்டர் பையன் உன் கை பற்றப்போகிருர். எங்கே சிரி கண்ணே...சிரி!" என்று கெஞ்சினுள் மீனுட்சி, உதட்டில் கோலமிட்டிருந்த முறுவலுடன்.

பார்வதி சிரித்தாள்; சிரித்துவிட்டுக் கூடத்துப் பூஜையறைக்குள் பாதம் பதித்தாள். அருட்புன்னகை புரிந்து கொண்டிருந்த அம்பாளின் முன் அவளது கண் ணீர்த்துளிகள் ஒவ்வொன்றும் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தன!

அறந்தாங்கி ஸ்டேஷனை விட்டு ரயில் இருளைப் பிளந்து கொண்டு காரைக்குடி நோக்கிப் பயணப் பட்டுக்கொண்டிருந்தது.

ஜோடியாக அணை கொடுத்திருந்த முழங்கைகளில் முகத்தைப் பதித்தவண்ணம் பார்வதி இருள் வெளிச் சூன்யப் பரப்பில் லயித்திருந்தாள். கண்கள் காணிக்கை செலுத்திய மணிகள் தரையில் கிடந்த அந்த போட்டோ வின் மீது முத்துக்கோத்த மாதிரி படிந்திருந்தன. சிரித்த முகத்துடன் கோட்டும் தலைப்பாகையுமாகக்

காணப்பட்ட அவ்வுருவத்தின் கண்களில் படிந்து விட்டிருந்த கண்ணீரைக் கண்டு அவள் பதைபதைத்தாள்.

"அப்பா, நீங்கள் அழுதீர்களா? நான் ஒருத்தி நாளெல்லாம் உங்கள் நிமித்தம் அழுது தீர்ப்பது பேதாதா? அப்பா, நீங்கள் இருந்து என் கல்யாணத்தை நடத்தி ஆசி வழங்க வேண்டியவர்களாயிற்றே. பெற்ற மகளைக்கூட உதறி எறிந்துவிட்டு இந்த ஒரு வருஷமாக எங்கே அப்பா போய்விட்டீர்கள்...? உங்கள் மகள் வெறும் உயிர்க்கூடாகி விட்டதை உங்களிடம் யார் வந்து சொல்லப் போகிறார்கள்? அப்பா உங்களை ஒரே ஒரு முறைகூட இந்த அபலை பார்க்கக் கொடுத்து வைக்க மாட்டேனா...? ஐயோ! அப்பா......! பெற்ற தந்தைகூட இல்லாமல் தாலி அணிந்து கொள்ள வேண்டுமா?...அப்பா...!" என்று அவள் பலவாறு எண்ணிப் புலம்பினாள்.

மறு முறையும் தன் தந்தையின் புகைப்படத்தைப் பார்த்தாள்; அப்போது அவள் தந்தை சிரித்த முகத்துடன் காட்சியளித்துக் கொண்டிருந்தார்.

புயல் ஆட்சி செலுத்திய பெண் நெஞ்சத்தில், கடந்த காலச் சம்பவங்கள் தென்றலில் பிறந்து திரைப் படமாக விரிந்து கொண்டிருந்தன.

புதுக்கோட்டை சமஸ்தானமாக இயங்கிக் கொண்டிருந்த பொன் நாட்களில், தர்பாரில் முக்கியமானதொரு பதவி வகித்து வந்தவர் பூரணலிங்கம். எட்டுக் கண் விட்டெரியும் என்பார்களே, அப்படிப்பட்ட கியாதி பெற்ற நாட்களில்தான் பார்வதி அவதரித்தாள்; கண்ணில் வைத்து இமையால் மூடிப் பேணி வளர்த்தார்கள் பெற்றவர்கள். மூக்கும் முழியுமாகப் பிறந்த

ராஜாத்திப்பெண், அசல் ராஜாத்தியாகவே வளர்க்கப் பட்டாள். வந்தவர் போனவரெல்லாம் பார்வதியை எடுத்துக் கொஞ்சி உச்சி மோந்து விட்டுத்தான், பிறகு பூரணலிங்கத்தைப் பேட்டி காண்பார்கள். வாரத்துக்கு ஒரு முறை தாய்க்காரி திருஷ்டி சுற்றிப் போட்டுவிட்டுத் தான் அசந்து தூங்குவாள். பெற்றவர்களின் அன்பை வளர்த்துவிட்டபடி, ஆசைக் கனவுகளின் பட்டியலை அதிகரிக்கச் செய்தவாறு, பார்வதி காலத்தின் வளர்ச் சிக்குத் தலை சாய்த்து வந்தாள். காலம் பார்வதியைப் பச்சிளங் குழவியினின்று, பாவாடை கட்டிய பாப்பா வாக்கி, பிறகு பக்குவமடைந்த கன்னியாக்கி விட்டது.

அப்படிப்பட்ட வேளையில்தான் விதிக்கு வேளை வந்தது போலும்! சமஸ்தானத்தின் ஜாதகம் மாறிய கையுடன் பூரணலிங்கத்தின் ஜாதகமும் மாறியது. வேலை போயிற்று; கைப்பிடித்த மனைவி மாண்டாள்; அத்துடன் நின்றிருந்தால் போதாதா...? அப்புறம் தான் அவர் வாழ்வில் திரும்புமுனை ஏற்பட்டது; அந்தத் திரும்பு முனைதான் அவர் ஈன்ற ஒரே பெண்ணின் திரும்பு முனையாகவும் அமைந்த தென்றால், அது மொத் தத்தில் விதியின் 'மோடி' என்றுதானே சொல்லவேண்டி யுள்ளது! பார்க்கப் பள பளவென்றிருந்த பூரணலிங் கத்திற்கு எங்கிருந்தோ வந்து சேர்ந்தது பெருவியாதி. நாட்களின் வளர்ச்சியுடன் வியாதியும் வளர்ந்தது. சேமித்த பணம் வியாதியின் நிமித்தம் செலவானது தான் மிச்சம்; வியாதியில் யாதொரு குணமும் உண் டாகவில்லை.

இப்படிப்பட்ட நிலையில், பூரணலிங்கம் தன் உற வினர் சிலரைக் கொண்டு, மகளின் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டியன செய்தார். முன்பின்

கிடைத்த விவரங்களை நன்ருக எடைபோட்டுப் பார்த்து மாப்பிள்ளைப் பையன்களை வரவழைத்துப் பெண்ணைப் பார்க்கச் செய்தார்.

'பார்வதியின் கழுத்தில் மூன்று முடிச்சுகள் சுப வேளையில் விழுந்து விட்டால், அப்புறம் எனக்குக் கவலையே இல்லை. 'அக்கடா' வென்று இந்த உலகத்தை விட்டே விடை பெற்றுக் கொண்டு போய்விடுவேன். பார்வதியின் சுபீட்சம் என்ருல், அவளது இறந்த அம்மாவின் ஆவிக்கு எவ்வளவோ நிம்மதியாக யிருக்குமே! மகள் கல்யாணத்திற்காவது அவள் அன்னை உயிருடன் பிழைத்திருந்தால் எத்தனையோ நன்ருயிருந் திருக்குமே...!' என்று அடிக்கொரு முறை தன் மனசைத் திறந்து வெளியிட்டுக் கொண்டிருந்தார்.

பூரணலிங்கத்தின் விருப்பத்தின் பிரகாரம் அவர் மகளைப் பெண் பார்க்க வந்தார்கள் மாப்பிள்ளைப் பையன்கள்; பார்த்தார்கள்; புறப்பட்டுச் சென்ருர்கள். போனதும் பதில் போடுவதாகச் சொல்லிவிட்டுப் போனவர்கள் பதில் போடுவதில் நூற்றுக்கு நூறு சதவீதம் நாணயத்தைக் கடைப்பிடித்தார்கள். ஆனுல், அந்தப் பதில்தான் பார்வதிக்கும் அவள் தந்தைக்கும் பேரிடியாக அமைந்தது. தந்தைக்குள்ள பெருவியாதி மகளையும் பாதித்திருக்கும் என்று பயப்படுவதாகவும், ஏற்க இயலாதிருப்பதாகவும் மாப்பிள்ளைப் பையன்கள் அப்பட்டமாகப் பதில் போட்டுவிட்டார்கள். எல்லோருடைய பதிலும் ஒருமுகமாக அமைந்தது கண்டு பூரணலிங்கம் கண்மறைவில் வடித்த கண்ணீருக்குக் கணக்கு வழக்கே கிடையாது. தந்தையின் துயரை ஊகித்தறிந்தவள் போல பார்வதி தன் துரதிருஷ்ட நிலையைக்கூட மூட்டை கட்டி ஒதுக்கி வைத்து விட்டு, தகப்பனுர் தன் பொருட்டு வருந்தலாகாதே என்று,

"அப்பா, நீங்கள் ஒன்றும் கவலைப்படாதீர்கள். என் அதிருஷ்டம் போல நடப்பது நடக்கட்டும். பெண் என்று பூமியில் பிறந்த எனக்கென எங்கோ ஓர் மூலையில் ஓர் ஆண்பிள்ளை பிறக்கத்தான் பிறந்திருப்பார். வேளையும் காலமும் வந்துவிட்டால் எல்லாம் நம் வீடு தேடி வந்து சுபமாக நடந்தேறும். உங்களைக் காரணம் காட்டிக் குற்றம் படிக்கும் மாப்பிள்ளைப் பையன் களுக்கு மட்டும் தந்தைப் பாசம் இருக்காது போலிருக் கிறது...அவர்கள் அப்படியே இருக்கட்டும்...! அப்பா! நீங்கள் மனசை அலட்டிக்கொள்ளாமல் நிம்மதியாக இருங்கள். அப்போதுதான் நோய் குணப்படும்... அப்பா!" என்று கண்ணீரும் கம்பலையுமாகக் கெஞ்சிக் கதறி வேண்டினாள்.

மகளின் தொந்தரவு பொறுக்க மாட்டாமல், பூரண லிங்கம் ஒப்பனைக்கு மகளின் முன் சிரித்து வைத்தார். ஆனால், அதுவேதான் தன் அப்பாவின் கடைசிச் சிரிப் பாக இப்படி அமையுமென்று பார்வதி அன்று எண்ண வில்லை. எதிர்பார்க்கவில்லை. அவர் அன்று எழுதி வைத் திருந்த கடிதத்தை அவள் பார்த்தாள்.

"அன்புள்ள பார்வதி,

உன்னை மணக்கோலத்தில் மாங்கல்யமும் மாலையும் திகழக் கண்டு களித்துப் பேரானந்தம் கொண்டேன், கண்ணே. இன்று போல் நீயும் உன் பதியும் புன்னகை யும் புது நிலவுமாக நெடுநாள் வாழ ஆசி கூறுகிறேன். என்னைக்காத்து ரட்சித்து வரும் டாக்டர் பாலகிருஷ் ணன்தான் உன் கணவர்—என் மாப்பிள்ளை என்பதை நினைக்கும்போது நான் எத்தனை மகிழ்ந்தேன் தெரியுமா? என்னைப் பற்றி மாப்பிள்ளை ஏதும் அறியார். நான் உண்மையைச் சொன்னால்தானே...! நான் நேரில்

இருந்து உன் கல்யாணத்தைச் சீரும் சிறப்புமாக நடத்தி ஆனந்தக் கண்ணீர் சொரியப் பாக்கியம் செய்யவில்லை தான்; என்றாலும், உன் மணம் கண்டு மகிழவேனும் கொடுத்து வைத்தேனே, அதுவே என் அதிர்ஷ்டம்! என் ஆசைக் கனவாகிலும் ஈடேறிப் பலிதமுற மனமிளகி னாரே, பகவான்...அதுவே என் பாக்கியம்! இனி எனக் குக் கவலையே இல்லை, கண்ணே! விடை பெற்றுக்கொள் கிறேன்...கண்ணே, விடை பெற்றுக் கொள்கிறேன்...!

இப்படிக்கு,
உன் தந்தை,
பூரணலிங்கம்."

கடிதத்தின் அடக்கம் கண்டு பார்வதி "அப்பா... அப்பா" என்று அலறினாள். டாக்டரின் கண்கள் கலங்கின.

அப்பொழுதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. எல்லோரும் திரும்பினார்கள், ஏதோ அரவம் கேட்டு. தோளில் சுமந்துவந்த உருவத்தைக் கிடத்தினான் ஒருவன். கனவு போலிருந்தது.

"ஐயா, இவர் திடுதிப்பின்னு ஆத்திலே குதிச்சா ருங்க...நல்ல வேளை நாங்க பார்த்து இந்த ஆளைக் காப்பாத்திேனுமுங்க......கடைசியா இவர் பார்வதி அப்பாருன்னு சேதி தெரிஞ்சு, இங்கே தூக்கி வந்தோம்..." என்றான் அவன்.

டாக்டர் பாலகிருஷ்ணன் சில நிமிஷங்கள்வரை பூரணலிங்கத்துக்கு என்னவெல்லாமோ செய்தார். அவர் முகத்தில் திருப்தி படர்ந்து வந்தது. பூரண லிங்கம் கண்களை லேசாகத் திறந்தார்.

"அப்பா, இனிமேல்தான் அப்பா நான் அதிருஷ்ட சாலி என்பதை ஒப்புக்கொள்ளுவேன். ஆஹா உங்களை

மீண்டும் காண முடிந்ததே...அப்பா...'' என்று, இன்னும் என்ன வெல்லாமோ கூறத் துடித்தாள் பார்வதி.

“என் கண்ணே, பார்வதி...நீ வாழ்வு பெற்று விட்டாயா?... ஆஹா! இன்றுதான் எனக்கு நிம்மதி. நீயும் நானும் உன், கணவர் டாக்டர் பாலகிருஷ்ணனுக்கு என்றென்றும் கடமைப்பட்டவர்கள்...கண் கண்ட மனித தெய்வம்!'' என்று கண்ணீர் மல்கக் கூறுவதைத் தவிர் பூரணலிங்கத்துக்கு வேறொன்றும் புரியவில்லை!

# இதயத்தின் இதயம்

குடும்பச் செலவு பட்ஜட்டைக் கணவனிடம் சமர்ப்பித்துவிட்டு, அழும் குழந்தையைக் கணவனிட மிருந்து வாங்கிக் கொண்டாள் ரஞ்சனி. பச்சைமண்; துவண்டு விழுந்தது. சென்ஸஸ் ஜாபிதாவிலே தானும் ஒரு நபராகி நாட்கள் என்ற ரீதியில்தான் அதற்குக் காலம் எழுதி வைத்திருந்த ஏடு சொல்லிற்று. அழும் குழந்தைக்குப் பால் ஊட்டினாள்; சீராட்டித் 'தாலேலோ' பாடினாள்.

நிலவின் போதைப் புன்னகையில், நீலாம்பரியின் அமுதப் பண்ணில் டாக்டர் குணசீலன் மனத்தை உடந் தைப்படுத்தி விட்டிருந்தான். பண்ணிசைக்கும் இன்பச் சூழ்நிலையும், பா இசைக்கும் பாவையின் கொள்ளை எழிலும், டாக்டரின் உள்ளத்தை உணர்ச்சி வயப்பட செய்தன.

நினைவு தொட்டுப் பழகியவள் ரஞ்சனி, டாக்டருக்கு. அவர் மனைவி. என்றாலும், கைபிடித்து மாதம் என்று ஒரு முப்பது நாட்கள் காலத்தின் வாயில் கபளீகரமாகி விட்டன. பேறுகாலம்—பிரசவம்—தீட்டு—பின் புண்யா வசனம்—இப்படி அங்கங்கள் காட்சிமாறிக் கொடுத் தன. இவை காலண்டர் தாள்களின் கழிவுக்குக் காரண மாகவும் உதவின.

உணர்ச்சிகள் விழிப்புக் கொண்டன. குணசீலன் அண்டிஞர்; ரஞ்சனி அண்டிஞள். குழந்தை வீரிட்டு அழுதது.

அவள் உணர்வு பெற்ருள்.

"மறந்தே போய்விட்டேன். நாளை விடிந்ததும் நம்ப ஜயந்தியை குழந்தையை எடுத்துக்கொண்டு வரச் சொல்லியிருக்கிறேன். குழந்தைக்கு ஆசீர்வாதம் செய்யவேண்டும்..."

மனைவியின் வார்த்தைகளில் அழுந்தி ஒலிபரப்பி நின்ற 'நம்ப' என்ற சொல்லின் உரிமை குணசீலனைக் கண் திறக்கச் செய்தது. அந்தச் சொல்லில் அவள் உள்ளம் படப் பிடிப்பாக அமைவதைக் கண்டார் அவர். ஏன், அந்தப் பாசமும், உரிமையும் அவரையும் சார்ந்ததேயல்லவா?

உள்ளே சென்று திரும்பிஞள் அவள். புது ஜரிகைக் கவுனும், வெள்ளிப் பாவாடையும் அவள் கையில் காணப்பட்டன. புரிந்து கொண்டார் அவர். குழந்தைக்குப் பரிசளிக்கக் காத்திருப்பவை அவை!

"குழந்தைக்கு இவை...உங்களுக்குத் திருப்தி தானே..."

"பேஷாக! முதலிலேயே இதை எனக்கு ஞாபகமூட்டியிருந்தால் இன்னும் கொஞ்சம் அதிகப்படியாக ஒன்றிரண்டு கூடச் சேர்த்துச் செய்யலாமே..."

அவள் சிரித்துக் கொண்டாள்—அதாவது அவளுக்குச் சிரிப்பு வெடித்துப் புறப்பட்டது.

அவரும் சிரித்தார்—அதாவது அவர் சிரிப்பை வலிய வரவழைத்துக் கொண்டார்.

டாக்டர் குணசீலனின் இதயம் சென்ற நிகழ்ச்சி ஒன்றில் ஒன்றி விட்டிருந்தது. நிகழ்ச்சி என்று

சாதாரணமாகச் சொல்லி முடித்து விடக்கூடிய தொன்றல்ல. அது அவரது மனத்தை—அவரையே மாற்றியமைத்த அவரின் வாழ்வின் மூலத் திருப்பம்—திரும்பு முனை !

நினைவுகள் சென்றுபோன நாட்களின் விளிம்பில் நின்று 'செஸ்' விளையாடின.

அன்று...

ஆஸ்பத்திரியில் மெட்டர்னிட்டி வார்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு அப்பொழுதுதான் டாக்டர் குணசீலன் நாற்காலியில் வந்தமர்ந்தார். அன்றைய மாலைக் குறிப்புக்களைச் 'சார்ட்'டில் எழுதினார், நோயாளிகளை மனத்தில் கொணர்ந்து நிறுத்திய வண்ணம்.

பகல் பிரியும்வேளை நெருங்கிக் கொண்டிருந்தது. முகத்தில் பூத்து நின்ற வியர்வை முத்துக்களைக் கைத் துண்டினால் ஒத்திட்டுவிட்டவாறு எதிரே நோக்கினார். தன் இருப்பிடத்தை மையமிட்டு அந்தப் பெரிய வராந்தாவின் இரு மருங்கிலும் விளக்குகள் எரியத் தொடங்கின; அவைகளின் அணிவகுப்பில் படுத்த படுக்கையாகக் கிடந்த நோயாளிகளின் முகங்கள் ஓரளவு புலனாயின.

கணத்துக்குக் கணம் அவர் எதையோ எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்போல அவரது நெஞ்சம் சலனம் காட்டி நின்றது. அதே சமயம் மேஜை மீதிருந்த டெலிபோன் மணி ஒலித்தது. ரிசிவரைக் கையில் எடுத்தார். வார்த்தைகள் பேசப்பட்டன.

"ரஞ்சனிக்கு வலி அதிகமாக இருக்கிறதா? ஏதாவது தகவல் வருமென்றுதான் காத்துக் கொண்டிருந்தேன். இதோ புறப்பட்டுவிட்டேன். பக்கத்திலேயே

சற்று நீங்கள் இருங்கள். ரங்சனிக்கு அப்போதுதான் ஆறுதல் படும்...'' என்முர் குணசீலன்.

வியர்த்துக் கொட்டிய நீர் மணிகளை வழித்து விலக்கக்கூடத் தெம்பு ஊறவில்லை அவருக்கு. உடல், உள்ளம் இரண்டும் ஒன்ருக நடுங்கித் தீர்த்தன. பியூனைக் கூப்பிட்டார். அனுமதி கோரி, மேலதிகாரிக்குக் குறிப்பு ஒன்று எழுதி அனுப்பிவிட்டுப் புறப்பட்டார். மோட்டார் சைக்கிள் காற்ருய்ப் பறந்தது. அவர் வீட்டின் காம்பவுண்டை மிதித்த சமயம் நிலவிக் கிடந்த பயங்கர அமைதி கண்டு அவர் மனம் கிலியால் சுழித்தோடிக் குலுங்கி விழுந்தது. சைக்கிளை ஸ்டாண்டிட்டு நிறுத்திய நினைவுகூட இன்றி உள்ளே ஓடினுர்.

''ரஞ்சு...''

அவர் ஹாலை நெருங்குவதற்குள் அவர் வருகை குரலின் மூலம் அறிவிப்புக் கூறட்டும் என்றே, என்னவோ மனைவியின் பெயரை அன்பொழுக அழைத்துக் கொண்டு சென்ருர் அவர்.

திரையிட்டிருந்த முன் கட்டில் ரஞ்சனி மெத்தையில் புரண்டு படுத்தாள். அவள் முகமெங்கும் வரிக் கோடுகள் கோலமிட்டிருந்தன. அவள் அழுதிருக்கிருள். அவளையும் அறியாது முக்கலும், முனகலும், விம்மலும், பொருமலும் நெஞ்சின் கதவைப் படீரென்று திறந்த வண்ணம் வெளி வந்தன. பிரசவம் என்பது மறுபிறவி என்ற அச்சத்திஞலோ...?

குணசீலன் மனைவியின் கரம் பற்றினுர். நாடி பார்த்தார்; சோதனைகள் பல வடிவில் இடம் பெற்றன. அவர் நெஞ்சு 'திக்'கென்றது. இதயத் துடிப்பு அடிக்கொரு தரம் நின்று நின்று இயங்க எத்தனித்தது.

அது சமயம்தான் ரஞ்சனி விழிகளை வாதனையுடன் திறக்க முயன்று திறந்து பார்க்கலானாள். அவள் பார்வையில் அவள் கணவன்மட்டுமே நின்று ஆலவட்ட மிடுவதாக அவள் உணர்ந்தாள். அதை ஒன்றையே அவள் எதிர்பார்த்தவள் போலவும் அவள் கண்களின் கங்கில் குறிப்பு ஒட்டியிருந்தது. அவள் முறுவல் பூக்க இதழ்களைப் பிரிக்க முயன்றாள். ஒட்டுப் பிசின் இழை பாய்ந்து விலகியது. இதழ்கள் விலகியும், புன் னகை முழுதும் மலரவில்லை.

என்ன நினைத்தாரோ, பக்கத்தில் நின்ற தன் உறவுப் பையனைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு, கடிதம் ஒன்றை நடுங்கும் கையுடன் எழுதி அதை அந்தப் பையனிடம் நீட்டினார். "இதை ஓடிப்போய் பெரிய ஆஸ்பத்திரி டாக்டர் ரமேஷ் கையில் கொடு. அவரை டாக்ஸி பிடித்துக் கூட்டி வா. ஓடு..." என்றார் டாக்டர்.

"அத்தான்!"

நான்கு எழுத்துக்களை உறவுச் சொல்லாக்கி அமிர் தம் வார்த்து உச்சரிப்பதற்குள் ரஞ்சனியின் முகம் வியர்த்துக் கொட்டியது.

"ரஞ்சு, அலட்டிக்காதே... கண்ணே ... இரவுக்குள் உன் அருகே பாப்பா ஒன்று—தங்கப் பாப்பா—அழகுப் பாப்பா விளையாடும். கண்கலங்காதே. அப்புறம் நான் பொறுக்கமாட்டேன். தாயாகப் போகிறாய், பெருமைப் பட வேண்டியவள். என் டாக்டர் நண்பரையும் அழைத்து வர அனுப்பியிருக்கிறேன். பிரசவத்தில் அவர் ஸ்பெஷலிஸ்ட். எங்கே, தூக்கம் வருகிறதா பார்..." என்று சொல்லிய அவர், மெல்ல அவள் தோளை அணைத்துப் படுக்க வைத்தார்; அவர் விரல் அவளது கேசத்தைத் தடவிக்கொண்டிருந்தது.

அதே சமயம்...

'ட்ரிங்-ட்ரிங்' என்று வாசல் மணி ஒலி வாசலிலிருந்து எழுந்து ஓசையிட்டுக் கொண்டிருந்தது. 'ஏதோ அவசரம் போலிருக்கிறது. யாரோ அழைத்துப் போக வந்திருக்க வேண்டும்' என்று மனத்தில் எண்ணியவாறு எழுந்தார். நினைத்தது நடந்தது.

"எசமான், எங்க ஐயா உங்களைக் கையோடே கூட்டிக்கிட்டு வரச் சொன்னாரு. அவங்க பெண் சாதிக்குப் பிரசவ வேதனைங்க. ரொம்பக் கஷ்டமின்னு பேசிக்கிறாங்க. பாவம், ஜயந்தி அம்மா புழுவாத் துடிக்கிறாங்க..."

வேலைக்காரன் கூறிய வார்த்தைகள், பிரசவ வேதனைப்பட்டுக் கிடக்கும் ஜயந்தியைப் பற்றியும் அவள் கணவனைப் பற்றியும் நினைவுமாலை சேர்க்கத் தூண்டின. டாக்டர் குணசீலனின் இதயம் எரிமலையானது. அவர் இதயம் தனக்குள் அலறியது.

'ஜயந்தி—ஜயந்தி! வஞ்சகி. நம்பிக்கைத் துரோகம் செய்தவள்—அவளுக்கு உதவிக்கு நான் வேண்டுமாம். அவள் கணவன் சேகர் அழைக்கிறானும்—நான் போகவா—இந்த ஜன்மத்திலா—?'

நினைவுமாலை கடந்த காலத்தின் விளிம்பில் கனவு மாலையாகிக் கிடந்தது.

குணசீலனின் சொந்த அத்தை பெண் ஜயந்தி. இரண்டு குடும்பங்களும் ஒன்றாகப் பிணைந்திருந்த காலம் அதிகம். இளம் உள்ளங்கள் இணைசேரக் கேட்க வேண்டியதில்லை. குணசீலனுக்கு ஜயந்தி என்றால் உயிர். அவள் அவனது பொழுது போக்கு. ஜயந்தி அழகுக் குவியல். அதுமட்டுமல்ல, அவள் கண்கள்

அவனுக்கு அறிவு போதித்தன; போதையும் போதமும் தந்தன. அவளின் சூழ்நிலையில் அவன் தன்னை மறந்த லயந்தன்னில் இருந்தான்; கிடந்தான். ஜயந்தியும் அப்படித்தான்! அவனை அடிக்கொருதரம் 'அத்தான், அத்தான்' என்று அலட்டிக் கொண்டு ஏகவசனத்தில் சம்பாஷித்துக் கொண்டிருப்பாள் அவள். அவன் இதயத்தையே பிளந்து உள்ளே சுரங்கம் வைக்கப்பட்டிருக்கும் அவனது அந்தரங்கத்தை அறிந்துவிடத் துடிப்பவள் போல அப்படிப் பார்ப்பாள் குணசீலனை. அந்தப் பார்வையில் என்ன வசியமிருக்குமோ, அவன் சொக்கிப் போவான். இருமனமும் ஒருமனமாக அப்படிப் பின்னிப் பிணைந்திருந்தன.

காலம் மாறியது.

குணசீலனை 'நீ' என்று அழைப்பதை விடுத்து 'நீங்கள்' என்று கூப்பிடும் நிலைக்கு ஜயந்திக்குப் பாடம் சொல்லித் தந்திருந்தது பருவமும் வயதும்.

இருவரது திருமணம் பற்றியும் இரு தரப்புப் பெற்றோர்களும் பேச்சைப் பரிமாறிக் கொண்டார்கள். பெற்றவர்களிடையே நிலவிய பேச்சின் துணையில் குணசீலன், ஜயந்தியுடன் நடத்தப்போகும் எதிர் காலத்து இன்ப வாழ்க்கை குறித்துப் பலபல கனவுக் கோட்டைகள் நிர்மாணித்து வந்தான். தான் அரசிளங் குமாரனுகவும், அவள் அரசிளங் குமாரியாகவும் நீராழி மண்டபத்தில் நின்று மாலைமாற்றிக் கொள்வது போலெல்லாம் கனவு கண்டான்; அந்தக் கனவு கடைசியில் கனவின் கதிக்குள்ளாகச் செய்யப்பட்டது.

ஜயந்தி மூலம் இதற்கு!

'நான் அத்தானை மணக்க முடியாது' என்று ஜயந்தி முடிவில் தன் தாயிடம் கூறிவிட்ட முடிவுச்

சொல் கண்டு குணசீலன் மனமிடிந்தான். இன்பத் தொடக்கத்திற்கு துன்பமுடிவிட்டது-அதுவும் அவளது காரணம் தெரியாத-எதிர்பாராத இந்த மனமாற்றம்—!

குணசீலனது ஆருத புண்ணை ஆற்றிவிட, ஓடி விட்ட இந்த நான்கு ஆண்டுகளுக்குங்கூடத் தெம் பில்லை. குணசீலன் எம். பி. பி. எஸ். ஆனவுடன், ஆருத புண்ணை ஆற்றினவள் ரஞ்சனி. அவள் குணசீலனது துணைவியானுள். ஜயந்திக்கென இருந்த இடத்தில் ரஞ்சனி மனம் புகுந்து மனைபுகுந்தாள்.

"டாக்டர் எசமான்!"

அப்போதுதான் டாக்டர் குணசீலன் இவ்வுலக நினைவு பெற்ருர்.

'ஜயந்திக்கு உதவிக்குப் போகவா? ஊஹூம்; மாட்டேன். என்னை ஆசை காட்டிப் பழிவாங்கியவள் அவள்; என் இன்பக் கோட்டைகளை மண்ணுக்கியவள் அவள். பழிக்குப்பழி வாங்க வேண்டும். அவளை வேதனைக்குள்ளாக்க வேண்டும். அவள் ஆசை அழிய வேண்டும். அவள் வயிற்றுக் குழந்தை அழியவேண்டும். ஆமாம்; ஒரே முடிவு...'

மேற்கொண்டு அவர் நினைவுகள் தொடர் பின்ன வில்லை. அவர் நெஞ்சு படபடத்தது. வெறிபிடித்தவர் போலானுர். கைகளைப் பிசைந்தவாறு ஹாலில் அங்கு மிங்கும் நடந்தார். அவர் சிரித்தார்; சிரித்த முகம் பயங்கரக் கோலம் தாங்கிற்று. வெறிபிடித்த அவர் உள்ளத்திற்கு முன் அவரின் மனச்சாட்சி எங்கு ஒளிந்து கொண்டதோ? நல்ல மனம்! நல்ல மனச்சாட்சி...!

"அத்தான்......என் சொந்த அத்தான் மனைவி ஜயந்திக்குப் பிரசவ வேதனை என ஆள்வந்து உங்

களைக் கூப்பிட்டான். ஓடுங்கள்...இப்போதே மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு போய் அவளைப் பாருங்கள். அத்தான் சேகர் இவ்வளவு நேரம் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு தவியாய்த் தவிப்பார். ஏன் நிற்கிறீர்கள்...கல்லாய்ச் சமைந்துவிட்டீர்களே... என் அத்தான் சேகர் இன்பமாக இருந்தால்தான் நான் இன்பமாக வாழ்வேன்...ஓடுங்கள்...!"

ரஞ்சனி புலம்பினாள். அவள் நெஞ்சின் பரப்பில் விம்மல் பரவித் தாழ்ந்தது.

டாக்டர் குணசீலன், மனைவியின் விண்ணப்பத்தின் முன்னர் மனிதனாகத் திரும்பினார்.

அவர் முன்னர் டாக்டர் ரமேஷ் காரிலிருந்து இறங்கி வந்து தோன்றினார்.

"ரமேஷ், என் மனைவியைப் பரீட்சை செய்யுங்கள். கவனமாகப் பாருங்கள். தலைப் பிரசவம்...நான் இதோ நொடியில் திரும்பிவிடுவேன். என் அத்தை பெண்ணுக்கும் பிரசவத் தொல்லையாம்..." என்று சொல்லிவிட்டு டாக்டர் குணசீலன் மோட்டார் சைகிளை எடுத்தார்.

அப்பொழுது "எசமான், உங்களைப் பார்க்க வேணுமின்னு ஜயந்தி அம்மா துடிக்கிறாங்க. அவங்க வயத்திலேயே குழந்தை செத்துப்போச்சாம்—ஆபரேஷன் செஞ்சு எடுக்கிறதே பெரிய வேலையாம். வீடு சுடுகாடா அமளிப்படுதுங்க...... ஓடியாங்க, பெரிய மனசு பண்ணி..." என்று அடுத்த வேலையாள் அலறினான்.

"குழந்தை வயிற்றிலேயே செத்துவிட்டதா? ஐயோ ஜயந்தி...நான் மகாபாவி. என் வெறி எண்ணம் உன் குழந்தையைச் சாகடித்து விட்டதா? இதயத்தில் மூண்டெழுந்த சூறாவளி வெறியில் எப்படியெல்லாம் நினைத்து விட்டேன்? என் எண்ணம்தான் அப்படிச்

செய்ததா? என் நினைவின் விளைவுதான் உன் குழந்தையைச் சாகடித்ததா?...ஐயோ!'' என்று டாக்டர் குணசீலனின் இதயம் பலவாறு புலம்பியது; கண்ணீர் வெள்ளம் புரண்டது; பெருமூச்சுகள் குமுறிப் புரண்டன.

மோட்டார் சைகிள் பறந்தது.

முழு அமைதி பூத்திருந்த அவ்வீட்டில் குணசீலன் அடியெடுத்து வைத்ததும், அவர் கைகளில் ஒரு சிறுமி கடிதம் ஒன்றைத் திணித்துவிட்டுச் சென்றாள்.

“அத்தான்,

இக்கடிதம் உங்கள் கையில் கிடைக்குமுன் நான் எந்நிலையில் இருப்பேனோ அறியேன். இது உங்கள் கைக்குக் கிட்டியபின், எந்நிலையையும் அறியேன். ‘இதோ அதோ’ என்று என் உயிர்—என் இதயம் தாங்கி நிற்கும் உயிர் துடிக்கின்றது. அதற்குள் என் இதயத்தை உங்களிடம் வெளியிடவே இக்கடிதம் எழுதுகிறேன்.

அன்றைய நாளில், நாம் இருவரும் ஜோடியாய்ப் பேசிச் சிரிக்கத்தான் சந்தர்ப்பங்கள் அனுசரணை புரிந்தன. நான்கூட அப்படித்தான் நினைத்தேன். ஆனால் என் இதயம் ஏனோ உங்களை என் காதலராகக் காட்ட மறுத்தது; ஏற்க மறுத்தது. பிள்ளைப் பிராயந் தொட்டு ஒன்றுபோலப் பழகிய தோஷமோ என்னவோ, என் நெஞ்சம் உங்களை என் உடன் பிறந்தவராகவே மதித்தது; மதிப்புக் கொடுத்தது. ஒரு கால், என் கூடப்பிறந்த தமையன் இல்லாத குறையால் விளைந்த விபரீத முடிவோ, என்னவோ? நான் உங்களைக் காணும் சமயமெல்லாம் ‘அண்ணு’ என்று வாய்நிறையக் கூவி யழைத்துப் பேசத்தான் துடித்தேன். விசித்திரமாகத்

தோன்றுகிறதா? ஏன், நான் விசித்திரப் பிறவியாகி விட்டதாலா? என் எண்ணம்—ஆசை? ஆனால் இந்தப் பாழும் உலகம்...!

இத்தகைய என் பாசமே, அன்று என்னை அப்படிச் செய்தது. அதன் பலனே, அன்று நான் உங்களை மணக்க மறுப்பதாகவும் இதயத்தைக் கல்லாக்கி முடிவு தெரிவிக்கவும் செய்தேன். அந்நாளில் நான் இத்தகைய என் விந்தை உள்ளத்தைச் சொல்லியிருந் தால், நீங்கள் கட்டாயம் நம்பமாட்டீர்கள். ஆனால், மரணத்தின் பிடியில் துடிக்கும் எனக்கு இவ்வுண் மையை உங்களிடம் திறந்து காட்டினால்தான் நிம்மதி பிறக்குமென்றிருந்தது. என்னை இனியாகிலும் மன்னிப் பீர்களா?

இப்படிக்கு,
ஜயந்தி.''

''ஐயோ, ஜயந்தி'' என்று ஓலமிட்டவாறு உள்ளே பாய்ந்தார் குணசீலன்.

கட்டிலில் பிரேதம்போலப் பேச்சு மூச்சின்றிப் படுத் துக்கிடந்த ஜயந்தியைக் கண்ட குணசீலன் வாய் விட்டுத் தேம்பினார். அருகே சோகமே வடிவாய் சேகரன் நின்றிருந்தான்.

கணநேரத்துக்குப்பின்...

அருகே நின்ற டாக்டர் கமலத்தை அண்டிச் சில கேள்விகளை ஜயந்தியின் உடல்நிலை பற்றிக் கேட்டுக் கொண்டு, பிறகு ஜயந்தியை ஆழ்ந்து பரீட்சை செய் தார். புதிதாகப் பரீட்சிக்கப்பட்டு பலன்கண்ட 'இஞ்செக்'ஷனை ஜயந்திக்குச் செலுத்தினார். ஆபரேஷ னுக்கு வேண்டிய கருவிகள் மேஜைமீது வந்தன.

குலுங்கி விழுந்தது டாக்டர் குணசீலனின் இதயம்.

எதையோ நினைவூட்டிக் கொண்டவர் போலத் திரும்பவும் 'டெஸ்ட்' செய்ய ஆரம்பித்தார். அவர் கண்கள் புதுஒளி காட்டின.

"சேகர், கவலைப்படாதீர்கள். ஜயந்திக்கு இனிக் கொஞ்சமும் ஆபத்தில்லை. அவள் வயிற்றுச் சிசுவும் பிழைத்துவிடும். இப்போது போட்ட ஊசி மிகவும் சக்தி வாய்ந்தது. நல்ல சமயத்தில் நான் வந்துவிட்டேன். வயிற்றில் குழந்தையின் அமைப்பு இடம் புரண்டு விட்டிருப்பதே எல்லோரையும் பயப்படுத்தி விட்டது..." என்று சொல்லிவிட்டு, டாக்டர் கமலத்தின் பக்கம் திரும்பினார்.

"மிஸ் கமலம், ஒரு விநாடியில் ஜயந்திக்குப் பிரசவமாகிவிடும். நாங்கள் ஹாலில் இருக்கிறோம். செய்தி அனுப்புங்கள்; ஜயந்தியிடம் நானே வந்திருப்பதாகவும்கூறுங்கள்!"

குணசீலனும் சேகரனும் ஹாலில் போய் அமர்ந்ததும், ஜயந்திக்கு ஆண் குழந்தை பிறந்திருப்பதாகச் செய்தி வந்தது. குணசீலன் மனம் அப்போது அடைந்த நிம்மதிக்கு எல்லையில்லை. சற்று முன்தான் ஜயந்தியைப் பற்றிப் பழி சுமத்தியதையும், அதன் பலனாகத் தன் நினைவுகள் பாம்பாகச் சீறினதையும், கடைசியில் தன் மனம் ஜயந்திக்கெனப் படாதபாடுபட்டதையும் நினைக்க நினைக்க, அவருக்கு எல்லாமே சொப்பனம் மாதிரியாகத் தோன்றின. சற்றுமுன் தன்னைப் புறப்படச் சொல்லி ஆணையிட்டு, வேண்டிக் கொண்ட தன் மனைவியின் இதயத்தை, அவள் அத்தான் இன்பம் நிலைக்கச் சிபாரிசு சொல்லி விடுத்த அவளது விண்ணப்பத்தை எண்ணி வியந்தார் அவர்.

அதே கணம், தன் மனைவியின் இக்கட்டான, கவலைக்கிடமான பிரசவநிலை ஞாபகம் வந்தது. உடனே புறப்படப் போனார்.

"எசமான், ரஞ்சனி அம்மாவுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்குதுங்க..." என்று மற்றொரு நல்ல சேதி அவர் காதுகளில் இன்பத் தேனைப் பாய்ந்தது.

கனவு காண்பதுபோல நின்ற நிலையிலேயே நின்றிருந்த டாக்டர் குணசீலனின் அகக் கண்ணில் பூரிக்கும் புன்சிரிப்புடன், புன்னகை முகிழ்க்கும் குழந்தையும் கையுமாகத் தன் மனைவி ரஞ்சிதமும், தன் அத்தை மகள் ஜயந்தியும் மாறி மாறிச் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தனர்!

சிந்தனையின் 'செஸ்' ஆட்டம் முடிந்தது.

விடிந்ததும் ஜயந்தி தன் குழந்தையுடன் வந்து சேர்ந்தாள்.

குணசீலனும் ரஞ்சனியும் குழந்தைக்கு ஆசீர்வாதம் பண்ணினார்கள்; பரிசுகள் வழங்கினார்கள்.

மெய்மறந்து போனாள் ஜயந்தி.

தன் அறையில் அமர்ந்திருந்த குணசீலனிடம் ஜயந்தி, "அத்தான், என் குழந்தையைப் பார்த்தீர்களா? உங்கள் பிரதிபிம்பத்தை நான் என் மகனின் முகத்தில் தரிசிக்கிறேன்; என் கனவு பலித்துவிட்டது! நாம்தாம் ஒன்று சேரப் பாக்கியம் பெறவில்லை. அல்லும் பகலும் உங்கள் நினைவே என்னை ஆட்டிப் படைத்தது, நான் கனவொன்று கண்டேன்; என் கனவு பலித்து விட்டது. கணத்துக்குக் கணம் நான் என் அத்தானை—உங்களை என் குழந்தையின் உருவில் இனிக் காண முடியு

மல்லவா...?'' என்று உணர்ச்சி வசப்பட்டவளாகக் கூறி நிறுத்தினாள்.

அவளுடைய இதயத்தின் இதயமாக ஒலித்த அவ்வார்த்தைகள் குணசீலனுக்குப் புதிராகப் பட்டன. குனிந்து பார்த்தார் குழந்தையை. தன் சாயலைக் கண்டார் குழந்தையிடம். சிருஷ்டியின் புதிரும் அவரை மலைக்கச் செய்தது.

குணசீலனும் ஜயந்தியும் ஒருவரையொருவர் பார்த்தது பார்த்த வண்ணம் எவ்வளவு நாழிகை நின்று கொண்டிருந்தார்களோ?

இரு ஜோடி விழிகளின் வெள்ளம் புதுப் புனலாகத் தரையில் முத்தமிட்டுக் கிடந்தது!

# மனம்

பச்சைக் குழந்தையின் பாலமுதச் சிரிப்பைத் தன் இதழ்க்கடையில் ஏந்தியவாறு, நிலவு நெருடும் தாமரை வதனம் ஹோமத்தீக்குத் தலை வணங்கிய வண்ணம் வீற்றிருந்தாள் அவள். அழகு காட்டிய கூறைப்புடவையும், அந்தம் காட்டிய கொண்டைப் பூவும், மனம் ஏந்திய மான்விழி நேர்மையும், மணம் ஏந்திய பூவையின் நீர்மையும் அவனுக்குக் கண் கொள்ளாக் காட்சியாயின. சுபவேளை கூடிவந்தது. மூன்று முடிச்சுக்கள் இட்டான் அவன். அம்முடிச்சுக்களை அவள் ஏந்திக் கொண்டாள். தெய்வப் படைப்பின் புதிர் முடிச்சுக்கள் போலும்!

"தாத்தா!...ஏ, தாத்தோ!"

தாய்வாழையில் குலை தள்ளும் தார்களைப்போல, குரல்கள் ஒன்றிலிருந்து ஒன்று பிறந்து, ஒன்றோடு ஒன்றாக இணைந்து மோதி வெடித்துச் சிதறின.

குழந்தைகளின் மகிழ்ச்சி ஆரவாரம் அந்தக் 'கனவு மனிதரின்' மோன நிலையை மாற்ற முடியவில்லை. அசைக்க முடியவில்லை. கடைசிப் பிரயோகமாக, பிஞ்சுக்கரங்கள் பல 'அந்தச் சுகக் கன' வைத் தொட்டன; துளைத்தன.

கனவு கண் விழித்தது!

"தாத்தோ ! ஓ...பாட்டா ! ஏ...ஐயா!"

நாகப்பச் செட்டியார் பைய பையப் எழுந்து அமர முயற்சி செய்தார். இரு கைப் பக்கத்திலும் வாகாய்க் கிடந்த திண்டுகள் அவருக்கு இதம் தந்தன. ஒருபக்கமாக அமர்ந்து கால்கள் இரண்டையும் ஒரே வீச்சாய் நீட்டிப் பரப்பியபடி, சாய்ந்து கொண்டார் அவர். தசைநார்கள் முறுக்கு விட்டுப்போய்த் 'தொள தொள' வென்று ஈரம் கட்டித் தொங்குவது போன்று ஒரு பிரமை அவருக்கு. ஆசுவாசப் பெருமூச்சு வெள்ளோட்டம் புறப்படாமல் இருக்கலாமா? டப்பாவை நகர்த்திக் கொண்டு மூக்குக் கண்ணாடியைப் பொருத்தினார். பார்வையில் மங்கல் ஒளி எழவே, கண்ணாடியைக் கழற்றிப் பஞ்சணையில் வைத்துவிட்டு, கண்கள் இரண்டினையும் அழுந்தக் கசக்கினார். கண் பார்வையைச் சமன் செய்தது கண்ணாடி. திருஷ்டி செலுத்தினார். "ஆஹா! என் குழந்தைகளோட குழந்தைகள்!" என்று உதடுகளின் கங்கிலே வார்த்தைகளை உலவவிட்டார் பெரியவர். தம் திருஷ்டியில்பட்ட மழலைச் செல்வங்களுக்குத் 'திருஷ்டி' கழிக்கச் செய்ய வேண்டுமென்று உள்ளுக்குள் ஓர் எண்ணம், கடமைப் பிரிவினின்றும் கண் காட்டிற்று.

"பாமா!"

"ராமு!"

"பாலா!"

"குமார்!"

"டே, பாபு!"

"யம்மா காந்தி!"

எலிமெண்டரி ஸ்கூலில் 'அட்டெண்டன்ஸ் எடுக்கும் பள்ளி ஆசானைப் போல, பெயர்களை மாறி மாறி,

மாற்றி மாற்றிக் கூப்பிட்டார் அவர். போதாதா? தித்திப்புக்குப் பறந்துவரும் சிட்டுகளைப்போல, அக் குழந்தைகள் ஓடோடி வந்து மெத்தையில் ஆளுக்கோர் இடமாகக் கைப்பற்றிக் கொண்டன. அன்பை ஆரத் தழுவியது பாசம்!

"தாத்தா!"

"ஏம்பா!"

"ஒனக்கு உடம்பு சரியில்லையாமே? அம்மா சொன்னாங்களே?"

"ம்...ம்...!"

"ஆத்தாளுக்குத் தந்தி குடுத்தாகளாம் நம்ப அம் மான்!"

"அப்பிடியா?"

"எனக்குக் காச்சல் வந்தாக்க, உடனவே போயி டுமே! உனக்கும் அதுமாதிரி போயிடாதா, தாத்தா?"

"நான் என்னத்தைக் கண்டேம்பா? எல்லாம் அம்மையப்பன் கடாட்சம்!"

"நீ இனிமே ரொம்ப நாள் இருக்க மாட்டீயாம்! அம்மா, சின்னம்மா, அக்கா எல்லாரும் குசு குசுன்னு பேசிக்கிட்டாங்க! நீ செத்துப் போயிட்டா, நாங்க எல் லாரும் அழுவோம்... ஆமா!"

செட்டியாரின் வெளுத்துக்கிடந்த மூக்கின் முனை யில் ஈரம் சொட்டியது. மார்பு வெடித்துவிடத் துடித் தது. கையை வைத்து அழுத்திக் கொண்டார். வாய் விட்டுச் செருமினார். தம்மைக் காத்துக் கொள்ளக்கூட வில்லையோ?

சுந்தரம் வந்தான். தலைமகன்.

குழந்தைகள் அம்பு கண்ட புறாக் கும்பலாகத் திக்குக்குத் திக்கு பிரிந்தன.

"அப்பச்சி!"

"தம்பியா?"

"மருந்து சாப்பிடுங்க. பத்தியம் வெச்சு தெய்வானை கொண்டாருவாள்!"

ஆற்றுமையுடன் கிழவர் தலையை உலுக்கினார். அனல் காற்றை மின் இயக்க விசிறி உண்டது.

"அப்பா, உங்களுக்கு ஆயுசு கெட்டி. நேத்து ராத்திரிகூட உங்க நட்சத்திரத்துக்கு அர்ச்சனை செஞ்சிருக்கேன். நீங்க எதுக்கும் கவலைப்படாதீங்க, அப்பா!"

நாகப்பச் செட்டியார் கை தொழுதார். அவர் உதிர்த்த கண்ணீர் மணிகள், அருகில் கிடந்த திருமணப் படத்தில் உதிர்ந்தன. 'சாவித்திரி! உங்கூட நானும் வந்திடத்தான் போறேன்!'

பொற்புடையம்மன் கோயிலில் இரவுப் பூஜை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

நித்தம் நித்தம் மாற்றம் ஏந்திக் காட்டும் உஷ்ண மானிக்கு நிகராக, செட்டியாரின் கைநாடியும் அவரது தேக நிலையும் நாளுக்கு நாள் மாறுபட்டுக்கொண்டே வந்தன. சமையற்காரன் காசியும், காவற்காரன் கந்தப்பனும் செட்டியாரின் உடலுக்குக் காவல் இருந்தனர். டாக்டரின் மருந்துக் கலவை தினுசுகள் அவரது உயிருக்குக் காவல் இருந்தன. குழந்தைகளும் குட்டிகளும் அவரின் உள்ளத்திற்குக் காவல் இருந்தன.

எல்லாம் இருந்தென்ன?

செட்டியாரைப் பயம் அண்டி விட்டது. வெளிச்சம் அந்தப் பயத்தைப் பெரிது படுத்திக்காட்டியது!

பயம்! மரணபயம்!...

ஒருசமயம். அப்போது அவருக்கு வயது இருபத்திரண்டு. தேவகோட்டையில் சுப. ராம. அண்ணுமலைச் செட்டியார் வீடு பசையுடையது. அங்கேயே சம்பந்தம் சாடிக்கை, கொள்ளவேண்டுமென்று நாகப்பனின் பெற்ருேர்கள் விழைந்தார்கள். ஏட்டுக்குறிப்புக்களும் வீட்டுப் பேச்சுக்களும் நல்ல பலன் சொல்லின. காரைக்குடியில் மாப்பிள்ளை வீட்டின் குலதெய்வத்துக்குப் பூசனை நிகழ்த்தப்பட்டது. மண வினைக்கு 'நாள்' குறித்தார்கள். இருந்தாற்போல, அவருக்கு 'சீக்கு' வந்துவிட்டது. உற்றமும் சுற்றமும் பயந்தன. ஆனுல் அவர் மட்டிலும் பயப்படவேயில்லை! பயம் வயதுக்கு வயது மாறுபடுமோ?

பட்டணத்திலிருந்து முதல் மகள் வள்ளியம்மை வந்திருந்தாள். மாப்பிள்ளைக்கு பாங்கில் ஏஜெண்ட் உத்தியோகம். பவழக்காரத் தெரு நகரத்தார் விடுதியில் செய்யச் சொல்லிக் கொணர்ந்திருந்த அல்வா டப்பாவை எடுத்து, ஓர் உருண்டை உருட்டிக் கையில் எடுத்துக்கொண்டு, "அப்பா!" என்று கூப்பிட்டாள்.

நாகப்பச் செட்டியார் ஏறிட்டு நோக்கிஞர்; அருமைத் திருமகளை இமை மூடாமல் பார்த்துக்கொண்டேயிருந்தார். 'என் பெண்சாதி சாவித்திரியை அப்படியே உரிச்சு வச்சிருக்குது!' மனைவியின் அன்புப் பணிவிடைகளை ஏற்றுக்கழித்த இன்பமிகு நாட்களின் கனவுப்பொழுதுகள் ஒன்றல்ல, இரண்டல்லவே? அவள் பாக்கியவதி! சஷ்டியப்தபூர்த்தி விழாவை 'பொருள்' பொதிந்ததாக ஆக்கிய பெருமையுடன் 'போய்' விட்டாள்-பூவும் மஞ்சளும் துலங்க !

விழிவரம்பில் சரம் தொடுத்த முத்துக் கண்ணீரை ஒற்றியெடுத்தபின், அவர் வள்ளியம்மையைப் பார்த்தார். அவள் நீட்டிய அல்வாத் துணுக்கைத் துண்டு படுத்தியபின் வாயில் போட்டார். இனிப்பின் சுவை நாக்குத் தொங்கலில் இருந்தது. இன்பம் அணைந்த தம் வாழ்வுக் கதையின் ருசிமிகுந்த அத்தியாயத் தலைப்புக்களை நினைவிற்குள் கொண்டுவர முயன்றார். அறுபத்தொன்பது ஆண்டுகள் என்றால், சாமானியமா?

சென்ற வருஷம் சித்திரைத் தொடக்கத்தில் தம் மைந்தன் சுந்தரத்தின் குழந்தைக்கு 'புதுமை' விழா நடத்தப்பட்டது. ரூபாய் ஐயாயிரம் காலி. "நான் இருந்து நடத்தி வைக்கிற கடைசித்தேள்வை, விசேஷம் இதுண்ணு என்னமோ எனக்குத் தோணுது, தம்பி. ஆனபடியினாலே, ரொம்பவும் சிறப்பாவே விசேஷத்தை நடத்திடவேணும்," என்று எச்சரித்தார். உள் மனத்தின் வெளிப்படையான எச்சரிக்கையின் குரல் இப்போது செட்டியாரின் மனக்காதுகளில் பயங்கரமாக ஒலித்தது, முனை மழுங்கிய கிராமபோன் ஊசியில் இயங்கப் பெறும் இசைத்தட்டினைப் போல!

"அண்ணனைக் கூப்பிடு!"

"ஆகட்டுமுங்க!"

சுந்தரம் வந்தான். பி. காம் படித்த பிள்ளை. காதில் பென்சில் வைத்திருந்தான். திறந்த பேனாவும் கையுமாக வந்தான். "அப்பச்சி!"

"தம்பி, இப்படி உட்காரேன். நம்ம லேவாதேவித் தொழிலே நீ கெட்டிக்காரத்தனமாக கவனிச்சுக்கிடணும். எனக்குப் பின்னாடி நீதான் இந்தவீட்டுப் பரம்பரைப் பேரைக் காப்பாத்த வேண்டியவன்; காப்பாத்தக் கடமைப்பட்டவன். இந்தக் காரைக்குடி முச்சூடும்

தெரியும், நான் பைசா பைசாவாய்ப் பணம் சேர்த்த கதை!... ஜப்பான்காரன் குண்டுபோடப் போக. நான் ‘மோல்மீன்’ நகர மரக்கடையை விட்டுக் கடலே கதி யின்னு பறந்து வந்தது உனக்கே அத்துபடியாயிருக் கும். ஆக, நீ வீணுச் செலவு செஞ்சுப்பிடாதே! உன் கூடப் பிறந்த தங்கச்சிமார்களுக்கும் தம்பிமார்களுக் கும் சரியாப்பாகம் குடுத்திடுவே நீ. சட்டம் போட்டுப் பிட்டாங்க. இத்தனை பெரிய குடும்பத்தை விட்டுப் பிட்டு நான்தான் இன்னிக்கோ நாளைக்கோ போகப் போறேன்!”—விம்மியழுதார் செட்டியார்.

சுந்தரமும் வள்ளியம்மையும் வாய்விட்டுத் தேம்பி ஞர்கள்.

டாக்டர் வந்து சோதனை செய்தார்.

செட்டியாரின் உறவினர் பள்ளத்தூரிலிருந்து வந் தார். வந்தவர் புறப்பட்டபோது சொல்லிச்சென்ற புத்திமதி: “நீங்க என்னங்கிறேன், மச்சான்? கிழம் எப்போ போகப் போகுதின்னு எல்லாரும் காத்துக்கிட்டி ருக்காங்க. நீங்க கடைசி காலத்திலே உங்களுக்குத் தேவைப்படுறதை யெல்லாம் சாப்பிடுறதுதானே? நீங்க சம்பாதிச்சதுதான் சகலமும்; உங்களுக்கு இல்லா மையா? சும்மா சாப்பிடுங்க! நம்ப கோடி விட்டு ‘கூனு மாஞ’ இல்லே, கடைசி காலத்திலே எப்பிடி எப்பிடியெல் லாம் தின்னு தீர்த்து ஆட்டம் போட்டாக! ஐய! இந்தப் பழசையா இடுப்பிலே கட்டியிருக்கீக? நாலு கெண்டை வேட்டி வாங்கி வச்சுக்கிடப்பிடாதா? உங்கபணம் தானே? சும்மா வேணுங்கிறதைச் சாப்பிடுங்க! உங்க பணம் நாளைக்கு உங்க பின்னுடியா வரப்போகுதுங்கி றேன், மச்சான்...?”

நாகப்பச் செட்டியார் நல்ல இதயம் பூண்டவர்.

'இரண்டு லட்சம் சொத்துக்கு உடைய 'நாவன்னு' ஒரு குறையும் இல்லாமல் கண்ணை மூடிப்பிட்டார்னு ஊரிலே பேசவேணும். தம்பி! இதை நீ ஞாபகத்திலே பதிய வச்சுக்கிட வேணும். எனக்குப் பிற்பாடுதான் என் சொத்திலே பாகப்பிரிவினை நடக்கவேணும். ஆமா...!'

இவ்வாறு கண்டித்துச் சொன்ன நல்ல மனிதர் அவர்!

'சிவ, சிவா' என்று நாமம் சொல்லி, திருநீற்றுத் துகள் எடுத்து ஒரு பகுதியை வாயில் போட்டபின், எஞ்சியதை நெற்றியில் தீற்றிக் கொண்டார் செட்டியார். விபூதி மடலுடன் நின்ற சமையல்காரனிடம் சுந்தரத்தை அழைத்து வருமாறு சேதியனுப்பினர்.

சுந்தரம் வந்தான்.

"இருப்புப் பெட்டகச் சாவியைக் கொண்டா!"

அவன் கொடுத்தான்.

அவர் அதைக் கையிலெடுத்தார். கட்டிலை விட்டு எழுந்திருக்கப் பிரயத்தனப்பட்டார். முடியவில்லை.

"சரி. நீயே போய் இருப்புப் பெட்டகத்தைத் திறந்து ஐயாயிரம் ரூபாய் எடுத்தா!"

"நல்லதுங்க!"

பத்துருபாய், நூறு ரூபாய்த் தாள்கள் அவரைச் சுற்றிலும் கிடந்தன.

"இந்தாப் பாரேன்!"

"சொல்லுங்க!"

"இதெல்லாம் எம் பணம், இல்லையா?"

"ஆமா, உங்க பணமேதான். நீங்க அமைதியாப் படுத்துக்கிடுங்க' அப்பச்சி!"

"அதுதான் இனிமே முடியாது, தம்பி! இந்தப் பணத்தை என்னத்துக்காக இப்ப உங்கிட்டே எடுத்தாரச் சொல்லியிருக்கேன், தெரியுமா?"

"யாருக்கானும் கடன் கொடுக்க வாயிருக்கும்!"

"பலே, எங்க பள்ளத்தூர் மச்சான்காரன் சொன்னதை மெய்ப்பிச்சுப் பிட்டியே நீ? கடனும் இல்லே, மண்ணும் இல்லே! எல்லாப் பணமும் எனக்கு! இந்தப் பணம் பூராவும் என்னுடையதாக்கும்!"

"வாஸ்தவந்தானுங்களே!"

"சரி, இப்ப நான் சொல்லுறபடி ஒரு 'சிட்டை' போடு. போட்டு, அப்படியே எல்லாத்தையும் வாங்கியார வேணும்!" கழுத்தில் இழைந்திருந்த 'உருத்திராட்சக் கவுடு' அவரது நுனி விரலுடன் ஒட்டுறவு கொண்டிருந்தது.

"சொல்லுங்க!"

"உம்; எழுது; பிள்ளையார் சுழி சிவமயம் போட்டுக்க!"

"ம்."

"சரி; எழுது! ஒரு டஜன் ஆப்பிள்; ரெண்டு டஜன் சாத்துக்குடி; ஸ்வீட் இருபது; ஜரிகை வேஷ்டி நாலு ஜோடி; கெண்டை போட்ட துப்பட்டா ஆறு; மிட்டாய் ஒரு டின்! அப்புறம்...அப்புறம்! சரி இதையெல்லாம் ஓடிப்போய் வாங்கிவா!"

செட்டியார் வீறு கொண்டவர் நிலையில் பேசிக் கொண்டே போனார்.

தந்தையின் முகத்தைத் தனயன் ஆழப் பார்வையுடன் நோக்கினான். மரண பயத்தைத் தரிசித்தானா? இல்லை. சாவின் நிழலைக் கண் தொடுத்துக் கண்டானா?

ஆதித்தன் ஏறுமுகம் காண்பித்தான்.

சுந்தரம் கொணர்ந்த சாமான்கள் நாகப்பச் செட்டியாரைச் சூழ்ந்திருந்தன. அவர் அவற்றை அப்படியே விழுங்கி விடுபவராக அப்படிப் பார்த்தார். கைந்நொடிப்பொழுது கழிந்திருக்கும். அவர் வாய் விட்டுச் சிரிக்கலானார். "சுந்தரம், நாளைக்கு நான் சொல்லுறபடி என் பணத்திலே பாதியைத் தானதருமம் செஞ்சிட வேணும். எம்பேரும் புகழும் எனக்கு அப்புறமும் இந்த ஊரிலே வாழ்ந்தாகவேணும். நான் கொடிகட்டி வாழ்ந்தவனாக்கும்!" என்று பெருங்குரலெடுத்துப் பேசினார். அதற்கப்புறம் "பித்தா பிறைசூடி!" என்று அழுத்திப் பாடலானார் பெரியவர்.

தலைமுறையின் தத்துவத்துக்கு முதல் உரிமை கொண்டவரின் இசை கேடான இந்த விசித்திரநிலை, அந்தத் தலைமுறையின் சரித்திரத்தைக் கண் கலங்கச் செய்து விட்டது. "அப்பச்சி! உங்க பணத்தை உங்க இஷ்டப்படியே தானதருமம் செய்யுங்க. நானும் செய்வேன். எங்கடமை இது!" என்றான் மகன், உத்தாரம் தொனிக்க!

நாடிக்குழலை நாடி மூன்று இடங்களுக்கு 'டெலிபோன்' பறந்தது. கார் ஓரிடத்தில் நிற்கவில்லை!

அந்தி சந்தி.

நாகப்பச் செட்டியார் சுய நினைவை ஆட்கொண்டவர் போல் காணப்பட்டார். 'நல்லதனமாக'ப் பேசினார்; உரையாடினார். சுற்றிச் சூழ இருந்த பொருள்களைப் பார்த்தார். ஓர் ஆப்பிளை எடுத்தார். தூக்கக்கூடத் தெம்பில்லை. காசி நறுக்கி ஒரு துண்டை நீட்டினான். வாயில் போட்டார். மென்று தின்ன பற்களுக்கு எங்கே போவார்? பாவம்! இன்னொரு பொட்டணம் காட்சி தந்தது. மூக்குக் கண்ணாடிக்கு நேர்வசமாகக் கொண்டு போய், அந்தப் பொட்டலத்தில் சுற்றப்பட்டிருந்த கடுதாசியைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தார். பிறகு, அதைப் பிரித்து எடுத்தார். அவரைச்சுற்றிலும் பரப்பி வைக்கப்பட்டிருந்த சாமான்களின் இடையிலிருந்து ஏதோ ஒரு தாள் பறந்து சென்றது.

அதில் கண்ட வாசகம் :

"உம் வாழ்வோ கொஞ்ச நாள்தான். ஆனால் உமது ஆசைகளோ வானை முட்டுகின்றன. உமக்கு ஏற்பட்டுள்ள மரணபயம் உமக்குச் சுய நலத்தையும் வலுவாக உண்டாக்கியிருக்கின்றது. ஆகவேதான், நீர் இப்படித் தாறுமாறாய்ப் பணத்தைச் செலவழிக்கப் பார்க்கிறீர். நாளை நீர் பிடி சாம்பலாகப் போகிற புள்ளி. ஆனால் உம் வாரிசுகளோ இன்னும் நெடுங்காலம் வாழப் போகிறவர்கள்; வாழவேண்டியவர்கள்! அவர்களுக்காக மிஞ்சியுள்ள பணம் நியாயப்படி அவர்களுக்கே உடைமையாகவேணும். இந்த மனித தருமத்தை மறவாதீர் நீர்!"

நாகப்பச் செட்டியாரின் கண்களின் முன்னே அந்தப் பெரிய மனே ஆலவட்டம் சுற்றியது. மீண்டும் பித்தம் தலைக்கேறின பாவனையில் சிரிப்பைக் கக்கினுர். மருந்துச் சீசாக்களைத் தள்ளிவிட்டார். பழங்களை எடுத்து வீசினுர். படுக்கைக்கு அருகில் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த கண்ணுடியில் தெரிந்த அவரது முகம் அவரையே அச்சுறுத்தியிருக்க வேண்டும். இல்லையென்ருல், அதையும் சுக்கு நூருக ஏன் உடைக்க வேண்டும்?

சுந்தரம் கதி கலங்கினுன். முன் பகுதியில் காத்திருந்த டாக்டர்களிடம் ஓடினுன். அப்போது அங்கே ஓர் உரையாடல் நிகழ்ந்து கொண்டிருந்தது:

"ஆமாம், மிஸ்டர் குருராஜ்!...நீங்கள் செய்ததுதான் சரி. இந்தக் கிழம் தம் ஆயுசுக்குள்ளாகவே தாம் சம்பாதித்த பணம் அவ்வளவையும் தீர்த்து விடத் துடிக்கிறது. இது பித்த வெறி மட்டுமல்ல! தான் சாகப் போகிருேம் என்ற 'தீர்வு காண முடியாத கவலை'யில் எழுந்த துர் எண்ணமுங்கூட!...மனிதன் சாவை நாடும் போது, அவனிடமிருந்து பாசம், பந்தம், அன்பு, இரக்கம், தியாகம் போன்ற இத்தகைய மனித உணர்வுகூட ஒதுங்கி விடுமென்று நாம் படிக்க வில்லையா?... கிழவரின் பார்வையில், நீங்கள் எழுதிச் சுற்றிவைத்த அந்தத் 'தத்துவ போதனை' வரிகள் இந்நேரம் சிக்கியிருக்கத்தான் வேண்டும்!...பாவம்!"

இருவகைச் சிரிப்பையும் எதிர்த்துச் சாடுபவனையொப்ப சுந்தரம் அவர்களின் எதிரில் நின்ருன். தாரை தாரையாகக் கண்ணீர் மல்கினுன். மேனி நடுங்கியது; இதயம் நடுங்கியது. "மிஸ்டர் குருராஜ்! நீர் டாக்டரா? நீர் மனோதத்துவ டாக்டராக நடித்ததைவிட, நீர்

உண்மையான ஒரு புதல்வனுக நடித்திருந்தால்-நடந் திருந்தால் என் அன்புத் தந்தையை நல்ல படியாகக் காப்பாற்றித் தந்திருக்க முடியுமே? என் தகப்பனுரின் பணத்தில் எனக்கில்லாத அக்கறை உங்களுக்கு ஏன்? உங்கள் நாடகம் என்னை நரக லோகத்திற்கு அனுப்பி விடும் போலிருக்கிறதே?...ஐயோ...தெய்வமே...!''

சுந்தரம் ஆத்திரம் சுழித்திடக் கதறிக் கொண் டிருந்த வேளையில், அவனது சகோதரி ஓலம் பரப்பிய வாறு ஓட்டமாக ஓடி வந்தாள்.

நாகப்பச் செட்டியார் கொடுத்து வைத்தவர்!...

# வசந்தம் வந்தது!

இதயத்துடிப்பு வளர்ந்தது; துடிக்கும் நெஞ்சோடு கல்யாணி கடிகாரத்தைப் பார்த்தாள். அது அப்போது தான் ஆறு முறை தன் இதய ஒலியைப் பரப்பிவிட்ட அமைதியில் 'டக் டக்'கென்று சுருதி சேர்த்துக் கொண்டிருந்தது.

அந்தி மயங்கி வந்தது.

கை நொடிப் பொழுதிற்கு முன் கல்யாணி ஆனந்த வாரிதியில் மிதந்து கொண்டிருந்தாள். அவள் மகள் நளினு காலேஜ் முடிந்து சென்னையிலிருந்து 'வகேஷன்' லீவுக்கு வந்திருந்தாள். அவள்தான் முன்னைவிட எப்படி நகாசு பெற்று விட்டிருக்கிருள்! கல்லூரிப் படிப்பும் கல்லூரி நாகரிகமும் படிப்பித்த போதனையாக இருக்கவேண்டும். தன் மகள் ஆனாலும் தாய்க் கண் கூடப் படலாகாது என்பார்களே...! 'தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்' அவளைப் பொழுது விடியத் திருச்சியில் சேர்த்தது. தாய் மகளை அழைத்துவர 'ஆட்டோ ரிக்ஷா'வுக்கு உத்தரவிட்டாள். பிறந்த மனை மிதித்த நளினுவை அப்பொழுது ஒன்றும் தூண்டித் துருவிக் கேட்கவில்லை பெற்றவள். பிரயாண அலுப்பு; படுத்தவள் எழுந்து குளித்து முழுகிச் சாப்பிட்டு விட்டுப் புறப்பட்டாள், தன் சிநேகிதி ஒருத்தியைப் பார்த்து வர.

'மத்தியானம் போன பெண்; பொழுது அணைந்து விட்டதே! இன்னும் வீட்டுக்கு வர ஞாபகம் இருக்காதோ' என்ற குற்றச்சாட்டை மனசில் நெளிய விட்டு ஆசையுடன் மகளின் வரவுக்காக வாசலுக்கும் வெளிக்குமாகக் கல்யாணி நடந்து கொண்டிருந்தாள். ஆனந்தம் கொழிக்க நின்ற அந்த வேளையில்தான் அந்த அதிர்ச்சி அவளை மோதிற்று. கை நொடிப்பொழுதுதான் என்றாலும் அதற்குத்தான் எவ்வளவு சக்தி! அவள் முன் உலகம் ஆலவட்டம் சுற்றியது.

கைப்பிடிப்பில் கிடந்தது அந்தப் புத்தகம். மறுபடியும் பிரிந்து கிடந்த முதல் ஏட்டில் கண்கள் இழைந்தன. நீர்த்திரையிட்டது கண்ணீர். அவள் வாசித்தாள்: "அன்புள்ள கல்யாணிக்கு, அன்பளிப்பு—நாகராஜன்" என்று ஓடியது வாசகம். தன்னைப் பார்த்துச் சிரிப்பது போலத் தோன்றியது தாகூரின் அந்த நூல். அவள் புத்தக இதழ்களை நுனிவிரலால் கோதிவிட்டாள். ஏதோ ஒன்று தரையில் விழுந்தது. எடுத்தாள்; பிரித்தாள். அது ஒரு கடிதம். வாசிக்கலானாள் கல்யாணி:

"அன்புள்ள நளினா,

நீ ஊருக்குப் போனதும் என்னை மறந்து விடாமலிருக்க வேண்டுமல்லவா? அதற்காகத் தான் இத்துடன் என் போட்டோவையும் இணைத்துள்ளேன். மறந்து விடாமல் எனக்கு லெட்டர் போடு. உன்னைக் காண விரைவில் திருச்சிக்கு வருகிறேன்.

அன்புள்ள,
சேகரன்."

நெஞ்சில் பரபரப்பு ஊறியது; கல்யாணிக்குக் கடிதத்தில் குறித்திருந்த போட்டோ ஞாபகம் வந்தது. உதறினாள் புத்தகத்தை; அதில் குறிப்பிட்டபடி எந்தப் போட்டோவும் இருக்கவில்லை. 'ஒருகால் புகைப்படம் நளினா வசமிருந்தால்...' என்று எண்ணினாள்; ஊகம் 'சரி' சொல்லிற்று.

கல்யாணி மறுபடியும் கண்களைத் திறந்தாள். 'அன்புள்ள கல்யாணிக்கு, அன்பளிப்பு—நாகராஜன்' என்ற வரிகள்தாம் கண்ணிலும் கருத்திலுமாகச் சிலையோடி நின்றன. அவள் கண்கள் 'மளமள'வென்று கண்ணீரைச் சிந்தின. அவள் இதயம் பெருமூச்செறிந்தது; அதில் ஆற்றாமையுடன் ஆறாத்துயரம் முன் நின்று கதை சொல்லியது.

தூணுடன் தூணாகிவிட்டிருந்த அவள் தூணின் துணையைத் துண்டித்துவிட்டு ஓடினாள். தன் நினைவு மகள் நளினாவின் வருகையை நெஞ்சில் உணர்த்திற்று, அவளுக்கு.

"நளினா, இவ்வளவு நேரம் என்ன அம்மா செய்தாய்? எனக்கு நீ வரும் வழியைப் பார்த்துப் பார்த்துக் கண்ணெல்லாம் பூத்துப் போய்விட்டது. இப்பொழுதுதான் நல்ல உயிர் வந்தது. காலம் ஆண்டுமாறிப் போய் விட்டது. உனக்கு ஒன்று என்றால் உன் தந்தைகூட இல்லையே. நான்தானே எல்லாவற்றையும் கண்காணிக்க வேண்டியிருக்கிறது. வேளை தப்பி இனிமேல் எங்கும் இம்மாதிரிப் போகக்கூடாது. நளினா பெற்றவளின் சொல்லுக்கு கட்டுப்பட வேண்டாமா...? போய்க் காப்பியைச் சாப்பிடு. வேலைக்காரி காத்திருக்கிறாள்," என்று சொல்லிவிட்டு, மகளை நிமிர்ந்து நோக்கினாள் கல்யாணி. அன்புடன் தன் மகளைக் கடிந்து கொண்டது சற்று

எல்லே தாண்டி நின்றது போலப்பட்டது அவளுக்கு. ஆனல், மகளின் முகத்தில் தன் தவறுணர்ந்த தன்மை கோடு கோடாகப் பரவி நின்றதைத் தரிசித்தாள் தாய்.

"ஆகட்டும், அம்மா" என்று மொத்தத்தில் சொல்லி விட்டு நகரப்போனுள் நளினு. தாய் வசமிருந்த அந்தப் புத்தகத்தைக் கண்ட அவளுக்குத் திரும்பவும் திகைப்பு வளர்ந்தது. அவள் கால்கள் பின்னிக் கொண்டன.

நளினுவின் குறிப்பை அறிந்தாள் கல்யாணி. "நளினு, இந்தா உன் புத்தகம்" என்று கூறிப் புத்த கத்தை நீட்டினுள். நளினு 'வெடுக்'கென்று புத்தகமும் கையுமாக மறைந்துவிட்டாள். கல்யாணிக்கு அந்தப் புத்தகம் தன் பார்வையை விட்டு விலகினதும் ஏனே கண்ணீர் மண்டியது.

கல்யாணியின் கண்முன் அந்தப் புத்தகம் சுழன்றது. அதில் கண்ட 'அன்புள்ள கல்யாணிக்கு அன்பளிப்பு—நாகராஜன்' என்ற அந்த வரிகள் சுழன் றன. அவள் சுழன்ருள்!

"அந்த நாளில் என் அத்தான் நாகராஜன் எனக்கு அன்பளிப்புச் செய்த இந்தப் புத்தகத்தை நான்தான் அவருக்கே திருப்பி அனுப்பிவிட்டேனே! இன்றைக்கு மீண்டும் இந்த இருபது வருஷங்கழித்து என் பார்வை யில் பட்ட இப்புத்தகம் நளினுவிடம் எப்படி வந்தது?... என்று பலவாறு அவள் தன்னுள் எண்ணிப் புழுங்கினுள். அவளுக்குக் கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது. காலம், இடைவெளிவிட்டுப் பரவியிருந்த கழிந்த நாட்களே நோக்கிச் சிறகடித்துப் பறந்தது அவளது மனப்புள்.

நாகராஜனுக்குக் கல்யாணி அத்தை பெண்; நாகராஜன் கல்யாணிக்கு மாமன் மகன். உறவு முறையிலும் ஒட்டும் முறை. 'அவனுக்கு அவள்—அவளுக்கு அவன்' என்ற பரிசமும் குழந்தைகள் இருவருக்கும் காலில் நகம் முளைத்த நாள் முதலாகப் போடப்பட்டதென்னவோ மெய்யிலும் மெய்யான சேதிதான்! அவர்கள் இருவரும் குழந்தைகளாவதை நிறுத்தி, அறியும் பருவத்திற்குள் தங்களை ஐக்கியப்படுத்திக் கொள்ளும் நிலையிலும்கூட இருவர் மனமும் ஒன்றோடொன்று நெஞ்சொடு நெஞ்சாகப் பின்னிப் பிணைந்தது. அத்துடன் நின்றால் மட்டும் போதுமா ? இரண்டு தரப்புப் பெற்றோர்களும் அந்நாளில் செய்துகொண்ட ஒப்பந்தம் கல்யாணியின் தந்தைக்குப் பிறகும் நிறைவேற்றப்பட்டது. "குழந்தைகள் ஜாதகங்களைக்கூட அப்படிப் பிரமாதப்படுத்திப் பார்க்க வேண்டாம். மனப் பொருத்தம்தான் பிரதானம்........" என்ற நாகராஜனின் தந்தையின் வாக்குக்குப் பதில்வார்த்தை சொல்லவில்லை கல்யாணியின் தாய். அண்ணன் சொல்வது சரி என்பது அவள் அபிப்பிராயம். வாஸ்தவம்தான் என்ற ரீதியில் நாகராஜனும் கல்யாணியும் இன்னும் பலமாகத் தங்கள் இருவரின் பொருத்தத்தை அடித்தளமிட எண்ணினார்கள். பிரிவு அவர்களிடையே குறைந்து வந்தது. குறுநகையும் குதூகல மொழியும், கண்ணடிப்பும் கள்ளவிழிப் பார்வையும் அவர்களிடையே 'எக்சேஞ்ச்' ஆயின. பின் கேட்பானேன்! நாகராஜன் கலைப் பைத்தியம் கொண்டவன். கதை, நாவல் என்றால் அவனுக்குப் 'பாதாம்கீர்' பருகுவதுபோல. கல்லூரி செல்லும்போது கண்ணீருடன் கல்யாணியைப் பிரியும் நாகராஜன் கல்லூரி விட்டுத் திரும்புங்கால ஆனந்தம் முகமன் கூற, பாவைக்கு வகை வகையான உடை வகைகள்

சலசலக்க, இலக்கியச் சந்தையில் வெளிவந்த புதுப் புத்தகங்கள் புன்னகைக்க அமர்க்களமாக வந்து சேருவான். அவளுக்கும் அப்போதுதான் உடலில் உயிர் தரிக்கும்; அவனுக்கும் அப்படித்தான்!

காலத்தேருக்கு 'ஹோல்டான்' போட யாரால் முடியும்? நாகராஜனையும் கல்யாணியையும் தம்பதிகளாக்கத் திட்டமிட்டார்கள் உடையவர்களும் உரியவர்களும். அப்பொழுது நாகராஜன் பி.ஏ. எழுதிவிட்டு வந்திருந்தான். அதே சமயம்தான் திருமணச் செய்தியும் துவங்கியது. அதே கணம்தான் அந்த எதிர்பாராத சம்பவமும் நடந்தது. 'கல்யாணியைத் தான் மணக்க முடியாதென்று, இருந்திருந்தாற் போல ஒரு வெடிக் குண்டைத் தூக்கிப் போட்டான் நாகராஜன்! அது பாவம், கல்யாணியின் தலையில் 'டபீ'ரென்று விழுந்து வெடித்தது. 'தனக்குத் தன் அத்தான்தான் இனி சகலமும்' என்றிருந்த அவள் ஆசைமிக்க இன்பக் கனவு கடைசியில் இப்படித் தேய்ந்து உருக்குலைந்து போகுமென்று அவள் துளியும் எதிர் பார்த்தவளல்லவே...!

நாகராஜனை அவன் பெற்றோர்கள் கல்யாணியை மணக்குமாறு எவ்வளவோ வேண்டிக் கொண்டனர். அவன் மறுத்து விட்டான். கடைசியில் ஒட்டிய - ஒட்ட வேண்டிய இரு குடும்பங்களும் இரட்டைத் துருவங்களாகிவிட்டன. நாகராஜனும் கல்யாணியும் பிரிந்தார்கள்—பிரிக்கப்பட்டார்கள்—பிரிய நேர்ந்தது! தனக்கு அன்பளிப்புச் செய்த புத்தகம், புடவை வகையறுக்களைத் திரும்ப அனுப்பிவிட்டாள் கல்யாணி, நாகராஜனுக்கு. நாகராஜனுக்கு அடுத்த மாதமே பெரிய இடத்தில் கல்யாணமாகி பம்பாய் சென்று விட்டதாக அறிந்தாள் மூன்றுமவர் மூலமாக. கல்யாணியும் வாழ்க்

கையில் அடியெடுத்து வைத்தாள். அதிருஷ்டம் அவளை ஒருவகையில் கடைக்கண்பார்த்தது. பணக்கார வக்கீல் ஒருவருக்கு 'இரண்டாம் தாரமாக'வாழ்க்கைப்பட்டாள் திருச்சியில். இல்லறவாழ்வு அவள்வசம் இருபது ஆண்டு அனுபவத்தை அளித்தது. அதற்குள் அவள் 'விதவைக் கோலம்' பூண்டாள். தன் ஒரே மகள் நளினிதான் அவளுக்கு எல்லாமாக நிழலாடினுள். ஆனுல் நாக ராஜனைப் பற்றி மட்டும் அப்புறம் அவள் காதுகளில் எந்தத் தாக்கலும் விழவில்லை. ஏனே அதைப்பற்றி அக்கறைப்படக்கூட மனம் இடம் தர ஒப்பவில்லை. இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில்தான் அந்தப் புத் தகம்—அவளுக்குத் தன் அத்தானுல் என்றே அன்பளிப் புச்செய்யப்பட்டுப் பிறகு விதி வசத்தால் கை மாறிய அதே புத்தகம் கல்யாணியின் கண்களில் அன்று பட்டு விட்டது. அப்போதைய அவள் உள்ளத்தை யார்தான் அறிய முடியும்...? வாழ்வே அறியக்கூடாத தொன்றுதானே...!

ரேடியோவில் அதுதான் கடைசி நிகழ்ச்சி. இசைத்தட்டு சங்கீதம் நடந்து கொண்டிருந்தது.

படுக்கையில் சோர்ந்து சாய்ந்திருந்தாள் கல்யாணி. அவள்மனம் அலைகடலாகக் கொந்தளித்துக் கொண் டிருந்தது. மகளை எண்ணினுள். நளினி ஆழ்ந்த நித்திரை வசப்பட்டிருந்தாள். அவள் இதழ்கள் முறுவல் கீற்றை உருவாக்கிக் கொண்டிருந்தன. ஆசைக்கனவு ஒன்றை அவள் கண்டிருக்க வேண்டும்.

கய்யாணிக்கு நேற்றுப் பார்த்த தாகூரின் அந்தப் புத்தகம் நினைவு வந்தது. அவள் மெல்ல எழுந்தாள். நளினியின் அறை அது. மேஜைமீது ஒட்டப்படாமல், ஆனுல் தபாலில் சேர்ப்பதற்குரிய ஆயத்தங்களுடன்

வைக்கப்பட்டிருந்தது ஒரு கவர். ஓசைப்படாமல் பிரித்தாள்.

"அன்புள்ள சேகரன் அவர்களுக்கு,

தங்கள் குறிப்பு—நினைவுக் கடிதம் பார்த்தேன். நான் உங்களை மறப்பதா? நீல வானை நிறைமதி எங்ஙனம் மறக்கும்...? என் தந்திரம் பலித்தது. என் அன்னைக்கு அந்நாளிலே உங்கள் தந்தை அன்பளிப்புச் செய்த அந்தப் புத்தகத்தை என் அன்னையின் பார் வைக்கு இலக்காக்கி விட்டேன். சலனம் பிறந்தது. 'நம் பெற்றோர்களிடையே அன்று நிலவி, பின் அறுந்து விட்ட அந்தப்பாசமும் பிணைப்பும் மீண்டும் நம் இணைப்பில் புத்துயிர் பெற்று நம் கனவும் பலித மடைந்துவிட வேண்டும். நானே இதோ அம்மாவிடம் நம் காதலை விளக்கி நம் கல்யாணம் பற்றிய ஓர் முடிவைக் காணப்போகிறேன். அம்மா உடன்பட்டு விடுவார்கள். நான்தானே அம்மாவுக்கு எல்லாம்! உங்கள் வசந்த வருகைக்கு இந்த வானம்பாடி ஆவலே உருவாகக் காத்திருக்கிறது...!

தங்கள்,
நளினா."

கல்யாணி நட்டுவைத்த கம்பமாக நின்றாள். மலையாகக் கனத்தது அவள் தலை. அழுந்தப் பிடித்தவாறு திரும்பினாள். என்ன ஆச்சரியம்! அங்கே கிடந்தது ஒரு போட்டோ. அதில் சேகரன் என்ற பெயர் காணப்பட்டது. அந்தப் புகைப்பட உருவத்தைக் கண் கொட்டாமல் பார்த்தாள். தன் அத்தான் நாகராஜனின் அசல் ஜாடையை அவள் அந்தப் படத்தில் பார்த்தாள். 'தன் அத்தானின் மகன்தான் சேகரன்' என்று முடிவு செய்தாள் அவள். உண்மையும் அதுதானே...!

புதையுண்ட கடந்த காலக் கனவுகளை எண்ணினுள் கல்யாணி; திடுதிடுப்பென்று சொல்லாமல் கொள்ளாமல் அறுந்துவிட்ட தனக்கும் தன் அத்தான் நாகராஜனுக்கு முள்ள பாசத்தை எண்ணினுள். மின்னுமல் முழங்கிவிட்ட இடி தன்வாழ்வை நீறுபூத்த நெறுப்பாக்கிவிட்டதை அவள் மறப்பது எப்படி? வெண்ணெய் திரண்டு வரு கையில் தாழி உடைந்த கதையாகத் தன்னைக் கைவிட்ட தன் அத்தானின் வஞ்சனை அவளை நெருப்பாகச் சுட்டு விட, அந்நிகழ்ச்சி அவள் நெஞ்சத்தில் அணையாத் தீயாகப் புகைந்து வருவதை அவள் எப்படிக் கட்டுப் படுத்துவாள்?

துவளும்கொடி, வெய்யிலில் வாடி வதங்குவது போல நளினி ஆனுள்.

"அம்மா, நானே உன்னிடம் சொல்ல வேண்டுமென்றி ருந்தேன். என்னை மாப்பிள்ளை யாரும் வந்து பார்த்து என் கல்யாணத்தை 'செட்டில்' பண்ணவேண்டிய ஜோலியே இல்லை. நானே எனக்குரியவரை வரித்து விட்டேன். நமக்கு நெருங்கிய உறவினர். பெயர் சேகரன். அவர்கூட இன்று நாளை வருகிருர். அவர் யார் தெரியுமா? உன் அத்தான் நாகராஜனுடைய ஏக புதல்வன். பிரிந்துவிட்ட நம் குடும்பங்கள் இணைந்து வாழ வேண்டுமென்பதே சேகரனின் தந்தையின் ஆசை யாம். இதைப் பலமுறை சொல்லியிருக்கிருராம். அம்மா எங்கள் ஒன்றுன உள்ளங்களைப் பிரித்துவிடாதே..." என்று நளினி சொல்லும்போதே குறுக்கிட்டாள் கல்யாணி.

"போதும் நிறுத்து, நளினு பழைய ராமாயணம் இனி எதற்கு? இழந்த உறவு இனி என்றுமே புத்துயிர் காண முடியாது. உன் தந்திரம், உன் கடிதம், சேகரனின்

கடிதம, அவர் புகைப்படம் எல்லாவற்றையும் நான் அறி வேன். நளினு, நான் என் அத்தான் நாகராஜனை மறந்து எத்தனையோ ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. என்னை நம்பவைத்துக் கைவிட்ட துரோகியின் மகனுக்கா நீ வாழ்க்கைப்பட மனம் ஒப்புவேன்? ஒரு நாளும் இல்லை. நீ சேகரனை மறந்துவிடு...'' என்று கூவினுள் கல்யாணி, ஆத்திரம் குரலில் குதிபோட.

நளினு ஓடிப்போய் படுக்கையில் குப்புற விழுந்து விம்மி விம்மி அழுதாள். சேகரனுக்கு 'போஸ்ட்' செய்ய விருந்த கவரைச் சுக்கல் நூருகக் கிழித்தாள். அவள் கைகள் நடுங்கின. கண்கள் மாலைதொடுத்துத் தரையில் விழுந்தன.

**நா**ட்கள் சில, வழிக்கு வழி ஈடு காட்டியவாறு ஓடின.

நளினு சதா சர்வகாலமும் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகவே இருந்தாள். அவள் உண்ணவில்லை; உறங்கவில்லை. கல்யாணி 'நயம் பயமாக' எவ்வளவு சொல்லியும் நளினு கேட்கவில்லை. சிதைந்த காதல் அவளைச் சிதைத்து வந்தது. கல்யாணிக்குப் பயமாகி விட்டது. அன்று மாலை மகளின் அறைக்குச் சென்றுள்; அங்கே நளினு இல்லை. பதிலாக தாய்க்கு ஒரு கடிதம் இருந்தது.

அம்மா,

சேகரன் இல்லாத வாழ்வு எனக்கு இப் பிறப்பில் வேண்டவே வேண்டாம். சேகரனைத் தேடிப் புறப்படுகிறேன். மன்னித்துக்கொள்.

நளினு.''

கல்யாணிக்குத் தலை சக்கரம் சுற்றியது. அன்றைக் குத் தன்னிடம் வாதாடிய மகளின் இதய ஒலியை நினை

ஓட்டிப் பார்த்தாள். இந்தக் கடிதமும் அவள்முன் பேய்ச் சிரிப்புச் சிரித்தது. அதே க்ஷணம் மின்ன லொன்று அவள் மனவானில் கோடிழுத்துப் பாய்ந்தது. அடி நாளில் அவளைத் தன் அத்தான் நாகராஜன் கை விட்டுச் சென்றபோது அவள் பட்ட வேதனையையும், கொட்டிய கண்ணீரையும் நினைத்துப் பார்த்தாள் கல்யாணி. அதே நிலையில்தானே இப்பொழுது தன் மகள் நளினுவும் நிலைகுலைந்து புறப்பட்டிருப்பாள் என்ற உணர்வும் 'கிட்டி' கட்டிப் பாய்ந்தது, அவள் நெஞ்சில்.

'என்னை என் அத்தான் கடைசி நேரத்தில் மணக்க முடியாதென்று கைவிட்டதற்கு, அவர் மகனிடம் நான் பழி வாங்குவதா? ஒட்டிய, சேகரன்—நளினு ஆகிய இரட்டை உள்ளங்களைப் பிரிப்பதா? வேண்டவே வேண்டாம்! இதோ இப்போதே நளினுவைத் தேடி அவள் இஷ்டப்படியே சேகரனையே அவள் மணக்கச் செய் கிறேன்....' என்று எண்ணியவளாக, மகளை எங்கும் தேடினுள். கடைசியில் ரயிலில் சென்னைக்குப் புறப்பட விருந்த நளினுவைக் கையும் மெய்யுமாகப் பிடித்து விட்டாள் கல்யாணி. சேகரனை மணப்பதற்கு தன் பூரண சம்மதத்தையும் தெரிவித்து வீட்டுக்குக் கூட்டிவந்தாள்.

அங்கு இரண்டு கடிதங்கள் காத்திருந்தன. ஒன்று நளினுவுக்கு; மற்றது கல்யாணிக்கு.

## முதல் கடிதம் :

''நளினு,

நேற்று கார் விபத்தில் அகப்பட்ட நான் ஒற்றைக் காலை இழந்து நொண்டியாகிவிட்டேன். என்னை மறந்துவிடு.

**சேகரன்.''**

## இரண்டாவது கடிதம் :

''அன்புள்ள கல்யாணி,

பல பல வருஷங்கள் மறைந்து, என்னுடைய இக் கடிதத்தைக் காணும் நீ அதிசயப்படுவாய்; ஆத்திரப் படுவாய். இல்லையென்றால், உன் மகள் நளினாவும் என் மகன் சேகரனும் தம்பதிகளாவதைத் தடுத்திருப்பாயா நீ? நான் உன்னை வஞ்சிக்கவில்லை. விதி நம் இருவரை யும் வஞ்சித்துவிட்டது. என் ஜாதகத்தைப் பார்த்தவர் எனக்கு 'தாரதோஷம்' இருப்பதாகப் பயமுறுத்தினார். உன்னைக் கரம் பற்றி அதன் விளைவால் உன்னை நான் இழக்கத் துணியவில்லை. அன்றுபோல-என்றென்றுமே நீ என் கனவுப் பதுமையாக நிலவவே நான் ஆசைப் பட்டேன். உலகின் எங்கோ ஓர் மூலையில் நீ உயிருடன் இருந்தால் என்றாகிலும் ஓர் நாள் காணலாமல்லவா? என் உடலின் உயிர்ப்பே நீயல்லவா? உண்மைக் காரணத்தை வெளியிட்டால் அதன் பலன் எந்த வகையில் நம் இரு வரையும் பாதிக்குமோ என்றஞ்சியே நான் உன்னை நிரா கரித்துவிட்டேன் பொதுவாக. எனக்கு வாய்த்தவளும் சேகரனை ஈன்றுவிட்ட மறு நிமிஷம் விதிவழி ஏகி விட்டாள். கடைசியில் என் 'தாரதோஷம்' மெய்யா கிற்று. உன்னைத் துறந்த நினைவு, என் மனைவியின் பிரிவு எல்லாம் சேர்ந்து என்னைக் கிறுக்கனாக்கியது; என் செல்வக் குழந்தையையும் துறந்து கால்போன திக்கில் எங்கும் சுற்றினேன். நேற்றுத்தான் திரும்பி னேன், சேகரன்—நளினா இருவரின் ஒன்றுபட்ட மனத்தைக் கேள்விப்பட்டு, உன் முகம் காண, உன்னிடம் கதை முழுவதையும் சொல்ல நான் வந்த சமயம்தான் நீ உன் மகளைக் கோபித்துக் கொண்டாய். கல்யாணி குழந்தைகளைப் பிரிக்காதே. நாம் பிரிந்தது போதாதா?''

நம் பழைய பாசமும் பிணைப்பும் அவர்கள் மூலமாவது புத்துணர்வு பெறட்டும். நல்ல முடிவு என் காதில் விழச் செய். என்னை மீளவும் பைத்தியமாக்கிவிடாதே...! நளினா—சேகரன் வாழ்வில் வசந்தம் நிலவச் செய்!

நாகராஜன்."

தாயும் மகளும் 'ஹோ'வென்று ஓலமிட்டு அலறினார்கள்.

டாக்ஸி காத்து நின்றது. சேகரனைக் காணப் பட்டணத்துக்குப் புறப்படவிருந்தார்கள் கல்யாணியும் நளினாவும்—தாயும் மகளும்!

அதே சமயம் வாசலை அடைத்துக் கொண்டு வழி மறித்தாற்போல அங்கு வந்து நின்றது மற்றொரு கார். அதிலிருந்து இறங்கியவர்கள் கல்யாணியின் அத்தான் நாகராஜனும், நளினாவின் காதலுக்குரிய சேகரனும்!—தந்தையும் மகனும்!

"அத்தான்" என்று அழைத்தாள் கல்யாணி.

"சேகர்" என்று கூப்பிட்டாள் நளினா.

"கல்யாணி, அன்று நீ உன் மகளுடன் அவள் என் சேகரை மணப்பதை மறுத்து உரையாடிக் கொண்டிருந்ததை நான் கேட்டேன். அதே சமயம் என் சேகரும் உன் ஆத்திர மொழிகளைக் கேட்டானும். அவள் தன்னை மறக்க வேண்டுமே என்பதற்குத்தான் தனக்கு விபத்தில் கால் நொண்டியாகிவிட்டதாகப் பொய் எழுதிவிட்டிருக்கிறான். நான் உனக்குக் கடிதம் எழுதிப் போட்ட பிறகு, நீ உன் மகளிடம் அவள் மனம்போல என் மகனை மணப்பதற்குச் சம்மதம் தெரிவித்ததையும் கேட்

டேன். உடனே பட்டணத்துக்குப் புறப்பட்டுச் சென்று சேகரனை இட்டுவந்தேன். சற்று பின்தங்கியிருந்தால் கூட, நான் என் மகனைக் கண்டிருக்க முடியாது. உன் நல்ல முடிவைக் கேட்டதும்தான் அவனுக்குக் களை தட்டியது முகத்தில். விதி நம்மைப் பிரித்தது. ஆனால் நம் குழந்தைகள் விஷயத்தில் அனுசரணை புரிந்துள்ளது நம் பாக்கியமே! சேகரன்—நளினி ஜாதகங்கள் பெட்டியும் பேழையுமாக மணியாகப் பொருந்தியுள்ளன....'' என்று நிறுத்தினான் நாகராஜன், ஆனந்தம் குரலில் வரிசை செலுத்த.

“அத்தான், நீங்கள்தான் நம் குழந்தைகளின் கல்யாணத்தைச் சிறக்க நடத்தி வைக்கவேண்டும்....'' என்றாள் கல்யாணி, ஆனந்தக் குரலில் அன்பு வெள்ளம் பொங்கிக் கொப்புளிக்க.

அப்பொழுதுதான் ஒருவரையொருவர் புதிதாகப் பார்த்துக் கொள்ளுவதைப் போல சேகரனும் நளினியும் புன்னகையும் புது நிலவும் பொங்கப் பார்த்துக் கொண்டார்கள்!

# கண்ணகிச் சிலம்பு

டுமீல்! டுமீல்!

துடிக்கும் நெஞ்சோடு பரபரப்புடன் திரும்பினார் ஆதிமூலம். கண் புருவங்கள் நெற்றி மேட்டில் ஏறிக் கொண்டன; கண்களில் ஆச்சரியம் இருந்தது. அளவிறந்த முறையில் இயங்கிய இதயத் துடிப்பின் வேகம் குறையவில்லை. எதிர் வீட்டில் நிலைத்து விட்டிருந்த பார்வையை அவர் எடுக்கவே இல்லை. 'டாக்டர் சேகரன்' என்ற பெயர்ப் பலகையில் பதிந்திருந்தது. அவரது பார்வையும் கவனமும். வாசலை ஒட்டியிருந்த அறையில் டாக்டருடன் புது நண்பரொருவர் கைத் துப்பாக்கியை வைத்துக்கொண்டு 'டுமீல்! டுமீல்' வெடி விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தார், சிறு குழந்தைகளைப் போல. ஆனால் அவர் சிறு குழந்தை அல்ல !

ஆதிமூலத்துக்கு நெஞ்சில் நினைவு உணர்வுதந்தது; உயிர்ப்பு தந்தது. ஆம்; தன்னையே மறந்து போயிருந்த மோன நிலைக்குத்தான் சற்று முன் வெடித்த அந்த 'டுமீல்' நாதம் முற்றுப் புள்ளி வைத்தது.

"அப்பா!"

கிணற்றுக்குள்ளிருந்து கூப்பிடுவது போல ஒரு அழைப்புக் குரல் வந்தது. ஓடினார் ஆதிமூலம். செம் பவளம் கூப்பிட்டாள். அவள் அவரது ஏக புதல்வி. தாயின் மரணத்துக்குக்பின் அவளுக்கு அவர்தான் தாயின் பொறுப்புக்கும் ஓர் உருவாக விளங்கினார். செம்பவளம்தான் ஆதிமூலத்துக்கு உயிர், உயிர்ப்பு, ஏன், அவள்தான் அவருக்கு உலகம்!

அழகுத் தேவதை வைத்த அழகுப் போட்டியில் முதற் பரிசை அடைந்த வாலைக் குமரி செம்பவளம். பருவத்தின் பரிபூரண கடாட்சத்துக்கு ஒப்பில்லாத எடுத்துக் காட்டு அந்தப் பெண்.

*"அப்பா! அப்பா!"*

ஆதிமூலத்தின் பெற்ற மனம் பதை பதைத்தது. தன்னை மறந்த நிலையில் அவள் பிதற்றிக் கொண்டிருந் தாள். நாடி பிடித்துப் பார்த்தார் அவர். ஜுர வேகம் துளியும் குறையவில்லை. நெருப்பை வைத்துக் கட்டினாற் போல அவள் உடம்பு கொதித்தது. உடலெங்கும் காஷ்மீர் கம்பளங்கள் போர்த்தப்பட்டிருந்தன. இருந் தும் அவளைக் குளிரின் வேகம் தூக்கித் தூக்கிப் போட்டது.

மருந்துத் தூளும் சூரணமும் தேன் சீசாவும் கஷாயம் தயாரிக்கப்பட்டிருந்த பாத்திரமுமாகச் சின்ன நாட்டு ஆஸ்பத்திரியே அப்பொழுது அங்கிருந்தது. மூன்று நாளாக இரவும் பகலுமாக விடாமல் அடித்த காய்ச்சலின் வேகம் கிஞ்சித்தும் கம்மிப் படவில்லை, செம்பவளத்துக்கு. ஆதி மூலத்துக்கு அவள் வியாதி மட்டுப்பட மறுத்தது. அது அவருக்கு மாளாத மலைப் பையும் மீளாத வேதனையையும் தந்ததில் வியப்பில்லை! நாட்டு வைத்தியர் ஆதிமூலத்தின் நாடிச் சோதனைக்குத்

தலை வணங்காத எந்த வியாதியையும் அவரது அறுபது வயது வாழ்க்கையில் சந்தித்ததில்லை. அவருக்குத் தம் செல்வ மகளின் நோய் சோதனையாக வாய்த்திருந்தது!

"அண்ணாச்சி, ஜில்லா போர்டு டாக்டர் சேகரன் கிட்டே உங்க பெண்ணைக் காண்பியுங்க. உங்க வைராக்கியத்தைப் பலப்படுத்திக்க இது சமயமில்லை. பேசாமல் நான் சொல்றபடி செய்யுங்க, அண்ணாச்சி."

சற்றுமுன், தன்மீது உரிமை கொண்ட உறவினன் ஒருவன் கூறிச் சென்ற வார்த்தைகள் ஆதிமூலத்துக்கு நினைவில் ஓடின. சிலையாகிப் போனார் அவர்.

டாக்டர் சேகரன் ஒரு எம். பி. பி. எஸ். இளைஞர்; நல்ல இதயம் படைத்தவர். பட்டணத்துப் படிப்பு அவரைப் பாமர ஏழை மக்களிடையே தொண்டு செய்யத் தூண்டியது. ஏழையுடன் ஏழையாக அவர் வாழ விரும்பினார். பூவைமாநகர் அவரை வரவேற்றது. ஊர் சிறியது. அங்குள்ள இளைஞர் சங்கம் அவரது தாற்காலிகமான ஆஸ்பத்திரியாகப் பரணமித்தது.

டாக்டர் சேகரன் லட்சியவாதி. அதற்குச் சந்தர்ப்பங்கள் கை கொடுத்து உதவின; ஊருக்குப் புதிதாக வந்தவரானாலும் விரைவில் நிறையக் கேஸ்கள் வந்தன. அவரது குண நலத்தாலும் கைராசியாலும் பெயரும் புகழும் வளர்மதியாகிப் பரவியது.

ஆதிமூலம் அவ்வூர் நாட்டு வைத்தியர். பரம்பரைப் பட்டம்! டாக்டர் சேகரன் வருவதற்கு முன் ஆதிமூலத்தின் ராஜ்யம்தான் அந்தக் கிராமத்திலும், அதைச் சுற்றியிருந்த பதினாறு சிற்றூர்களிலும். டாக்டர்

சேகரன் வந்த ஒன்றிரண்டு மாதங்களுக்குள் மக்களிட மிருந்து நல்ல பெயர் சம்பாதித்துக் கொண்டதில் ஆதி மூலத்துக்கு உள்ளூரப் பொறுமை. 'இதெல்லாம் ஏதோ கத்துக் குட்டிகள்; ஏதோ வாய்த்தான் பிழைத்தான் வியாபாரம், என்று எண்ணி உதட்டைப் பிதுக்கியவர் களுக்கெல்லாம், நாட்டுவைத்தியர் தலைவராகவும் போஷ கராகவும் விளங்கினர். கை மருந்தாக ஏதோ ஏட்டில் படித்தது துளியும், வாரிசு வாடை கொஞ்சமும், அனு மானம் கொஞ்சமுமாகத் தனி அரசு செலுத்தி வந்த வராயிற்றே ஆதிமூலம்! புதுப் புள்ளியான சேகரன் என்றால் அவருக்கு ஏழாம் பொருத்தம். ஒரே துறையில் நிகழும் போட்டியின் விளைவு இது. இங்கிலையிலே டாக்டர் சேகரனிடம் தம் மகளைக் காண்பித்து வைத் தியம் செய்வதென்றால்......? நாட்டு வைத்தியர் ஆதி மூலத்துக்கு மனம் ஒப்பவில்லை.

'கத்துக்குட்டி சேகரன் கிட்டே அதுவும் என் மகளுக்கு வைத்தியம் பார்க்கிறதாமே...ஹூம்; மாட் டேன். இந்தச் சேதியைக் கேட்டாக்க ஊரே சிரிக்குமே! ஆதிமூலத்தைப் பத்தி......ஊஹூம்; மாட்டவே மாட் டேன்......காளி ஆத்தா, நீதான் கண்திறந்து என் ஒரே குழந்தையைக் காப்பாத்தணும்; என் மானத்தையும் மதிப்பையும் காப்பாத்தவேணும்......'

ஆதிமூலத்தின் கண்களில் ஒரு சில பனித்துளிகள் அரும்பிச் சிதறலாயின. மௌனமாகப் பிரார்த்தித் தார்; மறுகணம், மறந்து போன ஏதோ ஒன்றைச் 'சடக்'கென்று நினைவு கூர்ந்தவராக உள்ளே ஓடினர். ஆசை மகளின் ஆற்றுமையும் அங்கலாய்ப்பும் அவருள் வேதனைப் புயலைக் கிளறிவிடத் தவறவில்லை.

ஆனல்......!

ஆதிமூலம் உயிரே பறி போனவர் போலத் திகைத் தார்; திக்குமுக்காடினார்; திண்டாடிப் போனார்.

'கண்ணகிச் சிலம்பைக் காணலேயே. ஐயையோ, காளி ஆத்தா இதுவும் உன் சோதனைதானா? என்றும் இல்லாத திருநாளாகச் சிலம்பை எங்கேயும் காணோமே!'

'கண்ணகிச் சிலம்பு' வெள்ளியாலான காற்சிலம்பு போன்ற அணி, உள்ளே வெண்முத்துக்கள் குலுங்கும். பத்தினித் தெய்வம் கண்ணகியின் வழித் தோன்றல் களான ஆதிமூலத்தின் வம்சத்தினருக்கெல்லாம் கண் ணகிச் சிலம்புதான் கண்கண்ட தெய்வம். சங்கடம் நேர்ந்த சமயமெல்லாம் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் கடவுள் அது. சிலம்பை வணங்கிக் கண்ணில் ஒற்றிக் கொண்டால், அவர்கள் எண்ணியவை கை கூடும். இது அவர்களிடையே வளர்ந்து வந்த நம்பிக் கை. அந்த நம்பிக்கைதான் அவர்களுக்குச் சகலமும்!

ஆதிமூலம் சிறு குழந்தை போல் விம்மினார், இருந்திருந்தாற்போல அவர் இதயத்தில் தீர்மானமான தொரு முடிவு பிறந்தது. 'ஆமாம்; இது எல்லாம் தெய்வ சோதனை கணக்கிலேதான் நடந்திருக்குது. இல்லாத போனா கண்ணகிச் சிலம்பு காணாமப் போகுமா? என் மருந்துக்கு மசியாமல் மூணு நாளா மகளுக்குக் காய்ச்சல் போட்டு ஆட்டி வைக்குமா? செம்பவளம், நீதானே எனக்கு உயிர் உலகமெல்லாம்? இதோ இப் போதே டாக்டர் சேகரனுக்கு ஆள் அனுப்பி வைக் கிறேன்......' என்று அவர் தனக்குள் முணு முணுத்துக் கொண்டார்.

**டா**க்டர் சேகரன் அப்பொழுது வெளியே கிராம மொன்றுக்குப் புறப்படப் போனார். வேலைக்காரப்

பையன் மருந்துப் பெட்டியை 'சைக்கிள் காரியரி'ல் இணைத்துக் கட்டிவிட்டுத் திரும்பினான். சைக்கிளும் கையுமாக டாக்டர் புறப்பட்டார். ஆஸ்பத்திரிக் காம்பவுண்டைத் தாண்டிச் சென்று சந்துமுனையில் அவர் திரும்பினார். சந்துமுனை அல்லவா? மணி அடித்தார், எதிரே மணி சலசலக்க வந்த வில் வண்டி அவரைக் கண்டதும் 'டக்'கென்று நின்றது. அடுத்தவினாடி தன்னை அப்படியே மறித்து விடுபவனைப் போல ஒருவன் வியர்க்க விறுவிறுக்க வந்து நிற்பதைக் கண்டதும். சேகரன் சைக்கிளை விட்டுக் கீழிறங்கினார்.

"டாக்டர் எசமான், நாட்டு வைத்தியர் ஆதிமூலம் ஐயா மகளுக்கு மூணு நாளா விடாத சுரமுங்க. ஐயாவே உங்களைக் கையோட வண்டியிலே கூட்டியாரச் சொன்னாங்க."

"என்ன, செம்பவளத்திற்கா ஜுரம்? சரி புறப்படு. நான் சைக்கிளில் நொடியில் போய்ச் சேருகிறேன்" என்று சொல்லிவிட்டு டாக்டர் சேகரன் பெடலை அழுத்தினார். மனம் சிந்திக்கத் தொடங்கியது.

அப்பொழுது டாக்டர் சேகரன் கிராமத்தில் பணியாற்றி வந்த புதிது. வடிவேலு கிராமத்துக் குடியானவன். அவன் குழந்தைக்கு ஜுரம் என்று ஓடி வந்தான். சேகரன் சென்று குழந்தையைப் பரிசோதித்து மருந்துகள் கொடுத்தார். இஞ்செக்ஷன் ஒன்று போட்டு, 'பத்தியத்'தையும் கூறிப் புறப்பட்டார். ஆனால், அந்தக் குழந்தை இரவு நெடுநேரமாகியுங்கூடக் கண் திறக்கவில்லை; பெற்றவர்கள் துடித்தனர். 'பச்சைப் புள்ளைக்கு யாராச்சும் ஊசி போடுவாங்களா? நாம் முன் பின் கண்டறியாத புது வளக்கமாயில்லே இது இருக்குது? நாட்டு வைத்தியர் ஆதிமூலம் ஐயா கிட்டே காட்டி

ரெண்டு தூளுப்பொட்டணம் வாங்கிக் கொடுத்திருந்தா இம்மாங்காட்டி புள்ளே விளையாடிக் கிட்டில்லே இருக்கும்!'' என்று தூபம் போட்டார்கள் பட்டிக் காட்டுப் பாமரர்கள் சிலர்.

நாட்டு வைத்தியர் ஆதிமூலம் அழைத்து வரப் பட்டார். 'டாக்டர் ஊசிக்கும் நாட்டு மருந்துக்கும் ஒன்றுக்கொன்று ஒத்து வருமோ, என்னவோ?...ஏதோ பகவான் பேரிலே பாரத்தைப் போட்டுப் பார்க்கிறேன்' என்று கிலியை ஊட்டிய பிறகு, தூள் ஒன்றைத் தேனில் குழைக்கலானார் வைத்தியர்.

சொல்லி வைத்த மாதிரி 'டாண்' என்று அங்கு டாக்டர் சேகரன் தோன்றினார். ''குழந்தைக்கு எந்த விதப் பயமும் இல்லே. ஊசி போட்டதின் மயக்கம்தான். வேறு மருந்து கொடுத்துக் குழப்பி விடாதீர்கள்!'' என்றார்.

மறுகணம், ''ஆளைப் பாருடா ஆளை, இன்னும் புத்தி வரல்லே. டாக்டராமே இவன்? ஊசி போட்டாரா மில்லே பச்சைப் பாலகனுக்கு ஊசி! இந்த வியாபாரம் எல்லாம் இங்கே செல்லாது, தம்பி! பட்டணத்திலேயே மூட்டை கட்டி வச்சுக்கிடு...'' என்ற கூக்குரல்கள் எழுந்தன. ஆத்திரக் கூச்சலும் ஆரவாரமும் ஏசலும் உச்ச நிலை அடைந்தன. நல்ல வேளை, அந்தத் தருணம் அங்கு தோன்றினாள் அந்தப் பெண். அவ்வளவு பேரும் அடங்கி விட்டார்கள், 'அடே நம்ப வைத்தியர் ஆதி மூலம் ஐயா பொண்ணில்ல!' என்ற மௌன மொழிப் பரிமாறலுடன்.

டாக்டர் சேகரன் புழுவாய்த் துடித்தார். தமக்கு, விவரம் தெரியாதவர்கள் விளைவித்த அவமானத்துக்

காக அவர் வருந்தவில்லை. ஆனால் அவர்களது அறியா மைக்கு வருந்தினார்; நிலைகுலைந்து போனார்.

"வருந்தாதீர்கள், டாக்டர் ஸார்! இந்த கிராமத்துப் பட்டிக்காட்டு ஜனங்களே இப்படித்தான். தாங்களும் சுயமாகத் தெரிந்து கொள்ள மாட்டார்கள். பிறர் சொல்வதையும் கேட்டு நடக்க மாட்டார்கள். பாவம், படிப்பு வாசனை துளியாகிலும் இருந்தால் இப்படி யெல்லாம் நடப்பார்களா? என் பிறந்த மண் சார்பிட்டு நான் மன்னிப்புக் கோருகிறேன் தங்களிடம்?" என்றாள் அவள். டாக்டருக்கு நேர்ந்த இடுக்கண் குறித்து அவமானமும், கிராம மக்கள் மீது கொண்டுள்ள அவளது ஆத்திரமும் அவள் சொற்களில் இழையோடி நின்றன. அவள்தான் செம்பவளம்!

செம்பவளத்தின் முகத்தைச் சேகரனால் மறக்க முடியவில்லை. அதற்காகவேதானோ என்னவோ அவளும் தன் நினைவு முகத்தை அடிக்கடி டாக்டர் முன் ஆஜர்ப் படுத்தி வந்தாள். செம்பவளம் எஸ். எஸ். எல். ஸி. படித்தவள்; இங்கிதம் பயின்றவள். டாக்டர் சேகரன் என்றால் அவளுக்கு உயிர்.

"டாக்டர் ஸார், ஒன்று சொல்லுகிறேன். இந்தப் பட்டிக்காட்டு மக்களிடையே உங்களது லட்சியம், சேவை எதுவும் பலன் கனியச் செய்யாது என்று நம்பு கிறேன்..."

"செம்பவளம், உன் கருத்து தவறு. கிணற்றில் தூறு படிந்திருந்தால் அதை அகற்றி, கீழே ஊறும் அமுத மயமான நீரைப் பயன் படுத்த வேண்டுமே அல்லாது, கிணற்றையே மூடிவிடலாகுமா? கிராம மக்களது மாசு படிந்த உள்ளங்களைப் புடமிட்ட பொன்னாக மாற்றுவது நம்மைப் போன்ற படித்தவர்

களிடமே உள்ளது. இது நம் காந்தி மகாத்மாவின் கனவும் ஆகும். நான் சொல்கிறேன். என் லட்சியம், கனவு எல்லாம் விரைவிலேயே இம்மக்களிடையே பலன் காட்டும்! என் பொறுமையும் பணிவும் நிச்சயம் இறுதியில் வெல்லும்!"

டாக்டர் சேகரன்—அழகி செம்பவளம் இவர் களிடையே நடந்த சர்ச்சைகளும் சம்பாஷணைகளும் இன்னும் எத்தனையோ......? ஆரம்பத்தில் துன்பமும் இடருமாக இருந்து, இதற்குள் அத்தனை கிராம மக்களின் இதய சாம்ராஜ்யத்தையும் டாக்டர் சேகரன் கைப்பற்றிக் கொண்டது கண்டு செம்பவளம்தான் எவ்வளவு அதிசயப்பட்டுப் போனாள்!

செம்பவளம் பேச்சு மூச்சற்று, நினைவு புரண்டு கிடந்தாள். நாட்டு வைத்தியர் ஆதிமூலம் டாக்டர் சேகரனையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் மனம் அடித்துக் கொண்டது. டாக்டரின் வாய் தனக்கு நல் வாக்குக் கொடுக்க வேண்டுமே யென்று புழுவாகத் துடித்துக் கொண்டிருந்தார். அடிக்கடி கண்களைத் துடைத்துக் கொண்டார்.

டாக்டர் சேகரன் பரிசோதித்தார். சேகரனின் நெற்றிப் புருவங்கள் மேலேறித் தாழ்ந்தன. அவர் பெரு மூச்சு விட்டார். மிக்ஸர் கொடுத்தார்; இஞ்செக்ஷன் போட்டார்.

"நல்ல வேளை, ஆரம்பத்திலேயே கவனித்து விட்டோம். இனி அபாயம் இல்லை. ஐயா, கவலையே வேண்டாம்" என்று சொல்லிக் கொண்டே சேகரன் மருந்துப் பையைக் குடைந்து ஏதோ ஒரு பொருளை எடுத்து ஆதிமூலத்திடம் நீட்டி, "ஐயா, இது கண்ணகிச்

சிலம்பு. எங்களுடைய பரம்பரைப் பொக்கிஷம். இதை உங்கள் பெண்ணுக்கு நினைவு வந்ததும் கையில் கொடுத்து, வணங்கச் செய்யுங்கள்! கண்ணகித் தெய்வம் கருணை காட்டும்......'' என்றார்.

அந்தக் கண்ணகிச் சிலம்பை ஆதிமூலம் அப்படி விழுங்கிவிடுவது மாதிரியாக எவ்வளவு நேரம்தான் பார்த்துத் தீர்த்தாரோ?

''டாக்டர் ஐயா, அதிசயமாக இருக்கிறதே, இது என் வீட்டில் உள்ளதாயிற்றே. இந்தச் சிலம்பைக் காணேமென்றுதானே சற்று முன் எனக்கு உயிரே போய்விட்டது......இது எப்படி உங்கள் கையில் வந்தது? இதோ பாருங்கள் என் விலாசம் பொறித்திருக்கிறது......'' என்று கூறினார் ஆதிமூலம்.

டாக்டர் சேகரன் வியப்பில் விரித்த விழிகளுடன் அந்தச் சிலம்பையும் அதிலிருந்த விலாசத்தையும் மாறி மாறிப் பார்த்த பின்னர், மறுபடியும் அவர் தன் மருந்துப் பையைத் தடவினார். என்ன ஆச்சரியம் அவர் கையில் மற்றொரு கண்ணகிச் சிலம்பு மின்னிப் பளிச்சிட்டது.

''வைத்தியர் ஐயா, இப்போதுதான் எனக்கும் உயிர் வந்தது. இதுதான் எங்கள் குடும்பத்துக்குரிய கண்ணகிச் சிலம்பு. என் தந்தையாரின் பெயர் இதில் எழுதப்பட்டிருக்கிறது பாருங்கள். ஆனால், உங்களுடைய சிலம்பு எப்படி என் பைக்கு வந்தது என்பதுதான் ஜெப்பிடு வித்தையாகத் தோன்றுகிறது......'' என்று மூச்சு விடாமல் சேகரன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ஆதிமூலம் ஓடிவந்து அப்படியே அவரை அன்போடு தழுவிக் கொண்டார்.

"சேகரன், நீங்கள் ராமநாதனின் மகனு? அவர் என் உயிருக்குயிரான நண்பரல்லவா? இந்தச் சிலம்பும் அதிலிருந்த அவர் திருநாமமும் என்னைக் கண் திறக்கச் செய்துவிட்டன. அந்த நாளில் நானும் அவரும்தான் பர்மாவில் ஒன்ருகக் கொஞ்ச நாள் மரக்கடை நடத்தினேம். அப்போது நான் அவருக்கு என் அன்பின் அடையாளமாகக் கொடுத்த எங்களுடைய மற்ருெரு சிலம்பு இது. அக்கரைத் தண்ணீர் பிடிக்கவில்லை; நான் பிரிந்து விட்டேன். உங்கள் அப்பாவைத்தான் பிறகு காணக் கொடுத்து வைக்கவில்லை. இன்று அவர் புதல்வனை—உங்களைக் காணும் அதிர்ஷ்டம் எனக்குக் கிடைத்ததே, அதுவே போதும். இதுவும் தெய்வத்தின் நல்ல முடிவுதான். உங்களைப் பற்றி நான் இதுவரையில் கொண்டிருந்த தவருன எண்ணத்துக்கு இப்பொழுது நான் மிக மிக வருந்துகிறேன். என்னை மன்னியுங்கள். அத்துடன் ஒரு வேண்டுகோளைத் தங்களிடம் நான் யாசிக்கிறேன். டாக்டர்ஸார், இல்லறக் கல்லூரியில் நிம்மதியான குடித்தன வாழ்க்கையும் கிராம மக்களிடையே அன்புப் போதனையும்தான் என் செம்பவளத்தின் எதிர் காலக் கனவு! இவற்றுக்கெல்லாம் என் ஒரே மகள் செம்பவளம் கண் நிறைந்த உங்கள் தயவை—துணையைத்தான் எதிர் பார்த்திருக்கிருள்......" என்ருர் ஆதிமூலம் ஆனந்த பரவசக் குரலில்.

மலர் விழிகளைத் திறந்தவாறு சுய நினைவடைந்த செம்பவளம் 'நடந்த கதை' அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்திருக்க வேண்டும், டாக்டர் சேகரனை விழுங்கி விடுவது போலப் பார்த்த அவளது பனிப் பார்வையில், 'என் கனவு பலித்தது!' என்ற அவளின்

காதல் குரல் எதிரொலித்துப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

அதே சமயம் டாக்டர் சேகரனுக்கு வந்திருந்த கடிதமொன்றைக் கொடுத்து விட்டுச் சென்றான் டாக்டரின் வேலையாள்.

"அன்புள்ள டாக்டர் சேகரன் அவர்களுக்கு,

நேற்று மாலை தங்களைச் சந்தித்து அளவளாவி விட்டு வந்தவள், இன்று பாயும் படுக்கையுமாகி விட்டேன். தாளாத ஜுரம். எங்கள் குடும்பப் பொக்கிஷமான கண்ணகிச் சிலம்பை வணங்கித் தங்களை நான் அடைய வேண்டுமென்னும் என் இன்பக் கனவு ஈடேற வேண்டுமென்று வேண்டிக் கொண்ட பின்னர் அதைக் கையுடன் கொணர்ந்தவள் மறதியில் தங்கள் அறையில் விட்டு வந்து விட்டேன். நான் அங்கு நுழைந்த சமயம் இதே போலத் தாங்களும் ஒரு சிலம்பை வைத்து ஏதோ பிரார்த்தனை புரிந்ததையும் நான் கவனித்தேன். என்னைப் போலத் தாங்களும் பிரார்த்தனை விடுத்திருப்பீர்களானால், ஆகா! நான் பாக்கியவதி. நம் கனவு கட்டாயம் நிறைவேறி விடும். உங்களிடமுள்ள சிலம்பு உங்கள் பரம்பரைக்குரியது. உங்கள் தந்தைக்கு என் அப்பா அன்புடன் கொடுத்தது. இதைப் பற்றி அடிக்கடி என் தந்தை சொல்லுவதுண்டு. இந்தக் கண்ணகிச் சிலம்பே நம் காதல் கனவைப் பலிதமுறச்செய்யும் சக்தி பெற்றது. என் உடல் நலமுற்றதும் நானே நம் மணம் பற்றி என் அப்பாவிடம் பிரஸ்தாபிக்கப்

போகிறேன். பழம் நழுவிப் பாலில் விழுந் தாற் போலத்தான் அப்பாவுக்கு. மறந்து விட்டேன், பார்த்தீர்களா? எங்கள் கண்ணகிச் சிலம்பைத் தயவு செய்து ஒருவருக்கும் தெரி யாமல் ஆள் மூலம் என்னிடம் சேர்த்து விடுங் கள். அப்பாவுக்கு அந்தச் சிலம்பு இல்லை யென்றால் உடலில் உயிர் தரிக்காது !

தங்கள்,
செம்பவளம்."

அந்தக் கடிதம் டாக்டர் முகத்தில் கிளப்பிவிட்ட அமுதச் சிரிப்புடன், அந்தியின் இன்பச் சிரிப்பும் கலந்து கொண்டது !

# செவ்வந்திப் பூச்சரம்

குறிப்புப் பேரேட்டுப் புத்தகம், சிட்டைப் புத்தகம் வந்தன; உடன் வந்தார் சோமையா. "என்ன வள்ளியம்மை?" என்று விசாரித்தார். நீறு கிறுக்கிய கோடுகளில் நெற்றிச் சுருக்கங்கள் உருக் காட்டின.

"செவ்வந்திப் பொண்ணுக்கு மேலுக்கு முடியலையாம்; வினை தீர்த்தான் வந்து சொல்லிப்பிட்டுப் போனுக!"

"பாவம்!"

"உம்!"

சோமையா நெடு மூச்சை அகற்றினார்; கண்களில் ஈரம் அடையாளக் கோடு கிழித்தது. "வள்ளியம்மை ராகுகாலம் கழிந்ததும் பத்து ரூபாய்ப் பணம் எடுத்துத் தாரேன்; செவ்வந்தி கையிலே சேர்த்துப்பிடச் சொல்லி வினைதீர்த்தான் கிட்டே கொடுத்தனுப்பு!" என்றார் அவர்.

பத்து ரூபாய்த்தாள் செவ்வந்தியின் வலது கை விரல்களுக்கு இடையில் நின்று தத்தளித்தது; சுடுநீர்த் திவலைகள் தெறித்து விழுந்தன. மேனியிலும் சூடு பறந்தது.

"கண்ணைத் துடைச்சுக்க, செவ்வந்தி, நடராசர் சாமி உனக்கு நல்ல வழி காட்டாமல் இருக்கவே மாட்டார்; என் பேச்சை நம்பு; நம்பினவங்களுக்கு நடராசர் தான் சகலமும்!" என்று ஆறுதல் மொழி உதிர்த்தார் வினைதீர்த்தான். பூவரச இலையைக் கிள்ளி வந்து, செந்தூரப் பொட்டலத்தைப் பிரித்து அதைத் தேனில் குழைத்து அவளிடம் நீட்டினார். செக்கச் சிவந்திருந்த பெண் முகத்திலே வேதனையின் கருமை நிழல் காட்டியதை அவர் உணராமல் இருப்பாரோ? ஆனால், செவ்வந்தியின் வினைதீர்க்கும் வினைதீர்த்தானாக அமையும் நிலையில் அவரைத் தெய்வம் அமைக்கவில்லையே!

அப்பொழுது வேதநாயகம் அங்கு வந்து நின்றான்; "செவ்வந்தி!" என்று குரல் கொடுத்தான். உள்ளே நடந்தான்.

அனற் காற்றுப் படிந்த ரோஜாப்பூ மாதிரி செவ்வந்திப்பூ விளங்கியது.

"ஐயா, இந்தாங்க இருபது ரூபாய் இருக்குது. அப்பா கொடுத்ததோடு இதுவும் செலவுக்கு இருக்கட்டும். அந்தக் காலத்திலே செவ்வந்தியின் அப்பா உங்களுக்குச் செஞ்ச நன்மையை மனசிலே மறக்காம வச்சுக்கிட்டு உங்க பொண்ணுட்டம் செவ்வந்தியை வளர்த்து வாருங்க, தெய்வம் உங்களுக்குக் கட்டாயம் இனிமேல் நல்லது செய்யும்!" என்றான் வேதநாயகம்.

வினைதீர்த்தானின் விழிகளில் புனல்! வாழ்ந்து கெட்ட வரலாறு புனலிடைக் கரைந்தது!

புகைச்சல்-இருமல் செவ்வந்திக்கு உரித்தானதாக அப்போதைக்குக் குரல் கொடுத்தது. அவள் எழுந்து தலையணையில் முழங்கையைப் பதித்துச் சாய்ந்தாள்.

முக்காலியில் அமர்ந்திருந்த வேதநாயகத்தின் திசையில் வேல்விழிகள் சரம் தொடுத்திருந்தன. கலங்கிய கண்களுக்குக் கட்டுப்பாடு விதிக்க எண்ணிய இளைஞன் சுற்றுமுற்றும் திரும்பியபோது, தரையில் கிடந்த செல்லரித்த கடிதமொன்றைக் கண்டான். "......நான் வர முடியாது போனால், உன்னுடைய ஒன்று விட்ட மாமன் சோமையா மூலம் உனக்கு வைர அட்டிகை, பர்மாக் குடை, தங்க நகைகள் எல்லாம் கட்டாயம் அனுப்பி வைக்கிறேன்!"—அடியில் இருந்த கையொப்பத்தில் செவ்வந்தியின் தந்தையான வீரப்பன் என்ற பெயர் காணப்பட்டது.

"சோமையா என்கிறது என் அப்பா தானுங்களே?......"

"ஆமாங்க, தம்பி!"

"இத்தனை சாமான்களையும் எங்க அப்பாதான் அந்த நாளில் செவ்வந்தி கிட்டேக் கொண்டு வந்து சேர்த்தாங்களா?...வைர அட்டிகை, நகையெல்லாம் இப்போது செவ்வந்தி கையிலே இருக்குமில்லையா?... அவைகளைக் கொண்டு இப்போதைக்குக் காலந்தள்ள முடியுமுங்களே?..."

"தம்பி, கொஞ்ச நேரம் தனியாவாரீங்களா?" என்று இதம்பதமாகக் கேட்டார் வினைதீர்த்தான்.

**நி**லவுத்தாய் மனை மிதித்தாள். கொத்தமங்கலத்தின் மண்ணிலே பால் வழிந்தது.

'...ஆவணியிலேயே நம்ப பையன் கல்யாணத்தை முடிச்சுப்பிட வேண்டியதுதான்; என்ன தம்பி மகள் அமிர்தத்துக்குத்தான் நம்ப வேதநாயகத்தின் பேரிலே எவ்வளவு ஆசை, தெரியுங்களா?......'

வள்ளியம்மையைப் புரிந்துகொண்டார் சோமையா. "உம்!...அவ சொல்றது வாஸ்தவந்தான்! நல்ல புள்ளி தான் எம் மச்சினன்!......அமிர்தத்துக்கு நம்ப பயலுக்கும் ஜோடிதான்!"

"ஆங்!" என்று அலறினார் சோமையா. உதயத்தின் மலர்ச்சியில் அவருடைய சுருக்கம் விழுந்த முகம் சாம்பிப்போயிருந்தது. மூக்குக் கண்ணாடியைத் துடைத்துத் துடைத்துத் துடைத்து 'மாங்கனிக் கல்லாப் பெட்டி'யைத் துழாவினார்; அந்த வைர அட்டிகையைத் தவிர மற்ற ஆபரணங்கள் அனைத்தும் அப்படியே இருந்தன. லேவாதேவிக் கணக்கு வழக்குகள் ஈட்டுச் சீட்டுகள், கைச்சாற்றுப் புத்தகங்கள் இருந்தன. வைர அட்டிகை எங்கே ?

காலம் ஓடுகிறது; காலம் காட்டிவிட்ட நிகழ்ச்சி எதுவும் ஓடிவிடுவது இல்லை. மனம் மறப்பினும், மனச் சான்று எதையும் மறப்பது கிடையாது!

நடந்த கதை:

பர்மாவில் கலவரம் முளைத்தது. ஆனபடியால் சோமையா ஊருக்குப் புறப்பட்டார். 'ஏஜண்டாக அலுவல் பார்த்ததில் கிடைத்த நிகர லாபம் பணமாக அவருடன் இணைந்தது. இன்றையக் கட்டுப்பாடுகள் எதுவுமே அன்று பர்மாவில் உருவாகவில்லை. ஆகவே, தாராளமாகப் பணம் காசுடன் அவரால் புறப்பட முடிந்தது. வீரப்பன் 'பக்கோ'விலேயே தங்க வேண்டியவரானார். தேக்குமரத் தோட்டத்தில் நடைபெற்று வந்த தொழிலை முடித்ததும்தான் புறப்பட முடியு மென்று செட்டியார் சொன்னார். எனவேதான், வீரப்பன் பயணப்படக் கூடவில்லை. உபரியில் செய்து வந்த 'கொடுக்கல் வாங்கலி'ல் கிடைத்த லாபத்தில் தன் மகள்

அருமைச் செவ்வந்திக்கு வைர அட்டிகை செய்திருந்தார்; வேறு சில நகைகள், சாமான்களையும் வாங்கினார். நம்பிக்கைக்குப் பாத்திரமான உறவினர் சோமையாவின் மூலம் எல்லாவற்றையும் அனுப்பி வைக்க முடிவு செய்தார். இப்படிப்பட்ட கட்டத்தில் ஜப்பான்காரர்களின் தொல்லைகள் பலவகையிலும் வளரவே, வீரப்பனும் சோமையாவுடன் ஊருக்குப் போய்விடத் தீர்மானம் செய்தார்; குண்டு வீச்சுக்கள் புறப்படவே, கப்பல் போக்குவரத்து நின்றது. பயணச் சீட்டுக்கள் பயனற்றுப் போயின. அவரவர்கள் மணிப்பூர் வழியே நடந்து செல்லத் தலைப்பட்டனர். சோமையாவுக்கும் வீரப்பனுக்கும் வழியில் ஏற்பட்ட உடல் நலக் குறைவுக்கெல்லாம் பெரும் உதவி செய்தவர் வினைதீர்த்தான். வாந்தி பேதி வீரப்பனை வாட்டி வளைவெடுத்தது. உயிர் பிரியும் தருணத்திலே சோமையாவை அழைத்துத் தன்னிடமுள்ள வைர அட்டிகை, பிற நகைகள், சாமான்கள் எல்லாவற்றையும் சேர்ப்பித்து, "என் மகள் செவ்வந்தியிடம் எல்லாத்தையும் கொடுத்திடுங்க; பாவம், தாயில்லாப் பொண்ணு. இனி யாருமில்லாத அனாதைப் பொண்ணாகப் போகுது. நிலம் நீச்சையும் வீடு தோட்டத்தையும் விற்று, என் மகளைக் காப்பாத்துங்க. வினைதீர்த்தானும் நல்லவன்; உதவுவான்!" என்று வேண்டினார். உயிரின் ஒளி இருட்டில் ஒளியிழந்தது.

சோமையா பிறந்த மண்ணைத் தொட்டுக் கும்பிட்டார். செவ்வந்தியிடம் அவள் தந்தை சேர்க்கப் பணித்த பொருள்களைச் சேர்த்துவிட முனைந்தார் சோமையா. அப்போதுதான் எதிர்பாராத அச்சம்பவம் நிகழ்ந்தது. சோமையா பட்டிருந்த கடனை உடனே அடைக்காவிட்டால், வீட்டையே 'ஜப்தி' செய்வதாகப்

பயம் காட்டினுன் சொந்தக்காரன் ஒருவன். அக்கரைச் சீமையில் சம்பாதித்த பணத்தைக் கணக்கிட்டுப் பார்க்கையில், கடன் கட்டவேண்டிய தொகைக்கே ஓர் ஆயிரம் ரூபாய் குறைந்தது. வைர அட்டிகையை ரகசியமாக அடகு வைத்துப் பணம் வாங்கிக் கடனே அடைத்துவிட்டார். பின்னர், வீரப்பன் கொடுத்தனுப்பிய நகைகளில் வைர அட்டிகை தவிர பாக்கி நகைகளேயும் சாமான்களேயும் செவ்வந்தியிடம் சேர்த்தார் சோமையா. விஞதீர்த்தான் பொறுப்பில் செவ்வந்தி வளர்ந்தாள். லேவாதேவித் தொழில் கைகொடுத்தது. பணம் சேர்ந்தது. வைர அட்டிகையை மீட்டார் சோமையா. "வைர அட்டிகையை இப்போது எப்படி விஞதீர்த்தானிடம் கொடுப்பது?...ஏன் இவ்வளவு நாள் வரை கொடுக்கவில்லே யென்று செவ்வந்தியோ, விஞதீர்த்தானே கேட்டால், என்ன பதில் சொல்வது? ...ம்! விஞதீர்த்தானுக்கு வைர அட்டிகையைப்பற்றி எதுவும் தெரியாது. ஆமாம்; வீரப்பன் இதைக் குறித்து அவனிடம் ஏன் பேசியிருக்கப் போகிருன்?... இப்போது திடுதிப்பென்று வைர அட்டிகையை ஒரு வருஷம் கழித்துக் கொடுத்தால், இந்தச் சமாசாரம் ஊரெல்லாம் பரவி, கடைசியில் எனக்குக் கிடைத்திருக்கும் நல்ல பெயர் கெட்டுப்போய் விடுமே!... நடராசப் பிரபுவே!... என் தவற்றை மன்னித்துவிடு. செவ்வந்திக்குத் திருமணம் ஆகும்போது, இந்த வைர அட்டிகையை அவளிடம் சேர்ப்பித்து விடுகிறேன், என் பரிசு போன்று! என் தவருன செயலுக்குப் பரிகாரமாகச் செவ்வந்திக்கு என்னுலான உதவியைத்தான் அன்றிலிருந்து இன்று வரை செய்து வருகிறேனே! நீ அறிந்தது தானே, அப்பனே!"—கழிந்த நாட்களில் சோமையாவின் மனம் இவ்வாறு சாந்தி பெற்றது.

ஆனால், அந்த வைர அட்டிகை எங்கே?

சோமையா வாய்விட்டுப் புலம்பினார். 'என்மகன் வேதநாயகத்துக்குக்கூட வைர அட்டிகையின் துப்புத் தெரியாதே?...நான் செய்த தப்பான செயல் அம்பல மாகிவிடுமோ?...காணுமற் போன அட்டிகையைப் பற்றிப் புகார் செய்யக்கூட இயலாதே?...என் மானத்தைக் காப்பாற்று!...'

மஞ்சள் தடவப் பெற்றிருந்த ஜாதகக் குறிப்பை மீண்டும் சோமையா பார்த்தார். மணமகனாக வேதநாயகமும், மணமகளாக அமிர்தமும் காட்சியளித்தனர்.

இருளின் வருகைக்காக காத்திருந்தார் சோமையா. 'பணக்காரங்களான நீங்க எங்க செவ்வந்தியை மருமகப் பொண்ணுக ஏத்துக்கிட ஒப்பமாட்டீங்க. ஆனு,உங்க பொறுப்பிலே நல்ல மாப்பிள்ளையாப் பார்த்துச் செவ்வந்தியை ஒப்படைக்கவாகிலும் பாடுபடுங்க!' என்று முன் தினம் சொன்ன வினைதீர்த்தானின்சொற்கள் அவர் நெஞ்சைத் தொட்டன. செவ்வந்தியின் திருமணத்தைத் தன் செலவில் நடத்தி விடுவதாக அவர் வாக்குக் கொடுத்தார்; செவ்வந்தியிடம் சென்று வைர அட்டிகையின் விஷயத்தை விளக்கி அதற்கு ஈடான பணத்தைக் கொடுத்து அந்நிகழ்ச்சியைக் கடைசிவரை ரகசியமாக வைக்கும்படி வேண்டிக் கொள்ளவும் திட்டமிட்டார்.

இரவு வந்தது. செவ்வந்தியைக் கண்டு வரப் புறப்பட்டார் சோமையா. இடுப்பு மடியில் ஆயிரம் ரூபாய் ரொக்கம் இருந்தது; நெஞ்சில் அம்பலவாணன் இருந்தான்; மானம் இதயத்தின் அரங்கத்தில் ஊசலாடிக் கொண்டிருந்தது.

அப்போது, வேதநாயகம் உள்ளே நுழைந்தான்.

"அப்பா, இதைப் பாருங்க!"

"தம்பி, நீ செவ்வந்தியையா கல்யாணம் செய்துக் கிடப் போறே?"

"ம்!"

திருமணமடல் சிரித்தது.

"செவ்வந்தி யாருமில்லாத அனதைப் பெண்ணுச்சே, தம்பி? நம்ப கௌரவத்துக்குச் சரியா வருமா?..."

"அப்படியே நிறுத்துங்கள் அப்பா. சுருக்கமாகச் சொல்லிப்பிடுறேன். செவ்வந்தி அனதைப் பெண்ணுயிருக்கலாம்—உங்க வரையிலே! ஆனு செவ்வந்திதான் உங்களுடைய மானத்தையும் கௌரவத்தையும் இவ்வளவு காலமா காப்பாத்தினவள்! தன் அப்பா உங்க மூலம் கொடுத்தனுப்பிய நகைகளிலே வைர அட்டிகையை மட்டும் நீங்க திருப்பிக் கொடுக்கவில்லை என்கிற உண்மை தெரிஞ்சிருந்துங்கூட, உங்ககிட்டே அதைப்பற்றி ஒரு வார்த்தைகூட இதுநாள் வரையும் பேசாதவள் அவள். வினைதீர்த்தானிடமும் இதைப் பற்றிப் பேசலாகாதுன்னு கேட்டுக் கொண்டவள் அவள்!...செவ்வந்தி நினைச்சிருந்தால், உங்க மானம் கௌரவம் எல்லாம் எண்ணைக்கோ ஆலாய்ப் பறந்திருக்காதா?...அப்பா. அவளுக்குச் சேர வேண்டிய வைர அட்டிகையை அவள் வசம் நான்தான் சேர்ப்பித்து விட்டேன்!"

சோமையாவின் மனச்சாட்சி நடுங்கியது; மனம் தழலிடைப்பட்ட புழுவெனத் துடித்தது. அவர் வெளி வாசலுக்கு ஓடினார்.

அது சமயம் செவ்வந்தி எதிர்ப்பட்டாள். ''மாமா! இந்தாங்க வைர அட்டிகை!'' என்ருள் அவள்.

"அம்மா செவ்வந்தி ! முதலிலே என்னை மன்னிச்சிப்பிடு அம்மா!... இந்த வைர அட்டிகை உன் சொத்து. நீயே வைத்துக்கொள்!......''

"ஊஹூம். இது எனக்கு வேண்டாம். இது உங்களுக்குத்தான் சேர வேணும். இவ்வளவு நாளும் நான் சாப்பிட்டுக்கிட்டு வாரது நீங்க அளந்தபடி தானுங்களே?...'' என்று செவ்வந்தி விம்மினுள்.

வெளியிலிருந்து வினைதீர்த்தான் வந்தார்; வள்ளியம்மை உள்ளே யிருந்து வந்தாள்.

''சரி! முதலிலே உங்க மருமகப் பொண்ணை உள்ளே கூட்டிக்கிட்டு வந்து ஆசீர்வாதம் செஞ்சு, வைர அட்டிகையை வாங்கிச் சாமி முன்னுல் வையுங்க. நான் அதுக்குப் போட்டு விடுகிறேன். நான்தான் தம்பிக்குக் கல்யாணப் பத்திரிகை அச்சடிக்கிறதுக்குச் சம்மதம் கொடுத்தேன். நம்ப மானத்தைக் காப்பாத்தி, நம்பளை வாழ வச்சிருக்கிறதே நம்ப மருமகப் பொண்ணு செவ்வந்தியாக்கும்!'' என்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசினுள் வள்ளியம்மை.

வைர அட்டிகையின் ஒளியிலே செவ்வந்தியின் கூந்தலில் சூட்டப்பெற்றிருந்த செவ்வந்திப் பூச்சரத்தின் சுகந்தம் இழை பாய்ந்தது.

# மனத் தவம்

**கா**ளியம்மன் தேரோட்டத்துக்கு இன்னும் நான்கே நான்கு நாட்கள்தாம் மிஞ்சியிருந்தன!

'அஞ்சலை!...'

நகை முகையவிழ சிரிப்பொலி சிந்தை காட்ட, கால் தண்டை மெட்டமைக்க, திருநாகேஸ்வரம் சுங்கடிச் சேலை 'தந்தன'கொட்ட அவள் வந்தாள். அவள். அஞ்சலை!

"வாங்க மச்சான்!"

கஞ்சிப் பொழுதுக்குக் கிளம்பினவன் கையெழுத்து மறையும் வேளையில் வந்து சேர்ந்தான். அவன் சுப்பன்! இடைப்பொழுது கொஞ்சம் என்றாலும், அக்கரைச் சீமைக்குப் பயணம் போய் ஒரு 'கணக்கு' முடிந்து இப்போது தான் அவன் திரும்பியிருப்பது போல அவ்வளவு ஆதங்கத்துடன்-ஆதூரத்துடன் அவனைப் பார்க்கிறாளே? காம்பு நோகாமல் கிள்ளிய முல்லைப் பூவை தூரத்தே வைத்துவிட்டு, எட்டயிருந்தவண்ணம் ஒட்டிவரும் மணத்தைக் குடிக்கும் ரசிகன்மாதிரி அவனும்தான் அவளை ரசித்துக்கொண்டிருந்தான்!

உரிமையும் உறவும் உடன்பிறப்பு அல்லவா?

இலுப்பை எண்ணெய் தேங்கியிருந்த பாலேவணம் அகல் விளக்குத் தீ ஏந்தியிருந்தது.

"உங்க உடன்பிறந்தா வரலேன்னு சொல்லிப்பிடுச்சுங்களாங் காட்டியும்?"

"ஆமா; அதோட புருசனுக்கு மேலுக்கு முடியலேயாம்!"

"ம்...! ஆத்தா தேரோட்டத்துக்கு விருந்தாடி வாரது வளமை; அதுகூட இந்தக் கடுத்தம் தடம்மாறியிருச்சுதே!"

ஆற்றாமைப் பெருமூச்சு வெளிப்போந்தது. பனைமரத்தூணோடு உராய்ந்தவாறு சாய்ந்திருந்த அஞ்சலேயின் வெளிறியிருந்த வதனத்தில் கவலேயில் பிறந்த அச்சம் கோடு கிழித்தது. 'ஆத்தாடி' என்று முக்கி முனகிக் கொண்டே மண்தரையில் அமரப் பிரயத்தனப்பட்டாள் அவள்.

"பையக் குந்து புள்ளே!"

மஞ்சள் குளித்த முகத்தில் நாணம் அணேந்தது; உதட்டைக் கடித்துக்கொண்டாள் அவள்.

"மூஞ்சியைக் களுவிக்கிணு ஓடியாங்க, மச்சான். சுடுகஞ்சி ஊத்துறேன்!"

"தொட்டுக்கிறதுக்கு என்ன வெஞ்சனம் இருக்கு?"

"கூனிப் பொடிக் கொளம்பு ஆக்கி வச்சிருக்கேனுங்க! வெள்ளப்பூண்டு ஒன்னேயும் போட்டிருக்கேன். நல்லா மணக்குதாக்கும்! ஆமா!"

சுப்பனின் உதடுகளில் ஈரம் துளிர்த்தது. இமை விளிம்புகளில் இடையீடு இல்லே.

"என்ன மச்சான் ரோசிக்க ஆரம்பிச்சுப்பிட்டீங்க?"

"கூனிப்பொடிக் கொளம்பை இப்பத்தான் முதல் வாட்டியா உன் கையாலேவாங்கிச் சாப்பிடப்போறேன். ஆறு, எங்க மாங்குடி அத்தை பொண்ணு வேலாயி கிளமை தப்பாம எனக்குக் கூனிக் கொளம்பைத்தான் சமைச்சு ஊத்தும்!"

எண்ணத் தலைப்பட்டவன் சொல்லத் தலைப்பட்டான்; பேச்சு முடிந்தது; கொண்டவளை நோக்கினான்; அவளிடம் ஏதாவது மாறுதல் உண்டாகிவிடுமோ என்ற கவலை அப்பொழுதுதான் உண்டாயிற்று. தலையை நிமிர்த்தினான்; தலை குனிந்திருந்ததைக் கண்டான்.

"வட்டிலைக் கழுவு அஞ்சலைப் பொண்ணே!" என்று சொல்லிக்கொண்டே அண்டினான்; "அஞ்சலை, ஏன் உன் மூஞ்சி ஒரு மாதிரியாயிருக்குது?" என்று வினவினான். 'எம் பேச்சு அவளுக்கு மனசுக்கு ஒப்பலையோ?'

"உங்களுக்குக் கூனிப் பொடி இம்மாந்தூரம் புடிக்கும்னு முன்னாடியே புரிஞ்சுக்காமப் போயிட்டேன். கோவிச்சுக்காதீங்க, மச்சான்! இனிமே வியாளச் சந்தைக் கெடுவிலே கூனி வாங்கியாந்து போடுறேன்!"

"பச்சையாவா, புள்ளே?"

"இல்லே, செவப்பா!"

"ஏத்தப்பாட்டுக்கு எதிர்ப்பாட்டுப் பாடுற சோமுத் தேவர் மகளாச்சே? பேசக் கேக்கணுமா? உம் பேச்சை நான் மட்டுந்தானு அனுபவிக்கிறேன்! ம்...நீ கொடுத்து வச்ச பொண்ணு!"

"உங்க நிழலிலே ஒண்டி, உங்க கஞ்சியைக் குடிக்கிறத்துக்கு எனக்கு எழுதிப் போட்டிருக்கிற வரையிலே நான் கொடுத்து வச்சவதான்! அட்டியில்லே! ஆனு

நமக்கு ஆபத்துச் சம்பத்துக்குத்தான் உதவி ஒத் தாசைக்கு ஜனங்க தெகையலே! என்னமோ, ஆத்தா தான் நம்பளுக்குத் தொணே!''

"நம்ப ரெண்டு வழியிலேயும் பெத்தவங்க கண்ணே மூடிக்கிட்டாங்க, வாய்ச்ச சொந்தக்காரங்களுக்கு நம்ப பெரிசாப் பட்டாத்தானே!... நீ சொல்ருப்பிலே, நமக்கு ஆத்தாதான் சகலமும்!... பதனமா எழும்பு, அஞ்சலே!''

மண்ணில் பதிந்து அழுந்திய பத்து விரல்களுக்கு உதவிய கடமை எதிர்த் தரப்புப் பத்து விரல்களையே சாரும் !

அப்போது, "மச்சான்!'' என்ற புதிய அழைப்பொலி குறுவாயிலில் தங்கி, இருட் செறிவுடன் அல்லாடியது.

"ஆத்தாடியோ! ...எங்க வேலாயி!... ஒனக்கு ஆயுசு நூறு! பொட்டுப் பொளுதுக்கு முன்னமேதான் ஒன்னேப் பத்தி அஞ்சலே கிட்டே வாயாடிக்கிட்டிருந்தேன்!... உள்ளே வா, மாமன் மவளே!''

"ஆத்தாளேதான் ஒன்னே இங்கனே கூட்டியாந்தி ருக்கோணும், வேலாயி!'' என்று இன்பத்தோடு சொல்லி மகிழ்ச்சியடைந்தாள் அஞ்சலே.

உதயப்பூவிற்கு இளஞ்சிவப்பின் பொன் வண்ண மேனி உலகத் தொட்டிலாக உருக்கொண்டது; உருக் காட்டியது.

"நீ புளிக்குடிச்சு முடிஞ்சதுக்கு அப்பாலேதான் நான் ஊருக்குப் பயணப்படுவேன், அக்கா!''

கள்ளவிழிப் பார்வை மறைத்துக்கொண்டிருந்த கள்ளமிலாத் தன்மையில் மெய்ம்மறந்தாள் தாய்மைப் பதவி அடைந்திருந்தவள்.

"எங்க மச்சானுக்கு நீ ஆம்பிளேப் புள்ளேயைக் கொடுக்கப் போறியா?... இல்லேங்காட்டி, பொண்ணேத் தரப் போகுறியா, அக்கா?''

அஞ்சலேக்கு அயனுன வெட்கம் பிறந்தது. பிறக்கப் போகும் குழந்தையைப்பற்றி அனுமானம் செய்து பார்க்கும் பக்குவம் அவளுக்குக் கிடையாது; என்ருலும் உருப்பெற்றிருக்கும் குழவி உருக்காட்டவிருக்கின்ற கோலம் அவள் முகத்திரையில்; கோலநகை காட்டிற்று.

''அக்கா! எங்க மச்சானுக்கு ராஜாதான் வேணுமாம் சொன்னுக!... அதாலே, நான் ஒரு ராணியைப் பெத்துக் கொடுத்துப்பிடறேன்!...விட்டுப் போன சொந்தம் அப்பத்தான் ஒட்டிக்கிட ஏலும்!''

''மெய்யான தாக்கல்தான் வேலாயி!''

அஞ்சலே அவசரம் அவசரமாக வேலாயியை நோக்கி விழித்தாள்.

வேலாயியின் கழுத்தில் மஞ்சள் கயறு எதுவும் காணப்படவில்லே !

கட்புலம் பதித்து, மண்குடம் ஏந்தி, மண் மிதித்து மண் விலக்கி வந்தாள் வேலாயி. இடுப்பில் ஒன்றும் தலேயில் ஒன்றுமாகக் குடம் காணப்பட்டது. கழைக் கூத்தியின் 'லாகவம்', தராசு முளே நிதானம், கண் கொத்திப் பாம்பின் அளுத்தப் பார்வை எல்லாந்தான் இருந்தன, அவளிடம். ஆனுலும், ஒரு சின்னக்கல் அவள் காலே—இடது காலே—இடறி விட்டது. தடுமாறிப் போனுள்; கல்லில் தலேக்குடம் உடைந்தது. அச்சமயம் பார்த்து நல்லவேளேயாகத் தோன்றினுன் சுப்பன். வேலாயியின் இடுப்புக் குடத்தைப் பற்றிக்கொண்டான்; இடையில் இழையோடிய விரல்கள் நடுக்கம் காண்பித்தன.

அக்கணம் அங்கே இன்னொரு வதனம் தெரிந்தது! —'அஞ்சலை!'

இரண்டு எட்டுத் தள்ளி ஒதுங்கினான் சுப்பன்; வேலாயி இடுப்புக் குடத்தைப் பத்திரமாகப் பற்றியவாறு குனிந்து குடிசைக்குள் நுழைந்தாள்.

சில்லுச்சில்லாக உடைந்து கிடந்த மண் பானையின் உருவைக் காண முடியாமல் தவித்தாள் அஞ்சலை.

"ஏலே அஞ்சலை, இங்கிட்டாலே பாருவேன்!" என்று தூண்டில் முள் வீசினான் சுப்பன். தீனி, பார்வையின் நோக்கில் இருக்காதா, என்ன?

பூவரச மரத்தின் கவ்வல் கிளையிலிருந்து துணி முடிச்சு வெளியே வந்தது. உறையூர் நெசவில் பதினாறு முழப்புடவைகள் இரண்டு காணப்பெற்றன!

"ஒண்ணு ஒனக்கு; இன்னொண்ணு எங்க வேலாயிக்கு!" என்றான் சுப்பன். அவன் குரலில்தான் எத்துணை ஆனந்தம், குழைவு!

அஞ்சலை உயிர்ச்சிலையானாள்; வரவழைக்கப்பட்ட சிரிப்பில் ஜீவன் இருக்கமுடியாதல்லவா?

"வா புள்ளே!"

அவள் நின்றுகொண்டேயிருந்தாள். 'எங்க வேலாயிக்கு!'—புடவையின் உரிமைக்கு வழங்கப்பட்ட சாசனப் பத்திரமா அவ் வார்த்தைகள்?

ஒரு சம்பவத்தை நினைவு கூர்ந்தாள் அஞ்சலை. நினைவுகள் 'தசாவதாரம்' எடுத்தன.

**பூ** முடித்த பூவையை மணம் முடித்தான்; பூப் போன்ற புன்னகைக்குப் பொருளானான். சுப்பனும் அஞ்சலையும் தம்பதிகளாயினர்.

அந்த இன்பப் பொழுதிலே ஒருநாள் வாக்கில் சுப்பன் சொன்னதாவது:- 'புதுப் பொண்ணே அஞ்சலை! எருக்கலக் கோட்டையும் ஆவணத்தாங் கோட்டையும் சம்பந்தம் கொண்டு பரிசம் போட்டு கண்ணுலம் முடிச்சுக்கிடுற லவிதம் இருக்கிறப்ப, எங்க மாங்குடிப் பொண்ணு வேலாயி கையை என்னலே எப்பிடி பிடிக்க முடியும்?' என்ற தோற்றுவாயுடன் உதிர்த்த வரலாற்றின் முடிவுரை இது: வேலாயியைத்தான் சுப்பன் மணம் புரிந்துகொள்வதாகக் கனவில் திளைத்திருந்தான். ஆனல், ஈன்றவள் 'வீடு' அடைய வேளை பார்த்திருந்த படியால், பெற்றவனை உற்றவளுடன் மணக்கோலம் தாங்கப் பார்க்க வேண்டுமென்ருள். தந்தைக்குக் கொடுக்காத பாக்யத்தினை தாய்க்காவது கொடுக்க வேண்டியது தன் கடமை என்கிற ஞானம் உதயமானது. வேலாயி தோன்றினுள். ஆனல், அப்பொழுது அவள் 'ஆளாக' வில்லை. எனவே, அஞ்சலை அவனுக்கு வாழ்க்கைப்பட்டாள்; மாமியாரின் உயிரைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்ட 'புண்யம்' மூன்று மாதங்களுக்குச் செல்லாகாமல் இருந்தது!

"அஞ்சலை அக்கா!..."

வேலாயி வந்து நின்ருள். "எங்க மச்சானுக்கு ஆட்டுக் காலுச் சூப்பின்னு ரொம்பப் பிடிக்கும். இன்னிக்கு வைச்சுப்பிடவா?...நீயும் ஒரு குவளை குடிச்சா, மேலுக்கு ஒசத்தியாயிருக்கும் அக்கா!" என்ருள்.

அசைந்த தலையில் இசைவு பெறப்பட்டது போலும்!

'எங்க வேலாயி!'—'எங்க மச்சான்...'

அஞ்சலை சுழன்ருள்.

அந்திமாலே வந்தது.

"பாவம் வேலாயி!...அதோட கண்ணுலம் தட்டிக் கிட்டே போவுதாம்!...சேலம் சீமைப் பக்கம் எங்க மாமனோட சுல்லுச்சட்டி லாவாரத்திலே ஒட்டியிருக்கிற ஒரு இளவட்டத்துக்கு இதைக் கட்டிக் கொடுத்துப் பிடுறதின்னு ரோசிச்சிருக்காகளாம்!...''என்று கூறின சுப்பன் மீண்டும் நினைவில் தோன்றினான்!

"அஞ்சலே!"

அவள் ஏறிட்டுப் பார்த்தாள், முகம் களையிழந் திருந்தது.

"என்ன, அஞ்சலே!''

"ஒண்ணுமில்லீங்க! தலையை உடைக்குது. சுக்குத் தண்ணி வச்சு ஒரு மடக்குக் குடிச்சாக்க, அல்லாம் பட்டின்னு விட்டுப்பூடும்!"

காளி அம்மன் தேரோட்டம் வெகு அற்புதமாக நடந்தது. புதுப் புடவைகள் பொலிவு தர விளங்கினார் கள், அஞ்சலேயும் வேலாயியும். சுப்பன் அர்ச்சனை செய்தான். வேண்டுதல்கள் அம்மனின் அபய முத்திரை யில் அடங்கின.

குடிசைக்கு வந்ததும் அஞ்சலே செய்த முடிவு இது: 'இந்தச் சனியன் பிடிச்ச வேலாயி நல்லதுக்கா கவா வந்திருக்கா? ஊக்கூம்!...சட்டுப்புட்டுன்னு போகச் சொன்னாத்தான் நல்லது!'

விடிந்தது.

அஞ்சலேக்குப் பிரசவ வேதனை ஆரம்பமாகி விட்டது. பிரசவத்துக்கு உதவி ஒத்தாசைக்கு எங் கெங்கோ சுப்பன் சுற்றியலைந்த வேளையில்தான்

வேலாயி தேடிப் போகாமலே கிடைத்த மூலிகை யானுள். ஆனுல், குறித்த கெடுவுக்கு முன்னதாகவே அஞ்சலேக்கு 'வலி' காணவே, அவள் வேலாயியைப் பற்றிப் பேச்சு மூச்சுக் காட்டவில்லே.

நட்ட நடுப்பகல்.

மாங்காய் வத்தல் குழம்பைச் சுண்ட வைத்து ஊற்றி, வாய்க்கு உணக்கையாக குடமிளகாயையும் வறுத்து தைத்தபோது, நாலு வாய் சோறு அதிக மாகவே அஞ்சலேயால் உண்ண முடிந்தது. வேலாயி யின் பொறுப்பு உணர்ச்சியைப்பற்றி அலசி ஆராய்ந்து பார்த்தாள் அவள். வேலாயியைக் குறித்து செய்யப் பட்ட முடிவு ஆட்டம் காண வேளே பார்த்திருந்த கட்டத்தில், பக்கத்துக் குடியிருப்புக்குள் முடங்கி யிருந்த கண்ணுத்தா வந்து சேர்ந்தாள்; "அஞ்சலே தங் கச்சி, ஒனக்குக் காதிலே இந்தச் சங்கதி படலேயா? கீழத் தெருவு கோவிந்தன் பொஞ்சாதி பிரசவத்துலே செவலோகம் பூடிச்சில்லே! அப்பாலே இப்ப என்ன நடக்கப் போவுதாம், தெரியுமா? முந்திக் கட்டிக்கிட ணும்னு இருந்து முறிஞ்சுப் போன சம்பந்தம் புதுசாகி அந்தக் குட்டி அன்னக் கிளியைக் கொண்டுக்கிடப் போவுதாமே!'...ம்! கூரைமேலே சோத்தைத் தூவி வீசிஞ, ஆயிரம் காக்கை ஓடிவரும்!" என்ருள்.

மசக்கைக்காரியின் உடல் மட்டுமல்ல, உள்ளமும் தத்தளித்தது. நிகழ்காலத்தில் எதிர்காலம் நிழலாடிற்று. உந்திக் கமலம் உற்பத்தி செய்த நீள்துயர் மூச்சுக்குக் காலம் கூடுதல். விழிகளில் பனி படர்ந்தது. 'காளி ஆத்தா!' என்று முனகிக்கொண்டாள். தலேச்சன் பிறந்த சடுதியில் அம்மன் சந்நிதியில் மாவிளக்குப் போடுவதாக 'நேந்து' கொண்டது நினேவுக்குள்

எழுந்தது. அடுத்த விநாடி 'மச்சான்!' என்று அரற்றினாள். தன்னுடைய உயிரின் உயிராக இயங்கிய ஆசை மச்சானை நெஞ்சில் வரவழைத்தாள். ஆனால், எதிரில் நின்றவள் வேலாயி. கை விரல்கள் நெறிந்தன. நெற்றிப் பொட்டு விட்டுப் போனது! 'எனக்கும் அன்னக்கிளி கணக்கிலேதான் விதிச்சிருக்குமா?... வேலாயி காலடியிலேதான் இவுக கெடப்பாகளா?'

நிமையில் கண்ணீர். நெஞ்சத்தில் ஊழிப்புயல்.

நாலு தவணை 'செங்கல் அடித்து' வந்து, மொட்டை வண்டியை அவிழ்த்துப் போட்டான்; மாடுகளுக்குத் தீவனம் வைத்தான். அயர்வுடன் நுழைந்தான்.

அஞ்சலையின் கண்கள் கண்ணீரை உண்டன.

இரவு. கோடையில் வேப்பங் காற்றுப் பட்டால் எவ்வளவு தூரம் இதமாகயிருக்கும். தெரியுமா?

அஞ்சலை உள்ளே உறங்கினாள்; சுப்பனும் அங்குதான். வெளித் தாழ்வாரம் வேலாயியைக் காத்தது. எட்டடிக் குச்சு என்றாலும், எல்லை இல்லாமலா? நியதி எங்கே போய்விடுமாம்...?

இருந்திருந்தாற்போல், அஞ்சலை வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

"வேலாயி!... வேலாயி!..."

சுப்பனேதான் முணமுணத்துக் கொண்டிருந்தான்.

"ஐயோ! மச்சான்!"

அஞ்சலை கதறினாள்.

சுப்பன் பதறித் துடித்து விழித்தான்.

"வேலாயி, ஓடியா! நான் போயி அம்பட்டச்சியை இட்டாரேன்!"

வேலாயியைக் காணோம்!

வேப்பிலைக் கொத்து வாசல் நிலைப்படியில் செருகப்பட்டது.

தன்னுடைய 'அடையாளத்தை'க் கண்டுகொண்ட களிப்பு அப்பொழுது சுப்பனுக்குக் கனவுலகைப் படைத்துக் காட்டியது. ஆனால், 'வேலாயி எங்கனே இருக்கு? கண்ணுப் பொறத்தாலே காணலியே!' என்ற சஞ்சலம் அவனை வதைத்தது. மம்மலுடன், மீண்டும் வேலாயியைத் தேடினான். காளியம்மன் சந்நிதியில் அவன் அவளைக் கண்டான்!

"வேலாயி!... அஞ்சலை புளிக்குடிச்சிருச்சு; ஆம்பளை பொறந்திருக்குது!...ராத்திரி இருபது நாளிப் பொளுதுக்கு வலி எடுத்துச்சு; உன்னை அளச்சேன். நீ எங்கே போயிட்டே?"

வேலாயியின் பூங்கரங்கள் அம்மனைத் தொழுதன. "ஆத்தா, என் வேண்டுதலை நிறைஞ்சிடுச்சு!... இனிமே நான் எங்க அஞ்சலை அக்கா மூஞ்சியிலே தைரியமா முளிப்பேன்!" என்றாள் அவள்.

சுப்பனுக்குக் கண்களைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரி இருந்தது.

"மச்சான்! நீங்க மனச் சுத்தத்தோட என்கிட்ட சிரிச்சுப் பேசி பளகினதை தப்பாப் புரிஞ்சுகிட்டு என்னை ஒதுக்க ஆரம்பிச்சிது அஞ்சலை அக்கா!... நேத்திக்கு கண்ணாத்தா வந்து அது மனசைக் குட்டை குளப்பிடுச்சு. யாரோ ஒரு ஆம்பளை தன் சம்சாரம் பிரசவத்திலே செத்ததும், முதலிலே விட்டுப்போன மொறைப் பொண்ணையே கட்டிக்கிட்டாராம்; அந்தக் கதையைக் கேட்டதும், அஞ்சலை அக்காவுக்கு இல்லாததும் பொல்லாததும் தோணிச்சுப்போலே!... அதுக்கு ஒத்தாப்பிலே, நீங்க ராவு எம்பேரைச் சொல்லி வேறே

புலம்பினீக!...நாங்கூட முளிச்சுக்கினேன்!...அக்கா 'ஐயோ, மச்சான்!' அப்படின்னு கதறிச்சு!...எனக்குத் திக்குத்திசை மட்டுப்படலே!...என் ஒருத்தியாலே அது உசிருக்குக்கூட குந்தகம் ஏற்பட்டிடுமோன்னு நடுங்கினேன்; காளி ஆத்தா காலடியிலே நெடுஞ்சாங்கிடையா வந்து விளுந்து, அக்காவைக் காப்பாத்தி, புள்ளையையும் கண்ணிலே காட்டணும்னு வேண்டிக்கிட்டேன். ராவு முச்சூடும் நான் செஞ்ச தவம் பலிச்சிடுச்சு!...''

வேலாயி சிரித்தாள்.

"வேலாயி! ஒனக்கு நல்ல மாப்பிள்ளையாப் பாத்து முடிச்சு வைக்கோணுமிங்கிற கவலை நீ வந்த நாள் தொட்டு என்னை அரிச்செடுத்துச்சுது. அந்த நெனைப்பிலே படுத்தவன், உம் பேரைச் சொல்லி உளறியிருக்கேன்போலே!...நீ அஞ்சலையைப் புரிஞ்சுக்கிட்ட அளவுக்குக்கூட என்னாலே அவளைக் கண்டுக்கிட முடியலையே!...நான் உம்மேலே வச்சிருக்கிற துலக்கமான அன்பைப் பத்தியும் இனியாச்சும் அஞ்சலை கட்டாயம் விளங்கிக்கிடும்!...காளி ஆத்தா நல்ல வேளையா நம்ப மூணு பேரையும் யாதொரு விக்கினமும் வராமக் காப்பாத்திப்பிட்டா!...இந்தப் பாளாப்போன மனசோட பேயாட்டத்தை நெனைச்சா, ஒரே தெகைப் பாத்தான் தோணுது; ம்! எந்தப் பேயாட்டத்தையும் தீர்த்து வைக்கத்தான் ஆத்தா ஊர்க் கோடியிலே காவல் காத்துக்கிணு இருக்காளே!...எல்லாம் தாயோட விளையாட்டு!...கருணை!''

உணர்ச்சிகள் பேசின.

"எம்புட்டு மாப்பிள்ளையைப் பார்க்க வேணும். ஓடியாங்க மச்சான், போவலாம்!''

# அத்தை மகள்

"ஸார், தபால்!"

திரும்பிப் பார்த்தேன். எதிரே தபால்காரன் கையில் கடிதத்தை ஏந்திய வண்ணம் வருவதைக் கண்டதும் குறிப்பறிந்த என் கைகள் கடிதத்தைப் பற்றின. பார்வை உறையின் மீது சென்றது. நான் அதிசயித்து விட்டேன். 'ஏர் மெயில்' மூலம் பர்மாவிலிருந்து அக் கடிதம் வந்திருந்தது. என்னையும் அறியாமல் ஏதோ ஒரு வித சக்தி உந்தித் தள்ள, கடிதத்தைப் பிரித்துப் படித்தேன். கண்கள் கலங்கிவிட்டன.

ஆமாம்; லதா ரங்கூனிலிருந்து எழுதியிருக்கிருள். ஆஹா! பெண்மையின் பிரிவு எத்துணை தூரம் என் மீது பதிந்து, அவ்வளவு காலமாகத் தன்னுள் அடக்கி வைத்திருந்த அன்பு முழுவதையும் வெளிக்காட்டி இக் கடிதத்தை எழுதியிருக்கிருள். ஆனுல்...!

ஆமாம்; சுஜாதா! தன் அன்பு வலையில் என்னைச் சிக்க வைத்து வேடிக்கை பார்த்து விளையாடும் அவள் கதி—?

எவ்வளவு நாழிகை வாசல் காம்பவுண்டில் சாய்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தேனே தெரிய வில்லை! சித்தம் கலங்கதது. திரும்பி என் அறைக்குள்

நுழைந்தவுடன், கண்ணாடியில் தன் யௌவனப் பொலி வின் பூரிப்பிலே மயங்கி நின்ற சுஜாதாவைக் கண் டேன். என் வரவு கண்டு திரும்பினாள் அவள். சுருள் சுருளாக நெளிந்திருந்த அவள் கேசம் சரிந்து கிடந்தது. அதே தருணம் லதாவின் நினைவு நெஞ்சைத் தட்டி எழுப்ப உணரலானேன்.

"தாங்கள் அதற்குள்ளாகவே ஆபீஸிலிருந்து திரும்பிவிட்டீர்களே. நான் பள்ளிக்கூடம் விட்டு வந்து இன்னும் பத்து நிமிடம் கூட ஆகவில்லை" என்று வழக்கம்போல அன்பு குழையக்கேட்டாள்.

ஆனால், உண்மை நிலையை அவள் எவ்விதம் அறிய முடியும்? மனமறிந்தவகையில் உண்மைக்கு உறையிட்டு ஏதோ உளறி வைத்தேன். நம்பிவிட்டாள் சுஜாதா.

கொஞ்ச நேரம் சென்றதும், வேலை காரணமாக தன் அறைக்குப் போய்விட்டாள். சந்தர்ப்பம் சமயத் தில் உதவ, லதாவின் கடிதத்தை மீண்டும் ஒருமுறை புரட்டினேன்.

"அன்புள்ள அத்தான்,

பர்மாவில் குமுறிப் புரண்ட பாழும் யுத்தத்தின் காரணமாக இதுகாறும் கொந்தளித்துக் குழம்பிய யுத்த அலறல் இன்றைய நிலையில் ஏதோ ஓரளவு அடங்கி விட்டதெனலாம்.

பர்மாவிற்குப் பெற்றோர் சகிதம் புறப்பட்டபோது அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக நின்ற என்னை சமாதானப் படுத்தினீர்களே நினைவிருக்கிறதா? நாங்கள் சென்ற சில மாதங்களுக்கப்புறம்தான் யுத்தம் தொடங்கி விட்டதே!

தங்களது அன்புத் தொடரில் இணைத்துப் பிணைக்கப்பட்டுள்ள லதா அடுத்த வெள்ளிக்கிழமை புறப்பட்டுவருகிறேன், ஸ்டேஷனில் சந்தியுங்கள்.

தங்கள்,
லதா.”

புதைந்து கிடந்த எண்ணங்களைக் கிளறி விட்டு விட்டாள் என் அத்தை மகள் லதா, கடந்த ஆண்டுகளை நோக்கிப் பின் சென்றது மனக் குதிரை. உள்ளம் பழைய நினைவில் ஆழ்ந்தது.

அப்பொழுது லதாவிற்கு வயது பத்திருக்கும்! நான் அவளைவிட மூன்றுண்டுகள் மூத்தவன்.

கால மலரில் வருஷ இதழ்கள் சில உதிர்ந்தன. அதற்குள் எவ்வளவு மாறுதல்? லதாவும் அடியோடு மாறிவிட்டாள். முன்போல் அடிக்கடி பேசாமல் அவள் பதுங்கி விடுவாள்.

அறியாப் பருவம் நீங்கி அறியும் பருவம் அடைந்து விட்டாள் என்ற எண்ணம் போலும் அவளுக்கு. வலியப் போய்ப் பேச முயன்றுலும், அப்படியே குபீரென்று சிவந்துவிடும் அவளது க்துப்புக் கன்னங்கள்.

வாழ்க்கையை நடத்த வருவாயை எதிர்நோக்கி பர்மாவிற்கு கடல் கடந்து சென்றனர், லதாவின் பெற்றோர்கள். உடன் சென்ற லதாவை வழியனுப்பினேன். அரைக்கணமும் அவளது பிரிவைச் சகிக்க முடியாத நான் அவள் திரும்பும்வரை எப்படிப் பொறுப்பேன் என்ற நினைவு என் உள்ளத்தை உருக்கியது. பிரிவின் வேதனை பொல்லாததாயிற்றே.

நிர்மலமாயிருந்த என் மனத்திரையில், எங்களது முதல் சந்திப்பின் செய்தியைத் தன் வாழ்க்கைச் சுருளில் புகுத்திக்காட்ட ஆரம்பித்தாள் சுஜாதா.

சுஜாதா ஓர் ஆரம்பப் பாடசாலையின் ஆசிரியை. அப்போதுதான் எங்கிருந்தோ மாற்றலாகி வந்திருந்தாள். வீடு கிடைப்பது குதிரைக் கொம்பாயுள்ள இக்காலத்தில் நான் வாடகைக்கிருந்த 'பிளாக்'கில் கடைசி அறையை வாடகைக்கு அமர்த்திக் கொண்டாள் சுஜாதா.

அன்று இரவு நடுநிசி.

ஆழ்ந்த நித்திரையிலிருந்த நான் திடீரென்று அழுகுரல் கேட்டுத் திடுக்கிட்டேன். அழுகை சப்தம் வரவர உச்ச ஸ்தாயியில் வந்தது. சப்தம் மிதந்து வந்ததிசையைக் கவனித்தேன், கண்களைத் துடைத்துக் கொண்டு. சுஜாதாவின் அறையில்தான் அழுகுரல் கேட்டது. விரைந்து சென்றேன்.

வயது முதிர்ந்த ஸ்திரீ ஒருத்தி பயங்கரமாக வெறித்து நோக்கியபடி படுத்த படுக்கையாய்க் கிடந்தாள். அவள் முகத்தில் சவக்களை பிரதிபலித்தது; அவள் கைகளைப் பிடித்தபடி அழுதாள் அந்த இளம் யுவதி.

அவளைப் பரிதாபம் நிறைந்த கண்களால் நோக்கி, "அம்மாவுக்கு என்ன உடம்பு?" என்றேன் அன்பாக. கண்களில் பொங்கி வழிந்த நீரைக் கட்டுப்படுத்த முடியாதவளாய், "ஐயா, என் தாய்படும் நரக வேதனை இந்த ஜன்மத்திலா தீரப் போகிறது, இனிக் கட்டையுடன்தான்."

"காரணம்?"

"ஆமாம்; அதைத்தான் சொல்லவிருந்தேன். தன் புதல்விக்கு—எனக்கு மணம் செய்வித்து பெற்ற மனம் குளிரக் கொடுத்து வைக்காமல் அவள் கணவன்—என் தந்தை இறந்து விட்டாரே என்ற ஏக்கம். அன்று சவத்தைக் கட்டிக் கொண்டு அழுததை இப்ப நினைத்தாலும் ஒரே பயமாக இருக்கிறது. அன்று ஆரம்பித்த பிதற்றல், இன்னும் தீரவில்லை"

இவ்விதம் சொல்லி முடித்து, பின் தலை நிமிர்ந்தாள். ஒருகணம் அவளது பார்வையில் ஒருவித லஜ்ஜை! தான் இதுவரை பேசிக்கொண்டிருந்தது தன் வயதொத்த ஒரு இளைஞனிடம் என்ற எண்ணம் போலும்! பெண்களுடன் பிறந்த நாணம் அவளையும் வந்தணைய என்னை வழியனுப்பினாள்.

நாட்கள் நழுவின. ஆனால், அன்று அவள் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் இன்னும் என்னுள் எதிரொலித்து நின்றது.

ஒருநாள் ஆபீஸிற்குக் கிளம்பிக் கொண்டிருந்தேன். அவள் கையில் இருந்த பட்சணம் நிறைந்த "பிளேட்"டை என் மேஜைமீது வைத்து "அவசியம் இதைத் தாங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். இன்று என் பிறந்த நாள்" என்று மன்றாடினாள்.

உவந்தளித்ததைப் பூரிப்புடன் புசித்தேன்.

ருசிகரமான நாவலொன்றின் பக்கங்களைப் போல வாழ்க்கை நடந்தது. மனிதன் பழக்கத்துக்கு அடிமை என்ற உண்மையை அன்றுதான் புரிந்து கொண்டேன். அந்தச் சமயத்தில்தான், சிற்சில சமயங்களில் என் நினைவின் நிழலினின்றும் விடுபட்டிருந்த என் அத்தை மகள் லதாவிடமிருந்து தபால் பறந்து வந்தது.

அன்று ஆபீஸிலிருந்து வந்துகொண்டிருக் கையில் நாளை மாலை காணப் போகும் லதாவைப் பற்றி எண்ணமிட்டுக் கொண்டு வந்தேன். வாசலில் வண்டி ஒன்று வந்து நின்றது. 'குமார்' என்ற குரல் கேட்டுத் திரும்பினேன். சுஜாதா வருத்தம் தோய்ந்த முகத் துடன் நின்று கொண்டிருந்தாள். காரணத்தைக் கேட் டேன், பதட்டத்துடன் பதில் எதுவும் சொல்லவில்லை. அவள் விழிகளில் கண்ணீர் தேங்கியது. பேசாமல் என்னிடம் 'டைப்' செய்திருந்த காகிதம் ஒன்றை நீட்டி ஞள். படித்தேன்; தலை சுழன்றது, அவளை மாயவரத் திற்கு மாற்றி விட்டார்கள். விரைவில் சென்று 'சார்ஜ்' ஒப்புக்கொள்ள வேண்டுமாம். சுவர்க்கத்துக்கு ஏறிய நூல் அருந்துவிட்டது.

"குமார், என்னை மறந்துவிட மாட்டீர்களே" என்ருள் விம்மிய வண்ணம். கபடமற்ற அவளது உள்ளத்தினின்றும் கிளம்பிய இக்கேள்வி கல்லினும் கடிய என் மனத்தில் அம்பெனப் பாய்ந்தது. லதா போட்டிருக்கும் லெட்டர் பற்றி ஏதேனும் தெரிந்திருந் தால் இப்படி அவள் கேட்பாளா?

"ஏன் இவ்வித சந்தேகம் சுஜாதா ? முன்பின் அரியாதிருந்த நாம் ஒன்று கூடிஞேம். பின் இப்படி எதிர்பாராமல் பிரிகிருேம். ஆனுல், எப்படியும் பிரிந்த நாம் சந்திப்போம், வருந்தாதே அம்மாவைக் கவன மாகப் பார்த்துக் கொள்."

மேலே பேச முடியாமல் கண்ணீர் தடைபடுத்தியது.

அவளுடைய விழிகள் வடித்த நீர்த்துளிகள் அவள் மேனியை நனைத்தன. கோலக் கரங்களைக் குவித்து 'நமஸ்தே' தெரிவித்தாள். மறுநிமிஷம் வண்டி

மறைந்தது. ஆனால், அவள் பிரதிபிம்பம் மறையவில்லை, என் அகக்கண்களை விட்டு.

அன்று பூராவும் தூக்கம் பிடிக்கவில்லை. சுஜாதாவின் நினைவில் மனம் இணைந்து சுழன்றது.

அடுத்த நாள் லதாவைக்காண ஸ்டேஷன் சென்றேன். வழியில் லதாவின் இன்ப நினைவு; நீல விழிகளைச் சுழலவிட்டு செவ்வதரங்களை லேசாக மடித்து குறுநகை பூக்கும் அவளது மோகன ரூபம் தோன்றி மறைந்தது.

ரயில் வந்தவுடன் என் கண்கள் லதாவைத் தேடின. 'அத்தான்' என்ற குரல் கேட்டது. நான் தேடிநின்ற அதே வண்டியில்தான் லதா நின்றாள். விழித்துப் பார்த்தேன். "யார், லதாவா?" என்று அலறிவிட்டேன். மலர்ந்த ரோஜா போன்றிருந்த அவள் வாடிப் போய்ப் பார்க்கப் பரிதாபமாகக் காட்சியளித்தாள்.

"அத்தை, மாமா எங்கே?" என்று கேட்டேன். 'ஓ' வென்று அலறிவிட்டாள். துன்பத்துக்குமேல் துன்பம்! அனாதையான எனக்கு அவர்களாவது உதவி செய்வார்கள் என்றிருந்தேன். அதுவும் பகற்கனவாகி விட்டது.

இங்கேயே இருந்து உடம்பைப் பார்த்துச் செல்லும்படி கெஞ்சினேன். அவள் கேட்கவில்லை. நான் அவளை வரவேற்க இருக்க, அவள் என்னை உபசரித்தாள். பழம் நிறைந்த பை ஒன்றை என்னிடம் கொடுத்தாள். ஆனால், அவள் அன்புச் சுமையின் அந்தரங்கம்–!

ரயில் புறப்பட்டது.

அதற்குள் எப்படி அவ்வளவு நாட்கள் கழிந்தனவோ? அன்றைக்குப் புத்தகம் ஒன்றைப் புரட்டிக்

கொண்டிருந்தேன். ஜன்னல் வழியே லெட்டர் ஒன்று வந்து விழுந்தது. லதாதான் எழுதியிருக்கிருள் என்பதை ஊகித்ததும் அவசரமாய்ப் பிரித்தேன்.

"அன்புள்ள அத்தான்,

தாங்கள் என்னிடமிருந்து இத்தகைய லிகிதத்தை எதிர்பார்த்திருக்க மாட்டீர்கள்.

என் இதய பீடத்தில் வைத்துப் பூஜிக்கும் தங்களை வேருெரு ஜீவனும் அந்தரங்க பிரேமையுடன் அர்ச்சிக்கிற ரகசியத்தை இன்றுதான் நான் அறிந்து கொள்ள வாய்ப்புக் கிட்டியது. நான் தங்களுக்கு முறைப் பெண் என்று அவளுக்கு எவ்விதம் தெரியும்?

சுஜாதாவின் பழக்கம் ஏற்பட்ட நான்காம் நாள் அவள் வீட்டிற்குச் சென்றிருந்தேன். பெட்டியைத் திறந்து காண்பித்தாள். அப்போது ரோஜா மலர்கள் புடைசூழ அவற்றின் பரிமள வாசனையிடையே திளைத்து வீற்றிருந்தீர்கள் தாங்கள். ஆமாம்; தங்கள் போட்டோவைத்தான் குறிப்பிடுகிறேன். என் உடல் வியர்க்க, நல்ல வேளையாக நிலையைச் சமாளித்துக் கொண்டு, மெல்ல நகர்ந்து விட்டேன்.

எனினும் அவள் எவ்விதத்திலும் தங்களுக்கு ஏற்றவள். அவளிடம் பழகியது குறுகிய காலமெனினும் தங்களிடம் முழு நம்பிக்கையும் வைத்துள்ளாள் சுஜாதா.

சுஜாதாவைத் தாங்கள் உயிர்த்துணையாக ஏற்றுக் கொள்ளவேண்டுமென்பதுதான் இந்த அபலையின் ஒரே வேண்டுகோள். அதுவேதான் என் அத்யந்த ஆசை.

இங்ஙனம்,
தங்களவளாயிருந்த,
**லதா.**"

உள்ளம் உருகியது; உடல் உருகினேன். நரக வேதனை என்னுள் சுயாட்சி செலுத்த, நான் செயலிழந் தேன்; செய்வதறியாமல் சித்தம் குலைந்தேன்.

திடுமெனக் கதவு திறக்கும் சப்தம் கேட்டது. சுஜாதா ஓடோடி வந்தாள்- என்ன ஆச்சர்யம்! கனவில் நிகழ்வது போலிருந்தது. என்னவோ ஏதோ என்று பதறிப்போனேன்.

"லதாவின் உடல்நிலை ரொம்பவும் கவலைக்கிடமாக இருக்கிறது. 'மாரடைப்பு' ஏற்பட்டு விட்டது. இப்போதுதான் இங்கே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந் திருக்கிறேன் புறப்படுங்கள்" என்றாள். துயரம் ததும்ப.

நடுங்கும் கைகளுடன் அவளிடம் லதாவின் அந்தக் கடிதத்தைக் கொடுத்தேன். சிறு குழந்தைபோல விசிக்கத் தொடங்கி விட்டாள் சுஜாதா.

உடனே புறப்பட்டு ஆஸ்பத்திரியை அடைந்தேன், சுஜாதாவுடன். லதா சுருண்டு கிடந்தாள். அக்காட்சி யைக் கண்டதும் எனக்கு இதயத்துடிப்பே நின்று விட்டது போலாயிற்று. லதாவைப் பற்றி அருகில் நின்ற நர்ஸிடம் கேட்டேன். அவள் உதட்டைப் பிதுக்கினாள். என்ன ஏமாற்றம்? அரவம் கேட்டு மெதுவாக மூடியிருந்த கண்களைத் திறந்தாள் லதா. இதழ்கள் அசைந்தன. ஆனால், வார்த்தை ஒன்றுகூட வெளிக் கிளம்பவில்லை. என்னையும் சுஜாதாவையும் ஒரு முறை ஆர்வத்துடன் நோக்கி, சமீபமாக வரும்படி சமிக்ஞை காட்டினாள். அவளுடைய கைகள் என் கையையும் சுஜாதாவின் கையையும் அன்புடன் இணைத்தன. அப்போது அவள் முகத்தில் ஒருவிதக் காந்தி, மின்னல்போலத் தோன்றி மறைந்தது. மறுகணம் அவளது இமைகள் மூடிவிட்டன.

அமைதி விளையாடிய நேரமாயிற்று அது?

# தில்லைக்கண் !

பூவை நிகர்த்து, பூமணம் சொரியும் பூவைக்கு அவளென்ன குறைந்தவளா? ஏட்டிடை ஒட்டி, எழில் மிகப் பரப்பும் காவியப்பதுமை அல்லவா அவள்? இதழ் விலகி இதழ்க் கடைச் சிரிப்பினை விலக்கும் அந்தப் பாங்குக்கு ஈடேது, எடுப்பேது? பருவத்தின் துதிபாடிய மெருகுடன் வாய்த்தது அவளது போதை அழகு; போதையில் போதம் இருந்தது. அவள் பெண்தானே? அன்றி, மோகினியோ?

'ஏலே தில்லைக் கண்ணுப்பொண்ணு!.... இனி ஒரு வாட்டி அப் பொறப்புலே உன்னை இந்தக் கண்ணுலே ஏறெடுத்துப் பார்க்க ஏலுமாக்கும் என்னுலே?... ஊக்கூம்... எனக்குச் சம்சயந்தான்!... காளியாத்தா தேரோட்டம் பத்து இருவது வந்து பறிஞ்சிருச்சே?... ஒட்டி இருக்க வேணுமின்னு சொப்பனம் கட்டினேம். ஆனு, இப்படி நம்ம ரெண்டு பேரையும் வெட்டிப் பிரிச்சிருச்சே பாழத்த தலைவிதி!... ஊக்கும், விதி ஒண்ணும் பிரிக்கலே!... நீதானுக்கும் என்னை விட்டுப் புட்டுப் பிரிஞ்சு போனே?...ம்...!'

விளையாட்டுக் காட்டிய கனவுகளோடு விளையாடி நின்ற முத்தரசனுக்கு, புகையிலைக் காம்பைக் கிள்ளும் நேரம், ஆத்திரம் மண்டி வந்தது. கனவு நிலையி

ளின்றும் விடுபட கண்களைக் கசக்கி விட்டான் முத்தரசன். வழி நடந்தான். புழுதியில் கிடந்த ரச மட்டமும் கரணையும் கட்கத்தில் குந்தின. இடைப்பட்ட ஐயனார் சாமியை தண்டனிட்டபடி நடை தொடர்ந்தான். கால்கள் தள்ளாடின. கண்ணீருடன் உறவாடிக் கிடந்த நரை முடிகளுக்குக் குறுக்கே நிற்க வில்லை அவன்!

"முள்ளுப்பத்தை மேலே நின்னு தவியாத் தவிச்சுத் தண்ணியா உருகிப் போனேனுங்களே, மச்சான்!" என்றாள் அவள்–முத்தரசனுக்கு 'முன்றானை போட்டவள்' அவள்.

"மெய்யாலுமாங் காட்டி?..."

"பின்னே?... வளமையா வார பொழுது எனக்கு மட்டுப் படாதுங்களா?"

"ஆமா, ஆமா!..."

"நடைத் தடத்திலே யாராச்சும் குறுக்கே மறிச்சாங்களா?"

"ம்!"

"யாராம்?"

"ஆளுமில்லே, பேருமில்லே! பழங்கஞ!..."

அழகம்மை தன் கணவனையே உற்றுப் பார்த்தாள். முகச்சுருக்கங்களின் எண்ணிக்கை கூடிற்று. நெடிய மூச்சுகள் இரு காப்புக்களாகப் பிரிந்து, இரு வேறு மெல்லுணர்ச்சிகளுக்கென்று நின்று பிரதிநிதித்துவம் கோரி, உரை நிகழ்த்தின. அவள் சுதாரித்துக் கொண்டாள்.

"மச்சான்!"

ஸ்பரிசம் முத்தரசனின் மெய்யுணர்வுப் போக்குக்குக் கசையடி கொடுத்திருக்க வேண்டும்!

"என்ன, பொண்ணு!"

"சுடு கஞ்சிஆறிப்போவும், சுருக்கண ஒடியாங்க!"

"சுடு கஞ்சிக்கு ஆறிப் போயிடக் கூடிய பக்குவம் தெளிஞ்சிடுது!...ஆனு, எனக்கு!......அறுவது தாண்டி யாச்சு. பலாபலன்; தூத்தேரி!..."

குறுவாயிலில் இருந்த தண்ணீர்ச்சால் அவனது உழைப்புக்குப் 'போற்றி' பாடி, உழைப்பின் புனிதமான வேர்வையைக் கழுவியது.லேஞ்சில் முடிந்திருந்த தினக் கூலிப் பணத்தை அவிழ்த்து எடுத்துக்கொண்டு, முகத்தைத் துடைத்தான். கம்பங் களியும் ஊசி மிளகாய் வற்றலும் உப்புக் கல்லும் வெங்காயத் துணுக்குமே அப்போதைய அவனது நினைவுப் பூக்களாய்க் கமழ்ந்தன. ஆமணக்கு எண்ணெயில் ஊறித் திளைத்த திரியில் தீயின் நாக்குகள் கிளை பரப்பின.

"மச்சான்! யாரோ சிலம்பனும், ஒரு ஆம்பளை ஒங்களைத் தேடி வந்தாக. ஒரு வாய்க்கு வெத்தலைச் சருகு போட்டுக்கிணு குந்தியிருந்தாக; அசலில் வைத்தியரைக் கண்டு தண்டிக்கிணு திரும்புகாலிலே ஒங்களை அவசியமாப் பாக்கணுமாம். அரசர்குளம்னு ஊராம்!...சொன்னுக. வயசுகூட உண்டனவே ஆயிருக்கும்!" என்ருள் அழகம்மை.

உருட்டிக் கொண்டிருந்த கவளம், முத்தரசனின் மனத்தேரின் சக்கரங்களை உருட்டிவிட்ட விந்தையே விந்தை...!

விளையாடிய சுந்தரக் கனவுகளிலே ஒன்று.

பூ இருக்கிறது; அது நுகரப்படும் போதுதான் பிறவிப்பயன் அடைகிறது.

தில்லைக்கண் காட்டுப் பூ. நாட்டுப்புறத்தில் முத்தரசன் என்ருல் அவளிடத்தில் ஒரு கிறக்கம். அவனு

டைய முறைமைப்பெண் அவள். கனவின் ஓட்டத்துடன் காலம் ஓட, காலத்தின் கைப்பிடியை நழுவ விடாமல் தில்லைக்கண் ஓட, பருவம் அவளைப் பூப்பெய்தச் செய்தது. முத்தரசன் மகிழ்ந்து போனான். முத்துப் பல் தெரியச் சிரித்து, அரசன் போல நடந்தான். பூவரசமரப் போத்தருகில் கங்காணி வீட்டுத் தோட்டக் கிணறு. தண்ணீரும் தண்சிரிப்பும் கை இணைய அன்ன நடை பயின்று வந்தாள் அவள்.

'எலே பொண்ணு!'

அவள் 'பிகு' பிடித்தாள். நாட்டு மண் சும்மாவா ?

'இந்தாலே!...'

கை தொட்டான், மனம் தொட்டுப் பழகியவன்!

'மச்சான் கண்ணாலப் பந்தலிலே எங்கையைப் பிடிக்கிறதுக்கு முந்தி இப்படி நீங்க செஞ்சாக்கா, எனக்கு வெக்கம் வராதாக்கும்?' என்று நாணித் தலை குனிந்தாள் தில்லைக்கண்.

'அப்பிடியின்னா, நீதானே மெய்யாலுமே என் பெஞ்சாதி ?'

'இதுக்கு இன்னமா ஐயறவு ஒங்களுக்கு?...நீங்க இல்லாம எனக்கு ஏதுங்க மச்சான் நிழலு ?... அப்பன்கூட ஒங்ககிட்டே இது விசயமாய்ச் சொல்லி யிருக்குங்களே?...'

'சபாசு!...சபாசு!...'

கனவின் எதிர்த் துருவ மையம்.

'சாமி வரம் தந்தாச்சுது. இனிமெ நானும் எங்க அத்தை மகள் தில்லைக்கண்ணும் கண்ணாலம் கட்டிக் கிட்ட மாதிரிதான்!' என்று கனவுக் கயிற்றை வழி நெடுக விசிறி விட்டபடி நடந்த முத்தரசனின் விழி

வழியில் அங்காளம்மை சந்நிதியில் தெரிந்த ஒரு காட்சி, அவனுடைய கழுத்தை இறுக்கும் பிடிகயிருக உருமாறிற்று.

ஊராளும் தெய்வத்தை முன்வைத்து, தில்லைக் கண்ணை மணமகளாக அடைவதற்கான 'பரிசம்' நிகழ்ச்சி மணமகன் சார்பில் நடை பெற்று முடிந்தது.

முத்தரசன் சித்தம் குழம்பினன். 'தில்லைக்கண்ணு இம்மாந் தொலைவு என்னை வசமா ஏமாத்திப் புட்டாளே?... அரசர் குளம் மாப்பிள்ளையாமில்ல இந்த ஆம்பளை? பேரைப்பாரு பேரை!... சிலம்பனுமே?... ஆளு சொகுசிலே மவளும், ஆளோட பணப்பசையிலே ஆத்தாளும் பித்துப் புடிச்சுப் போயிட்டாக போல!'

பரிசத்துக்கு எடுத்து வந்திருந்த நாவல்பழ நிறப் புடவையில் அவன் கண்ணீர் சொரிந்தான்.

எருக்கலைக் கோட்டை அவனுக்கு அசல் நாடானது. கிறுக்குப்பிடித்த போக்கில் நடந்தான். காரைமுள் காட்டினூடே பாதம் பதித்தான். பேய்க்கிணறு ஒன்று தென்பட்டது. அந்தியின் ரத்தச்சிவப்பு அவனது விரக்திக்கு வெறியூட்டியது. 'தூ!... தில்லைக்கண்ணும் தில்லைக்கண்ணு!' என்று பற்களைக் கடித்தான். அவள் அவனுடைய வெஞ்சினப் பற்களுக்குள் அகப்பட்டு விடுவாளா அவ்வளவு லேசில்-லகுவில்? சுற்றிச் சூழ நோக்கினன். கருக்கலிலிருந்து நடந்து, நடைமெலிந்து உதடுலர்ந்து உள்ளம் நொந்து போயிருந்தான். தாகம் வீணை மீட்டியது. கண்களைச் சுழலவிட்டான். எங்கெங்கு நோக்கினும் தில்லைக்கண் தான் அழகு நடம் பயின்ருள்; ஆனந்தக் கூத்து ஆடினுள்! 'தில்லைக் கண்ணு!' என்று ஓலம் பறித்தான். தில்லைக்கண் இல்லாத வாழ்வு கசந்தது. நீர் வழிகேட்ட விழிகளுடன்,

சுழிபறித்த நீரில் குதிக்க முனைந்திட்ட வேளையில் 'ஐயையோ!' என்னும் புதிய குரல் கேட்கவே, ஓட்டமாக ஓட வேண்டியவன் ஆனான். மனிதாபிமானம் என்னும் குணநலம் ஒரு வரப்பிரசாதமாயிற்றே !

சுருக்குக் கயிற்றில் உயிர் மலர், இதழ்களை உதிர்க்க எத்தனம் செய்ததைத் தடுத்த புண்ணியம் முத்தரச னுக்கே கிட்டியது.

காதல் தோல்வி கண்ட பாவைக்கு அடைக்கலம் ஆனான் முத்தரசன்.

அவள் அழகம்மை!

ஆடி வெள்ளத்தைச் சாடி நிற்கும் நாணல் ஒரு புறம் துயருற்றாலும், வெள்ளத்தின் சுழிப்பைக் கண்டு மறுபக்கம் மகிழ்வதைப்போல, விழி கள்ள நகை புரிந்தது!

ரேக்ளா வண்டிச் சத்தம் கேட்டது.

கண்களைத் துடைத்துக் கொண்டு முத்தரசன் எழுந்தான்.

"நானுதான் சிலம்பன்!"

கெண்டை வேட்டியும் பட்டுச் சோமனும் பொலிவூட்ட, நரையும் திரையுமாகக் காட்சி கொடுத்தான் சிலம்பன்.

அவனையே விழுங்கி விடுபவனாக வெறித்துப் பார்த்தான் முத்தரசன்.

பிறை நிலவின் கதிர்மணிகளை மிதித்துக் கொண்டு அழகம்மை வாசல் திண்ணையில் சாய்ந்து நின்றாள்.

"நீங்கதானுங்களே முத்தரசன்!"

“ஆமா ... ஆமா! ...”

“நீங்க பெரிய மனசுபண்ணி எங்கூட வரவேணும், அரசர்குளம் முக்கு வரைக்கும்!”

“எதுக்காம்?”

“எம்பெஞ்சாதி தில்லேக்கண்ணு சாகப் பிழைக்கக் கிடக்குது. உங்களே ஒரு தரம் பார்த்துப்பிட வேணும்னு துடியாத் துடிக்குது. மஞ்சக் கொல்லே நாட்டு வைத்தியர் சொன்னரு, நீங்க வந்து அதை ஒருதரம் முகம் பார்த்தாக்க, கடவுளரு கண் பார்க்க, தில்லேக்கண்ணு கண் ரெண்டையும் திறக்கும்னு!”

முத்தரசன் சிரித்தான், தன் மனித இதயத்தின் வாசற் கதவுகளே மூடி அடைத்த வெறியுடன்! “தில்லேக் கண்ணு செத்தா என்ன, பிழைச்சா என்ன? நான் செத்து வருசம் எம்புட்டோ அழிஞ்சு போச்சே? நான் வர ஏலாது!”

“அப்படிச் சொல்லாதீங்க, முத்தரசன்! பழசு பட்டதை மனசிலேருந்து அழிச்சுப்பிடுங்க. ஒரு உசிரை காத்த பெருமை உங்களுக்கு வரட்டும். ஓடியாங்க. ஓங்களுக்கு ‘அது’ கைகூடலேங்கிற வன்மத்தை மறந்திட்டு ஓடியாங்க. என் சம்சாரம் இல்லாட்டி, என்னேட குடும்பமே அஸ்தமிச்சிப் போயிடுமுங்க. நீங்க அதுக்கு மாமன் மகன். உங்களேக் காண வேணுமிங்கற மனசு ஆசையைச் சொன்னதுமே, நான் மறுபேச்சாடாம ஓடியாந்திருக்கேனே, இந்த நடப்பு உங்களுக்குத் துளியளவு ஈவிரக்கத்தையாச்சும் முளேக்கிள்ளி விடலேயா?”

“சரிதான், போய்யா! எஞ்சொத்தை அபகரிச்சுக் கிட்ட பாவி நீ! நீ இப்ப போகப்போறியா? இல்லே!”

என்று சொல்லி, காலடியில் 'சரணம்' பாடிக் கிடந்த கழியை எடுத்தான் முத்தரசன்.

"நீங்க மனுச சென்மமே இல்லே!'' என்று அலறினான் சிலம்பன்.

மறுகணம், முத்தரசன் மிருகமானான்; சிலம்பனின் மண்டையில் ரத்தம் வழிந்தது.

"ஐயையோ !...அண்ணாச்சியோ !'' என்று ஓலமிட்டவாறு ஓடிவந்த அழகம்மை, தரையில் சாயவிருந்த சிலம்பனை மடியில் ஏந்திக் கொண்டாள் !

சுங்கடிச்சேலைக் கிழிசல் சிலம்பனின் நெற்றிக்கு அரண் அமைத்தது!

முட்டியோடியது கண்ணீர்; கட்டி பாய்ந்தது குருதி; தட்டிக்கேட்டது மனச்சான்று.

"நெசமாகவா, அழகம்மை?''

"ஆத்தா அங்காளம்மை ஆணையா, இவுகளேதான்! எங்க அண்ணாச்சி - ஒக்கப் பொறந்த பொறப்பு!'' என்று சத்தியம் செய்தாள் அழகம்மை.

மயக்கம் நீங்கவே சிலம்பனின் இதழ் அணை விலகியது.

"முத்தரசன்! என்னை நம்புங்க. என்னோட கெட்ட நடத்தைகளை—அதானது, பணப்பசையிலே கண்ணு மண்ணு தெரியாம சாராயம் காய்ச்சி அப்பிடி இப்பிடிச் சுத்தித் திரிஞ்ச என் செய்கைகளைத் திருத்த தில்லைக் கண்ணு ஒருத்தியாலேதான் முடியும்னு ரோசிச்சு, எங்க ஆத்தா தில்லைக்கண்ணு காலிலே விளுந்து கெஞ்சியிருக்குது. எனக்குத் தில்லைக்கண்ணு மேலே ஒரு கண்ணு உண்டுங்கிற துப்பை எந்தக் கடவிலேயோ புரிஞ்சிருக்க வேணும் எங்க ஆத்தா. சாமானியமா தில்லைக்

கண்ணு மசியலே. அப்பாலே, தில்லைக்கண்ணு குடும்பத்துக்கு எப்பவோ செஞ்ச உதவிகளை எடுத்துச் சொல்லியிருக்குது. தன்னோட இஷ்டப்படி அது ஒத்து வராட்டி அப்பவே செத்துச் சிவலோகம் போயிடப் போரதாகவும் பயமுறுத்தி அழுதிருக்குறுங்க, எங்க ஆத்தா. தாயில்லாப் பொண்ணுன தில்லைக்கண்ணு எங்க ஆத்தாளையே தாயாட்டம் மதிச்சு, அது உசிரையே பெரிசா மதிச்சு, என்னையே கட்டிக்கிடச் சம்மதிச்சுது. அது மனசை எங்க 'பலதானத்' தன்னிக்குத் திறந்து காட்டிச்சு. எங்களைப் பத்தி நல்லாப் புரிஞ்சதாலே, உங்களைக் கண்காணிச்சுக் காப்பாத்திறதுக்காக, என்னோட கூடப்பிறந்த தங்கச்சி அழகம்மையைத் தூது அனுப்பி, ஒரு கூத்து ஆடவும் வச்சுது! எங் தங்கச்சிக் கண்ணு கண்ணுக்குள்ளறவே சதா நின்னுக்கிட்டேயிருக்கும். ஆயிரம் தபா நினைச்சிருப்பேன் இங்கே வரவேணும்னு!...ஆனு, நீங்க பழசை மறந்திருக்க மாட்டீங்கன்னு அஞ்சி, ஒஞ்சுபோய் இருந்திட்டேன். ஒண்ணு சொல்லுறேன். தில்லைக்கண்ணு என் வரைக்கும் தெய்வம்! அது எனக்குப் பெண்டாட்டியாக வாய்க்காமப் போயிருந்தாக்கா, நான் எப்பவோ செத்து மடிஞ்சிருப்பேனுக்கும்! என் தெய்வத்தோட கடைசி ஆசையைப் பூர்த்தி செய்ய என்னுலே முடியலே! நீங்க பாவி! பாதகன்!'' என்று கத்தினுன் சிலம்பன். கண் குறிப்பில் கழி சுழன்றது.

நெற்றிப் பொட்டில் வழிந்த ரத்தத்தைத் துடைக்கவில்லை முத்தரசன். 'மச்சான்!' என்று விளித்தான் அவன். தெய்வத்தை நினைத்தான்; தொழுதான். ''வாங்க, போவோம்! பயப்பிடாதேங்க, தில்லைக்கண்ணு! பொழைச்சுக்கிடும்!...அழகம்மை நீ எனக்கு வாய்ச்சதுக்கு உண்டான அர்த்தத்தை இப்பத்தான் என்னுலே

சரிவர விளங்கிக்கிடமுடியுது! வாயே...நீயும்!'' என்று நெஞ்சடைக்க வேண்டினன் முத்தரசன்.

நிலவின் தூய ஒளித்தடத்தில் நெருங்கிக் கிளம்பிய காட்டு வழிப் புழுதியுடன் புழுதியாக, 'எங்கும் நிறைந்தோன்' எல்லாம் உணர்ந்தவன் போன்று சிரித்த 'புதிர்ச் சிரிப்பை' 'ரேக்ளா வண்டிச் சத்தம் எடுபடாமல் செய்து கொண்டிருந்தது!

# அம்மான்

"ஏதாச்சும் வேறே புதுச் சேதி காதிலே விழுந்திச்சா?... ராத்திரி கேள்விப்பட்ட தாக்கல் மெய்தானு?..." என்று இரண்டு கேள்விகளைக் கேட்டாள் பொன்னம்மா. உதித்த வினக்கள் உந்திக் கமலத்தில் தீயை வளர்த்தன; செந்தழலின் கொடுமை அவருடைய முகத்திரையில் இன்னல் விளைவித்தது; துயரம் விழிகளிடை கண்ணீராக உருவெடுக்கத் தொடங்கியது.

பிரமன் ஆடாமல் அசையாமல் நின்ருன்; அவிழ்ந்த தலை முண்டாசை உதறித் தோளில் வீசக்கூடக் கருத்திழந்து போனுன் அவன்; ஆனல், நெடு மூச்சு மட்டும் பிரிந்தது. அவனையும் அறியாமல் நிகழ்ந்த நடப்பு இது.

"மச்சான்!..." என்று மீண்டும் உரிமைக் குரலைச்-சொடுக்கினுள் உரிமை கொண்டவள். அவளுக்குத் தெரிந்த வகையில் நீள் மூச்சு வெளி வந்தது. அது எண்ணமிட்டது: 'கருப்பண்ண சாமி! நேத்திக்கு ராத்திரி எங்க வீட்டுக்காரர் கேள்விப்பட்ட சேதி பொய்யாக இருக்கவேணும்; எங்க மனசிலே பாலை வார்க்கிற நல்ல புதுச்சங்கதி ஏதாச்சும் மச்சான் காதிலே விழுந்திருக்க வேணும்!'

"பொன்னம்மா! கீழத்தெரு கண்ணுச்சாமி அம்பலத்துக்கு நான் எழுதிக்கொடுத்திருக்கிற ஆயிரத்

தைந்நூறு ரூபாய் பிராமிசரி நோட்டை உன்னுடை அண்ணன் சின்னையா 'மேடோவர்' வாங்கியிருக்கிறது நூத்துக்கு நூறு நெசந்தான். வருகிற விதி இராத் தங்காதின்னு பேச்சுக்கு சொல்லுவாங்க. வாரகிழமை கச்சேரி திறக்கப் போறாங்களாம்!...நம்ப கையிலே என்ன இருக்கு...? நீ மனசை அலைமோத விடாதே, பொன்னம்மா!'' என்று தேறுதல் உரைத்தான் பிரமன்.

வெள்ளைப்பூண்டுக் குழம்பு என்றால் பிரமனுக்கு மிகவும் பிடித்தம்; கணவனின் இதயம் புரிந்த அவள் அவனுடைய ருசியையும் அறிந்திருந்ததால்தான் அப்படி அன்றைக்குக் குழம்பு வைத்திருந்தாள். பருப்புத் துகையல் வேறு தயாரித்திருந்தாள் பொன்னம்மா. ஆனால், வட்டிலின் முன் அமர்ந்த அவனோ சூன்ய வெளியிலே கண் பதித்திருந்தானே யொழிய சோற்றுத் திரளில் மனம் செலுத்தவில்லை. முதல் உருண்டை தொண்டைக்குள் சென்று விழுந்தது; விக்கல் எடுத்தது; தண்ணீர் கொடுத்தாள் அவள். ஆனால், அவனது மனமோ கடந்த காலத்தின் திரையை விலக்கிப் பார்த்தது:

மாங்குடி மண்ணில் எந்தப் பகுதியை எந்நேரம் தொட்டுக் கேட்டாலும், அது விடை சொல்லும் விதம் இவ்வாறுதான் இருக்கும்: 'பிரமன் ரொம்ம நல்ல ஆள்; மானத்துக்குக் கட்டுப்பட்ட புள்ளி; கஞ்சியாய்க் குடிப் பதைக் கரைத்துக் குடித்தாலும், கௌரவம் பாழ் பட ஒப்பாத மானி!'

இத்தகைய குணச்சித்ர அமைப்புப் பூண்ட பிரமனுடைய வாழ்க்கையில் சோதனை புகுந்தது. நூறு குழி புன்செய் அவனுக்குப் பிதுரார்ஜித சொத்து; அதில் வேர்க்கடலை போட்டிருந்தான். எழுபது குழி நஞ்சை

நிலமும் அவனது உடைமையாக இருந்தது; வயிற்றுப் பாட்டுக்கு வழி கிடைத்தது. ஒன்றியாக இருந்தவனுக்குக் கை கொடுத்து, கை கொடுத்த அவனுடைய இல்லக்கிழத்திக்கும் படியளந்து, பின்னர் அக்குடும்பத்தில் மூன்று உயிர்கள் பிழைக்க வேண்டிய நிலைமை உருவான நிலையிலும், மண் அவனை வஞ்சிக்கவில்லை.

இப்படிப்பட்ட இக்கட்டான கட்டத்தில் காலம் உருண்டது. அவன்வரை மண்ணுக்கு இதயம் இருந்தாலும், வானம் ஈவிரக்கமில்லாமல் போனது; மாரி பொய்த்தது. விளைச்சலில் மண் விழுந்தது; கடலைக் கொல்லையில் திடுதிப்பென்று 'பூச்சி' விழுந்தது; சாப்பாட்டுக்கு நெல் விலைக்கு வாங்க வேண்டியவன் ஆனான். தேவைப்பட்ட பணத்துக்கு வகை கூற, தேவைக்கு உதவவல்ல ஆலத்தம்பாடிக் காளைகள் இரண்டையும் புதுக்கோட்டைச் சந்தையில் விற்று விட்டான் அவன். தலைப்பிள்ளை ஆணாகப் பிறந்தது. கொள்ளைப்பாசம் வைத்திருந்தான். தாய்ப்பால் போதாமல், புட்டிப்பால் கொடுத்ததால், வயிற்றில் கட்டி வந்தது. கட்டியைக் கரைக்க வேண்டிப் பணத்தைக் கரைத்தான். அந்தப் பணம், அவனுக்குச் சொத்தாக இலங்கிய நூற்றெழுபது குழி—நிலம் தந்த பரிசு. நன்செய்யும் புன்செய்யும் பிறர் சொத்தாயின!

பட்ட காலிலே படும் என்பது பழமொழி. பிரமனும் அதை உய்த்துணர்ந்தான். தாலி ஏந்தியவள் இரண்டாம் தவணை கருத்தரித்தாள். ஆறாவது மாதத்தில் இரத்தப் பெருக்கு ஏற்பட்டு கருச்சிதைவு ஏற்பட்டது. பிறகு உடல் நலிந்தது; பொன்னம்மா பாயும் படுக்கையும் ஆனாள். மாங்குடியிலிருந்து புதுக்கோட்டைக்கு அவள் வண்டியில் கொண்டு செல்லப்பட்டாள். ஆபத்துக்கு உதவிய தெய்வமாக விளங்கியவன் கீழத்தெருக்

கண்ணுச்சாமி ஒருவனே! பன்னிரண்டு மாதங்கள் தொடர்ந்து நடந்த வைத்தியச் செலவுக்கு அவன் புரோ நோட்டு எழுதிக் கண்ணுச்சாமியிடமிருந்து பெற்ற கடன்தான் அந்த ஆயிரத்து ஐந்நூறு. ஆறு வருஷங்களுக்குள் வட்டியும் முதலும் கூட்டுப் புள்ளி சேர்த்த முழுத்தொகை இது. மூன்று வருஷங்களுக்கு ஒருமுறை காலாவதியாகும் தறுவாயில், கடன்பட்ட இடத்தில் நிலையை விளக்கி, ஐந்து ரூபாய் பணம் கொடுத்து 'செல்' வைத்துக் கொடுத்து வந்தான். இப்படி இரண்டு தரம் செய்தான். 'போன கிழமைகூட கண்ணுச்சாமி அம்பலம் வீட்டுக்கு வந்தபோது, இன்னம் ஒரு வருசத்துக்குள்ளே கடனைப் பூராவாய்த் தீர்த்துப்பிடுகிறதாய்ச் சொன்னேனே?...அவரும் சரின்னு சொன்னரே?...ம்!... எல்லாம் இந்தச் சின்னையாவின் வேலைதான். பணமும் தெய்வமும் இப்போதைக்கு அவன் சொல்படி ஆடுது!'

சின்னையா!

அவன் பொன்னம்மாளுக்குச் சொந்தத் தமையன்; பிரமனுடைய சொந்த மைத்துனன் அவன். 'கஞ்சித் தண்ணி ஊத்தற ஆளைப்பார்த்து என் தங்கச்சியைக் கட்டிக் கொடுத்துப்புட்டேன்!' என்ற அளவிலே அவன் ஒதுங்கி விடலானன்.

அண்டின ஆபத்துக்களைச் சமாளிக்க முடியாத போது, பிரமன் வேறு வழி புலப்படாமல் சின்னையாவை நாடிச் சென்றன். கண்ணீரைக் காட்டியுங்கூட சின்னையாவின் மனம் இறங்கவில்லை. 'ஊரிலே சொல்லி அழுதாலும் அழலாம்; உறவு முறையிலே சொல்லி அழுது புண்ணியப்படாது' என்பதன் உட்பொருளையும் அவன் உணர்ந்தான், தன்னுடையவை அல்ல என்று கருதிய இரண்டு உயிர்ப்பொருள்களான அவனது

மனைவியும் மகனும் மறு பிறப்புக் கொண்ட மகிழ்ச்சியில் அவனும் பழந்துயரங்களை மறக்கப் பழகினான். ஏர் பிடித்து மட்டிலுமே பழக்கப்பட்ட அவன் கரங்கள் கரணை, மட்டப்பலகை, நூல் கயிறு, ரசமட்டம், உளி போன்றவற்றைப் பிடிக்கத் தொடங்கின. கொத்து வேலையில் பயிற்சி பெற்று, தினக் கூலியாக நான்கு ரூபாய்ச் சம்பளம் பெறும் தகுதி அடைந்து, காலத்தின் கைப்பிடியிலிருந்து நாட்களைக் கழற்றி ஓட்டினான்.

'சொந்த மச்சான் சின்னையா. எனக்குக் குறைச்சல் பண்ணணுமின்னுதானே கண்ணுச்சாமி அம்பலத்தோட தங்கமான மனசை மாத்தி, அவருக்கு நான் எழுதிக் கொடுத்த நோட்டை மேடோவர் வாங்கி எம்மேலே வழக்குத் தொடுக்கணும்னு கங்கணம் கட்டியிருக்கான்!' என்று எண்ணிப் புழுங்கிய பிரமன் உள்ளத்திலே பழைய சம்பவம் ஒன்றை நினைப்பூட்டியது காலம்.

போன வருசம் காளியம்மன் காப்புக்கட்டுத் திருநாளன்று சின்னையாவுக்கும் மாணிக்கத்துக்கும் அடிபிடி சண்டை ஏற்பட்டது; மாணிக்கம் மாங்குடியைச் சார்ந்தவனே! 'தண்ணீர் இறைவை' காரணமாக ஏற்பட்ட மனப்பிளவு அவ்விருவர் கைகளையும் ஒன்று சேர்த்து வைத்து அவர்களின் கைகளிலே வேப்பங் கழிகளையும் கொடுத்து வேடிக்கை பார்த்தது. அதிகமாகக் காயம்பட்டவன் மாணிக்கம். வழக்குத் தொடுத்தான் அவன். இதிலிருந்து தப்ப எண்ணிய சின்னையா தன் பணம் ஆயிரத்தை மாணிக்கம் பறித்துக்கொண்டதாகப் பொய் வழக்கைப் பதிலுக்குப் பதிவுசெய்து சாட்சிக்குப் பிரமனை அழைத்தான். பொய்ச்சாட்சி சொல்ல என்னாலே இந்த ஜன்மத்திலே வர ஏலாது!' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டான் பிரமன்.

அந்த ஆத்திரத்தைத் தீர்த்துக்கிடத்தான் இப்போ இப்படி அநியாயம் செய்யத் துணிஞ்சிருக்கான் சின்னையா. ரங்கூன் பணத்தைக் கொண்டு உலகத்தையே அடக்கிப்பிடலாம்னு நினைச்சிருக்கானே!... தெய்வமே!'

உணவு கொள்ள வேண்டுமென்னும் நினைவைத் துறந்து எழுந்து விட்டான் பிரமன்.

**ஐ**யனார் கம்மாயிலிருந்து குளித்து முழுகித் திரும்பிக்கொண்டிருந்தாள் பொன்னம்மா.

"தங்கச்சீ!" என்று யாரோ அவளை அழைத்தார்கள். திரும்பிப் பார்த்தாள். கண்ணுச்சாமி அம்பலம் நின்று கொண்டிருந்தார்.

"யார், எங்க அண்ணாச்சியா?"

நடப்பவை எல்லாம் நல்லவையாகவே அமைய வேண்டுமென விழைவது மனித மனத்தின் நப்பாசை.

"தங்கச்சி!—உன்னைத் தங்கச்சின்னு அன்பாகக் கூப்பிட உன் கூடப்பிறந்த சின்னையாவாலே வந்த தீவினை தானம்மா இத்தனை சங்கடமும், என்னைத் தப்பாய் நினைச்சுக்கிட வேண்டாம்னு பிரமன் காதிலே போடம்மா. உன் மச்சான் முந்தி சாட்சிக்கு வராத ஆத்திரத்தாலே தான் உன் அண்ணன் இப்படி நடந்திருக்கிறார். என் தம்பி ரங்கூன் சீமையிலே உங்க அண்ணன் நடத்துற கூட்டுக்கடையிலே வேலைக்கு இருக்கிறான். உன் அண்ணனுக்கு நான் புரோநோட்டை மேடோவர் கொடுக்கலைன்னு சொல்லியிருந்தால், என் தம்பியை இக்கரைக்கு அனுப்பிச்சிருப்பான்! பிறந்த பாசத்தை அவர் மறந்திட்டார்; என்னாலே மறக்க முடியுமா, பொன்னம்மா! புதையல் கிடைச்சு பணம்

கொண்டாந்து என் கையிலே கொடுத்தாக்கூட என்னாலே ஏதும் செய்ய ஏலாது. இனி, உன் மச்சான் கடன் பட்ட பணம் அவ்வளவுக்கும் உன் அண்ணன் தான் சொந்தக்காரர்; எனக்குச் சேர வேண்டிய பணத்தைச் சின்னையா எப்போது கொடுக்கிறாரோ அப்பத்தான் மூச்சுக்காட்டாமல் வாங்கிக்கிடணும், என்ன செய்யட்டும்?...பொன்னம்மா, இப்போதைக்கு உடனடியா நடக்கக்கூடியது எல்லாம் உன் தமையனார் கருணையிலேதான் ஒண்டி ஒளிஞ்சிருக்குது; அவர் கிட்டே போய்ச் சொல்லு; நாளை பொழுது விடிஞ்சு தானால், நோட்டு கோர்ட்டுக்குப் போயிடும்!"

கண்ணுச்சாமி அம்பலம் புகைச்சல் இருமல் சுருள்களைப் புகைய விட்டபடி, விரித்த குடை நிழலில் அண்டி அடங்கித் திரும்பலானார்.

**வீ**ட்டின் வெளிப்புறத்து ஒட்டுத் திண்ணையின் மேற்கு விளிம்பை ஒட்டி செஞ்சுடர்ச் செல்வனின் ஒளி விழுந்திருந்தது.

'மச்சான் எருக்கலக் கோட்டையிலேயிருந்து வேலை விட்டு வந்திடுவாங்களே!' என்று எண்ணினாள் பொன் னம்மா. அடுத்த நாள் பொழுது நினைவுக்குள் விரிந்த போது, முள்மேல் இருப்பது போன்று உணர்ந்தாள்.

"இந்தப்பாரு பொன்னம்மா!...பணத்துக்கும் பாசத் துக்கும் ஏழாம் பொருத்தம்!...எனக்கு ஆபத்துச் சம்பத்துக்குக் கை கொடுக்காத உன் புருசனை நான் பழிக்குப் பழி வாங்கித்தான் தீருவேன். உனக்கு நாளை வர்ற குறைச்சல் என்னை ஒண்ணும் பாதிக்காது. இந்தாப் பார்த்தியா, உன் மச்சான் கையெழுத்துப் போட்டிருக்கிற நோட்டு. இது விடிஞ்சதும் பட்டுக்கோட் டைக் கச்சேரிக்குப் போயிடப் போவுது; நீ போ"

நாக்கில் நரம்பின்றிப் பேசிவிட்டான் சின்னையா. கண்களில் ஈரம் காட்டியதற்கு மேல் எதுவும் செய்யக் கூடவில்லை சின்னையாவின் மனைவியினால்! "அத்தே! அத்தே!" என்றாள் சிறுமி பூவம்மா.

போன சுவடு தெரியாமல் திரும்பி விட்டாள் பொன்னம்மா, 'மச்சானுக்கு இந்தச் சேதி தெரியப் படாது. அண்ணாச்சி வீட்டுக்குப் போனது தெரிஞ்சா கெட்டாப்பிலே கோவிச்சுக்கிடுவாங்க!' அடுப்பைப் பற்றவைக்கத் தணல் தேடினாள் அவள். நெஞ்சிலே கனன்ற செந்தழல்தான் நினைவில் எரிந்தது. கண்கள் புனல் கக்கின.

அப்போது, "அம்மா!" என்று கூப்பிட்ட வண்ணம் புத்தகப்பை குலுங்க ஓடிவந்து நின்ற முத்து தாயின் அரவணைப்பில் கட்டுண்டான். அன்னையின் கண்களில் அணைந்த விழி வெள்ளத்தைக் கண்டதும், சிறுவன் துடிதுடித்துப் போனான். "ஏம்மா நீ அழுகிறே?..." என்று கேட்டான். ஈரைந்து திங்கள் சுமந்து பெற்ற அருமை மகனின் கேள்விக்கு அவள் என்ன பதில் சொல்லுவாள்?

"அத்தான்!..." என்று ஒரு குரல் எதிரொலித்தது. சிறுமி பூவம்மா முத்துநகை வீசி நின்றாள்.

"பூவம்மா!"

தாய்மாமன் மகளைப் பெயரிட்டழைத்தான்.

"அம்மா, இங்கே பாரேன். என் பெண்டாட்டி..." சொல்லிக் குதித்தான் அவன்.

உடன் பிறந்தவன் வீடுதேடி வெந்த இதயத்தைச் சுமந்து திரும்புகையில் "அத்தே!...அத்தே!" என்று விளித்த பூவம்மாவின் அன்பழைப்பைக் காதில் ஏற்றுக்

கொள்ளாமலே திரும்பிவிட்ட காட்சி ஏடு விரிந்தது, பொன்னம்மாவின் மனத்தில்.

"முத்து! இனிமே நீ பூவம்மாவை மறந்துப்பிடு" என்று தழுதழுத்த தொனியில் முத்தாய்ப்பிட்டாள் பொன்னம்மா.

"அத்தை!" என்று ஓடிவந்து அவள் காலடியில் வீழ்ந்தாள் சிறுமி பூவம்மா.

"தம்பி, உன் தாய்மாமன்—இந்தப் பொண்ணோடை அப்பா—இனி நமக்குப் பகையாளி, உங்க அப்பாவை அவமானப் படுத்தி அலைக்கழிக்கப் போருரு!"

"கூடப் பொறந்த உங்க மனசையா இப்படிக் கலங்க வச்சாங்க எங்க அப்பா?...என்ன அத்தை நடந்திச்சு...?" என்று விவரம் கேட்டாள் சிறுமி.

"பூவம்மா, இதெல்லாம் ஒனக்குப் புரியாதம்மா, நீ போம்மா!" என்ருள் பொன்னம்மா.

"எல்லாம் புரியும்; சொல்லுங்க அத்தை!"

பொன்னம்மா விவரித்தாள்: "முத்துவோட அப்பா ஆயிரத்தைந்நூறு ருபாய்க்குக் கிட்டத்தட்ட கடன் வாங்கிஞங்க, நம்ப ஊர் கண்ணுச்சாமி அம்பலத்துக் கிட்டே. அதுக்கு முத்துவோட அப்பா அந்த ஆம்பளைக்கு நோட்டு எழுதிக் கொடுத்தாங்க. ஆஞ, உன் அப்பா ஒருவாட்டி என் வீட்டுக்காரரைப் பொய்ச்சாட்சி சொல்ல அழைச்சதுக்கு இவங்க போகலே—அந்த வன்மத்தை மனசிலே ஊறப்போட்டு வச்சிருந்து இப்ப முத்துவின் அப்பாவை, அதான் உன் மாமனைச் சந்தி சிரிக்க வைக்கப் போருராம் உன் அப்பா. கண்ணுச்சாமி நோட்டை உன் அப்பா வாங்கி இப்போ என் மச்சான் மேலே கேசு கொடுக்கப் போருராம்! விடிஞ்சதும்

நோட்டை எடுத்துக்கிட்டுப் பட்டுக்கோட்டைக்குப் புறப் பட்டுப்பிடுவாங்க உன்னுடை அப்பா!...''

அத்தையின் கண்களைத் துடைத்தாள் சிறுபெண், முத்துவும் பூவம்மாவும் அந்திநிலா மலர்ந்த வாசலில் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

அத்தருணம், "பொன்னம்மா!..." என்று கோபமாக இரைச்சல் போட்டுக்கொண்டே வந்தான் பிரமன், "ஏ பொன்னம்மா! உன்னை யாரு உன் அண்ணன் வீட்டுக் குப் போகச் சொன்னது?..." என்று கேட்டபடி அவளைக் கைநீட்டி அடிக்கப் போனான் அவன்.

ஓங்கிய கையைத் தாவிப் பிடித்துத் தடுத்த பிஞ்சுக்கை பூவம்மாவுக்குச் சொந்தம்.

"பொன்னம்மா, வார குரைச்சல் வந்துதான் தீரும். உன் அண்ணன் என்மேலே கேசு போட்டு, வாரண்டிலே பிடிக்கப் போறானும்; வீட்டை ஜப்தி பண்ணவும் போறானும்!...... கறுப்பண்ணசாமி கண் முழிச்சுக் கிட்டு இருந்தா இப்படிப்பட்ட பொல்லாப்பெல்லாம் நடக்குமா?... தெய்வத்தின் கண்களை சில மனிதர்கள் மூடிப்பிட்டுத்தானே ஊர் உலகத்திலே தீய விளையாட்டு விளையாடத் தொடங்கிருங்க?... சரி, சரி! நீ போய் வேலையைக் கவனி!" என்றான் பிரமன் கம்மிய குரலில்.

ஆடாப்பதுமையென அப்படியே நின்றாள் சிறுமி-பூவம்மா.

**ஊ**ர்ப் பிள்ளையார் கோயிலில் இராப்பூசனை நடந் தது. ஆலயமணி முழங்கியது.

பிரமனும் சிறுவன் முத்துவும் உணவு வட்டில்கள் முன் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

மேலக் குடியிருப்பில் வசிக்கும் கந்தப்பத்தேவர் ஓட்டமாக ஓடிவந்தார்.

கை விளக்கைப் பெரிது பண்ணிஞள் பொன்னம்மா.

"தம்பி பிரமா!...உனக்குச் சேதி தெரியாதா?... உன் மச்சான் சின்னேயா வீட்டிலே பெரிய ரகளேயாய்க் கிடக்குதே!—நீ கண்ணுச்சாமி அம்பலத்துக்கு எழுதிக் கொடுத்த புரோநோட்டை தான் வாங்கி உம் பேரிலே கேசு போடறதுக்காக பட்டுக்கோட்டைக்கு எடுத்துப் போக வேண்டி அந்த பிராமிசரிப் பத்திரத்தை பைக் குள்ளே எடுத்து வச்சிருந்தாராம்!...அதை அடையாளம் பார்த்து எடுத்து சின்னப்பொண்ணு பூவம்மா நெருப் பிலே போட்டுப்புட்டுதாம்!...பாவம், மகளே அடியே தண்டமா அடிச்சு நொறுக்குருராம் சின்னேயா!...விஃன விதைச்சவன் விஃன அறுக்கத்தானே வேணும்!... சின்னக் குழந்தையின்ஞலும் உங்க வீடுன்ஞ அதுக்குத் தான் எம்பிட்டு உசிர்!"

அப்படியே நிலேத்துவிட்டான் பிரமன். இச் சேதி கனவில் கேட்பதாகவே பட்டது. 'கறுப்பண்ணசாமி, என் மானத்தைப் பூவம்மா உருவத்திலே நீதான் வந்து காப்பாத்தி யிருக்கிறே!...கண்ணுச்சாமி அம்பலத்துக் கிட்டேயிருந்து மேடோவர் வாங்கின பணத்தை இனி சின்னேயா எங்கே கொடுக்கப் போருன்!...அந்த நல்ல மனுசருக்கு நான்பட்ட கடஃன எப்பாடுபட்டாலும் அடைச்சிப்பிடுகிறேன். நான் கையெழுத்துப் போட்டுக் கொடுத்த பத்திரம் தீயிலே எரிஞ்சா என்ன? இந்தப் பிறப்பிலே என் மனசு யாருக்கும் நம்பிக்கைத் துரோகம் செய்யவே செய்யாது!...பூவம்மாவோட குழந்தை மனசு வேடிக்கையாய்த்தான் இருக்குது!'

சாமிக்கண்ணு அம்பலம் மனம் திறந்து தன் மனைவியிடம் நிலைமையை விளக்கிய சம்பவத்தைப் பிரமன் நினைவு கூர்ந்தான்.

சிறுமி பூவம்மா துருவித்துருவிக் கேட்கப்போக, நடந்த விவரத்தை விஸ்தரித்ததை எண்ணமிட்டாள் பொன்னம்மா.

வட்டிலைத் தள்ளிவிட்டு, கையலம்பிக் கொண்ட சிறுவன் முத்து, "பூவம்மா!" என்று அலறிப் புடைத்துக்கொண்டு காற்ருய்ப் பறந்தான்!

"பூவம்மா! கண்ணே பூவம்மா!" என்று புலம்பிக் கொண்டிருந்தான் சின்னையா.

"கண்ணுமண்ணு தெரியாம நெற்றிப் பொட்டிலே அடிக்கலாமா சின்னையா?...நீ பெத்த மகளையே இப்படி ஆத்திரப்பட்டு உதைச்ச நீ, உன் சொந்த மச்சானையே சீரழிக்க வைக்க நினைச்சது பெரிய அதிசயமில்லை!..." என்று பட்டவர்த்தனமாகப் பேசினுர் நாட்டு வைத்தியர்.

சின்னையா விழிநீர் வழிய மகளையே வைத்த விழி எடுக்காமல் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் மனைவி ஆரவல்லி வாய்விட்டுச் செருமிக்கொண்டிருந்தாள்.

"என்னுடை நோட்டுக்கு உண்டான பணம் அத்தனையும் நீங்க முன்னுடி சொன்னதுபோல நீங்கதான் தர வேணும், சின்னையா!" என்று வீருப்புடன் எச்சரித்தார் கண்ணுச்சாமி அம்பலம்.

அனலிடை மெழுகாக உருகினுன் சின்னையா; மூடின கண்கள் திறக்காமல் கிடந்த அன்புப் புதல்வி மீது தலையைப் புதைத்துக் கதறினுன்; அவள் எழுந்தி

யிருந்த கரும்பலகையை எடுத்து வைத்துக் கண்ணீர் வடித்தான். அருகில் கிடந்த மருந்து வகைகள் அவனது தேம்பலை மிஞ்சச் செய்தன.

"கறுப்பண்ணசாமியே! நான் அடாபிடி செய்ய நெனைச்ச தப்புக்குச் சோதனையா இது?...கடவுளே! இனி நான் யாருக்கும் மனசாலேகூடத் தீங்கு செய்ய மாட்டேன். வைத்தியர் ஐயா, எம் மகளைக் காப்பாத்தித் தாங்க!...கண்ணுச்சாமி அம்பலம்! உங்களுக்குச் சேர வேண்டிய தொகையை, என் மச்சான் பிரமன் பட்ட கடனை நாளைக்கே எண்ணிக் கொடுத்துப்பிடறேன்!... பெற்றவங்களுக்காக இரக்கப்பட்டு என் மகளைக் காப் பாத்தும்படி பகவானை வேண்டுங்க!..." என்று மன்றாடி ஞன் சின்னையா.

அப்பொழுது, "பூவம்மா!" என்று கூவியவண்ணம் ஓடிவந்தான் சிறுவன் முத்து. ஹரிக்கேன் விளக்கொளி அவனது நேத்திரங்களில் நிறைந்து விட்டிருந்த கண்ணீரைக் காட்டின.

"பூவம்மா!...பூவம்மா!...கடவுளே, என் மாமன் மகளைக் காப்பாத்திக்கொடு, இல்லாபோனு நானும் கண்ணை மூடிப்பிடுவேன்!... எங்களுக்காகத்தான் பூவம்மா இப்படி அடிபட்டிருக்குது!...தெய்வமே பூவம் மாவைக் காப்பாத்து!"

முத்து விம்மினுன்.

பூவம்மா அப்போதுதான் கண்களைத் திறந்தாள். "அத்தான்!" என்று அன்புடன் கூவினுள்.

பிரமனும் அவன் மனைவி பொன்னம்மாவும் கண் களைத் துடைத்துக் கொண்டனர்.

"தங்கச்சி, எனக்கு நம்ப குலதெய்வம் நல்ல பாடம் படிச்சுக் கொடுத்திட்டுது. மச்சான் என்னை மன்னிச்சுப் பிடு, இனி உங்க சந்தோசந்தான் என் சந்தோசம்.

கண்ணுச்சாமி அம்பலத்துக்கு நீ கொடுக்க வேண்டிய கடனை நானே அடைச்சுப்பிடறேன்!'' என்று கூறினான் சின்னையா.

வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்துவந்த பூவம்மா தந்தையின் கைகளைப் பற்றிக்கொண்டு, "இப்பத்தான், சாமி என் அப்பாவுக்கு நல்லபுத்தி தந்திருக்காரு!'' என்று குதித்தாள்.

பெற்ற மணி வயிறு மகிழ்ந்தது.

"பூவம்மா!'' என்று விம்மினான் சின்னையா.

"சின்னையா மச்சான், இன்னிக்கு உள்ளதுபோல நீங்க என்னிக்கும் எங்க பேரிலே பாசம் வச்சிருந்தாப் போதும்; காசு பணம் வேணும்!...நான்பட்ட கடனை நான் அடைச்சுப்பிடுவேன், பிராமிசரிப் பத்திரம் எரிஞ்சா என்ன?...நான் எரியலையே!...சரி, நாங்க போயிட்டுவாரோம்!...மருமகப் பொண்ணே, நாங்க போயிட்டு வாரோம்மா!...''

ஒரு விநாடி பூவம்மாவுக்கு வெட்கம் வந்துவிட்டது. "மாமா! இருங்க போகலாம்!'' என்று உள்ளே சென்று திரும்பினாள் சிறுமி. "ஐயோவ்!'' என்று விளித்தவாறு கண்ணுச்சாமி அம்பலத்தை அண்டினாள் பூவம்மா. "ஐயா, இந்தாங்க உங்க நோட்டு!'' என்று கூறி, கடன் பத்திரத்தை அவரிடம் நீட்டினாள். சிரிப்பு விளையாடியது பூவம்மாவின் முகத்தில்.

கண்ணுச்சாமி அம்பலம் புன்னகையை விடாமல், கையிலிருந்த புரோநோட்டைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்தெறிந்தார்; "பிரமன், எனக்கும் புத்தி தெளிஞ்சிடுச்சு; உன் மனசை அறிஞ்சவன் நான். அப்பாலே எதுக்கு இந்த நோட்டு?'' என்றார் அவர்.

உணர்ச்சி வசப்பட்டு நின்றான் பிரமன்.